இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 229 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 17 – சனிக்கிழமை 30 மார்ச் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 229 : Thiruvalluvar Year - 2055 - Panguni 17 - Saturday 30 March 2024 - Chennai 16 Pages ₹ 5.00




### பா.ம.க. கொள்கைக்கு முற்றிலும் எதிரான கட்சி பா.ஜ.க.! சமூகநீதி பேசும் மருத்துவர் ராமதாசு பா.ஜ.க.வுடன் கைகோர்த்த மர்மம் என்ன?

# சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த ராமதாசுக்கு மோடி கேரண்டி கொடுத்தாரா?

## தருமபுரி மாவட்டம் - தடங்கம் பிரச்சாரக் கூட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.3.2024) தருமபுரி மாவட்டம், தடங்கம்பகுதியில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் தர்மபுரி வேட்பாளர் ஆ.மணி அவர்களையும், கிருஷ்ணகிரி வேட்பாளர் கோபிநாத் அவர்களையும் அறிமுகப்படுத்தி இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அர.சக்கரபாணி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் செல்வகணபதி, தடங்கம் சுப்பிரமணி, பிரகாஷ், பழனியப்பன், மதியழகன், நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில் குமார், சட்டமன்ற உறுப்பினர் இராமசந்திரன், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் தங்கபாலு, ஒருங்கிணைந்த தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

தருமபுரி,மார்ச்.30–

**சமூகநீதி பேசும் மருத்துவர் ராமதாஸ் அவர்கள், சமூகநீதிக்கு எதிரான பா.ஜ.க.வுடன் கைகோர்த்த மர்மம் என்ன? எனவும், சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த ராமதாஸ் அவர்களுக்கு மோடி கேரண்டி கொடுத்தாரா? என்றும், பா.ம.க. வலியுறுத்தும் ஒரு கொள்கைக்குக்கூட ஆதரவு தெரிவிக்காத, அதற்கு முற்றிலும் நேர் எதிரான கொள்கை கொண்டதுதான் பா.ஜ.க! எனவும் தருமபுரி மாவட்டம் தடங்கத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய – கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

நேற்று (29–03–2024) தருமபுரி மாவட்டம், தடங்கம் பகுதியில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பரப்புரைப் பொதுக் கூட்டத்தில், தருமபுரி மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் ஆ.மணி அவர்களையும், கிருஷ்ணகிரி மக்களவைத் தொகுதி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் கோபிநாத் அவர்களையும் அறிமுகப்படுத்தி, இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு எழுச்சியுரையாற்றினார்.

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

அவ்வைக்கு நெல்லிக்கனியைக் கொடுத்த வள்ளல் அதியமான் வாழ்ந்த இயற்கை எழில் சூழ்ந்த தகடூர் என்று வரலாற்றில் போற்றப்படும் தருமபுரி மண்ணிற்கு வந்திருக்கிறேன். அதேபோல், சையத் பாட்சா கோட்டை என்பதை அமைத்து மாபெரும் போர் நடைபெற்ற இடம் கிருஷ்ணகிரி! இதுவும் போர்க்களம்தான்! ஜனநாயகப் போர்க்களம்! பாசிச மதவெறி கொண்ட பா.ஜ.க., இந்தியா என்ற அழகிய நாட்டை அழித்துவிடாமல் தடுக்க – ஜனநாயகச் சக்திகளும் – இந்திய நாட்டு மக்களும் – களம் கண்டுள்ள ஜனநாயகப் போர்க்களம்!

நாம் நடத்த இருக்கும் இரண்டாவது விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்குக் கட்டியம்கூறும், இந்த பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்றிருக்கும் உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

### ஆற்றல்மிகு செயல்வீரரின் குரல் நாடாளுமன்றத்தில் ஒலிக்க வேண்டும்!

இந்த எழுச்சிமிகு தேர்தல் பரப்புரைக் கூட்டத்தை மாநாடுபோல், ஏற்பாடு செய்திருக்கும் அமைச்சர் பெருமக்கள் – 'வேங்கையின் மைந்தன்' என்று என்னால் பாசத்தோடு அழைக்கப்படும், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களுக்கும், ஆற்றல்மிகு அமைச்சர் செயல்வீரர் சக்கரபாணி அவர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கும், கழக நிர்வாகிகளுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி!

தருமபுரி தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிடும் ஆ.மணி அவர்கள் கழகத்தின் ஆற்றல்மிகு தொண்டர்! மக்களுக்காக வாதாடும் வழக்கறிஞர்! மாவட்டத் துணைச்செயலாளராக இருக்கும் அவரது குரல் நாடாளுமன்றத்தில் ஒலிக்க உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்!

கிருஷ்ணகிரி காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடும் கோபிநாத் அவர்கள், அவரே சொன்னது போல, 2001, 2006, 2011 ஆகிய மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். மக்கள் செல்வாக்கைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டவர். அவரையும் உங்கள் நன்மைக்காக நாடாளுமன்றத்திற்கு அனுப்பகை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

நடக்க இருப்பது, இந்திய வரலாற்றிலேயே மிகமிக முக்கியமான தேர்தல்! இந்தத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் – ஜனநாயகத்திற்கும் – தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்கும் – இளைய தலைமுறையினருக்கும் – எதிர்கால சந்ததியினருக்கும் – அளிக்கும் வாக்கு! இந்தியாவில் சமூகநீதி நீடிக்க வேண்டும் என்றால், ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால், வேற்றுமையில் ஒற்றுமை தொடர வேண்டும் என்றால், எங்கும் சமத்துவம் தழைக்க வேண்டும் என்றால், அரசியல்சட்டம் காப்பாற்றப்பட வேண்டும் என்றால், நம் நாட்டின் பன்முகத்தன்மையைப் பறைசாற்றும் இந்திய தேசியக் கொடி கம்பீரமாக தில்லி செங்கோட்டையில் பறக்க வேண்டும் என்றால், முதலில் பா.ஜ.க. ஆட்சியை வீட்டிற்கு அனுப்ப வேண்டும்! இந்தியா கூட்டணியை ஆட்சியில் அமர்த்த வேண்டும்!

### சமூக நீதிக்கு சவக்குழி தோண்டும் பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது!

பா.ஜ.க. என்பது சமூகநீதிக்குச் சவக்குழி தோண்டும் கட்சி! சமத்துவம் என்றால், கிலோ என்ன விலை என்று கேட்கும் கட்சி! நம்முடைய நாட்டை மத – இன – சாதி – மொழி அடிப்படையில் பிளவுபடுத்திக் குளிர்காய வேண்டும் என்று நினைக்கும் கட்சிதான் பா.ஜ.க.! அப்படிப்பட்ட, பா.ஜ.க.வை மீண்டும் ஆட்சிக்கு வரவிடாமல் தடுக்கும் கடமை, சமூகநீதி மண்ணான தமிழ்நாட்டுக்குத்தான் அதிகம் உண்டு!

ஆனால், நான் பெரிதும் மதிக்கும் சமூகநீதி பேசும் அய்யா டாக்டர் ராமதாஸ் அவர்கள் எங்கே இருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியும்! சமூகநீதிக்கு எதிரான பா.ஜ.க.வுடன் – சமூகநீதி பேசும் அய்யா ராமதாஸ் அவர்கள் எப்படி கூட்டணி வைத்தார் என்பது, ஏதோ தங்கமலை இரகசியமெல்லாம் கிடையாது இந்த தருமபுரி மக்களுக்கு நன்றாகவே தெரியும்! அவர் ஏன் மனதில்லாமல் அங்குச் சென்றிருக்கிறார் என்று உங்களுக்கு மட்டுமல்ல – அவர்கள் கட்சியினருக்கும் தெளிவாகத் தெரியும்! இதற்குமேல் நான் விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை!

ஒன்றிய அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும். ஒட்டுமொத்தமாகப் பிற்படுத்தப்பட்ட – மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின – பழங்குடியின மக்களின் சமூகநீதியைக் காப்பாற்றும் அரசை ஒன்றியத்தில் அமைக்க வேண்டும் என்று இந்தியா கூட்டணியை வலுவாக அமைத்திருக்கிறோம். அந்த வகையில், இந்தியா கூட்டணி, மக்களின் நலனுக்காக – மக்களுக்காகவே பாடுபடும் கட்சிகளின் கூட்டணியாக கம்பீரமாக உங்களுக்காகக் களத்தில் போராடுகிறோம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அடிக்கடி கூறுவார்... "எனக்கென்று சாதிப்பெருமை கிடையாது. மிகமிக பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவன். எனக்கென்று குடும்பப் பாரம்பரியம் கிடையாது. ராவ் பகதூர், திவான் பகதூர் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று கூறும் பெருமை எனக்கில்லை. கல்லூரிப் பட்டம் எனக்கில்லை. நான் புகுந்ததெல்லாம் ஈரோட்டுப் பள்ளியும் – காஞ்சிக் கல்லூரியும்தான்! நான் பட்டம் பெறாதவன் என்றாலும், பகுத்தறிவுப் பணியாளன்! சாதிப்பெருமை இல்லை என்றாலும் அண்ணாவின் நீதியே என் சாதியென மதிப்பவன் நான் என்று முத்தமிழறிஞர் கலைஞர் கூறுவார்.

### பிற்படுத்தப்பட்டோர் – ஆதிதிராவிடர் நலத்துறை உருவாக்கியவர் கலைஞர்!

தன்னை ஒரு சாமானியன் என்று அறிவித்துக் கொண்டு, சாமானிய மக்களுக்காக ஆட்சி நடத்தினார் தலைவர் கலைஞர். 1969–இல் முதன்முதலாக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை – ஆதிதிராவிடர் நலத்துறை என்று அந்த மக்கள் பயனடையத் தனித்தனியாகத் துறையை உருவாக்கியவர் தலைவர் கலைஞர்தான். பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கான சட்டநாதன் ஆணையத்தை அமைத்தார். அந்த ஆணையத்தின் பரிந்துரைப்படி, சமூகநீதிக்குப் புதிய பாதை அமைத்தார். கொங்கு வேளாள கவுண்டர் சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தார். கல்வி, வேலைவாய்ப்புகளில் பல்வேறு வாய்ப்புகள் கிடைத்து,

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்



**நடக்க இருப்பது, இந்திய வரலாற்றிலேயே மிகமிக முக்கியமான தேர்தல்! இந்தத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் – ஜனநாயகத்திற்கும் – தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்கும் – இளைய தலைமுறையினருக்கும் – எதிர்கால சந்ததியினருக்கும் – அளிக்கும் வாக்கு! இந்தியாவில் சமூகநீதி நீடிக்க வேண்டும் என்றால், ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால், வேற்றுமையில் ஒற்றுமை தொடர வேண்டும் என்றால், எங்கும் சமத்துவம் தழைக்க வேண்டும் என்றால், அரசியல்சட்டம் காப்பாற்றப்பட வேண்டும் என்றால், நம் நாட்டின் பன்முகத்தன்மையைப் பறைசாற்றும் இந்திய தேசியக் கொடி கம்பீரமாக தில்லி செங்கோட்டையில் பறக்க வேண்டும் என்றால், முதலில் பா.ஜ.க. ஆட்சியை வீட்டிற்கு அனுப்ப வேண்டும்! இந்தியா கூட்டணியை ஆட்சியில் அமர்த்த வேண்டும்!**

# மதவெறி கொண்ட பா.ஜ.க. இந்தியா என்ற அழகிய நாட்டை அழித்து விடாமல் தடுக்க நடைபெறும் ஜனநாயகப் போர்க்களம்!

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 30-03-2024

# ‘நிலக்கரி’ ஜிண்டாலும் ‘சுரங்கம்’ ஜனார்த்தனனும்

**ஊழலை ஒழிக்கப் போகிறேன், ஊழலை ஒழிக்கப் போகிறேன் என்று பிதற்றிக் கொண்டிருக்கும் பிரதமர் மோடி அவர்கள், இரண்டு பேருக்கு பா.ஜ.க.வில் தொகுதி ஒதுக்கி இருக்கிறார். அவரது ஊழல் ஒழிப்பு என்பது பா.ஜ.க.வுக்குள் அவர்களைச் சேர்த்துவிட்டால் முடிவுக்கு வந்துவிடும் என்பதற்கான உதாரணம் ஆகும்.**

**“ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்” என்பார்கள். பா.ஜ.க. பெரிய பானை என்பதால் இரண்டு சோறு பதம். மிகப்பெரிய மலை முழுங்கிகள் என்ற அடிப்படையில் நடவடிக்கைகளுக்கு உள்ளாகி விசாரணை அமைப்புகளால் வழக்குத் தொடுத்தும் - கைது செய்யப்பட்டும் இருந்தவர்களை கூச்சமில்லாமல் பா.ஜ.க.வில் இணைத்துக் கொண்டுதான் ஊழலை ஒழிக்கப் போகிறார் மோடி. இதை இந்த நாட்டு மக்கள் நம்பத்தான் வேண்டும்.**

இப்போது விசாரணை அமைப்புகளை வைத்துக் கொண்டு தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதும், முதலமைச்சர் என்றுகூட பார்க்காமல் அரவிந்த் கெஜ்ரிவாலை வேட்டையாடு கிறார்களே, இவர்களால் இதற்கு முன்னால் வேட்டையாடப் பட்டவர்களை வெட்கமில்லாமல் சேர்த்துக் கொண்டு தொகுதியும் ஒதுக்குகிறார்களே, இவர்கள்தான் ஊழலை ஒழிக்கப் போகிறார்களா?

ஜிண்டால் பற்றி அறிமுகம் தேவையில்லை. இந்தியாவின் புகழ் பெற்ற தொழில் நிறுவனங்களில் ஒன்று ஜிண்டால். அதன் அதிபர்தான் நவீன் ஜிண்டால். இவர் காங்கிரஸ் கட்சியில் தான் இருந்தார். அவரை பா.ஜ.க.வுக்கு இழுத்துக் கொண்டு அவருக்கு தொகுதியும் ஒதுக்கி இருக்கிறார்கள். 2004 ஆம் ஆண்டு அரியானா மாநிலம் குருஷேத்ரா தொகுதியில் இருந்து காங்கிரஸ் கட்சி எம்.பி.யாக வென்றவர் நவீன் ஜிண்டால். 2009 தேர்தலிலும் அவர் வென்றார். 2014 தேர்தலில் தோல்வி அடைந்தார். இவர் திடீரென்று இந்த மாதம் பா.ஜ.க.வில் சேர்ந்துவிட்டார். ‘பா.ஜ.க.வுக்கு பெரிய வாஷிங் மிஷின் தேவைப்பட்டதால் நவீன் தேவைப்படலாம்’ என்று கிண்டலடித்துள்ளார் ஜெயராம் ரமேஷ். நவீன் ஜிண்டாலை மீண்டும் அவரது வழக்கமான தொகுதியான குருஷேத்ராவில் நிறுத்தி உள்ளது பா.ஜ.க.

ஜார்க்கண்ட் நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடுகள் தொடர்பான வழக்கில், ஜிண்டால் மத்திய புலனாய்வுப் பிரிவால் விசாரிக்கப்பட்டு வந்தார். 2019 ஆம் ஆண்டு நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீடு முறைகேடு வழக்கில் நவீன் ஜிண்டால் மற்றும் நான்கு பேர் மீது ஜூலை 25 ஆம் தேதி புது தில்லி நீதிமன்றம் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது. ஐ.பி.சி. பிரிவுகள் 120-பி (குற்றச் சதி) மற்றும் 420 (ஏமாற்றுதல்) ஆகியவற்றின் கீழ் சிறப்பு நீதிபதி பாரத் பராஷர் குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். நிலக்கரியின் இறுதிப் பயன்பாடு தொடர்பான உண்மைகளை ஸ்க்ரீனிங் கமிட்டியிடம் தவறாகக் காட்டி, குற்றம் சாட்டப்பட்டவர்கள் அந்த ஒப்பந்தத்தை கையகப்படுத்தியதாக சி.பி.ஐ. குற்றம் சாட்டியது. குற்றம் சாட்டப்பட்டவர் நிலக்கரி அமைச்சகத்தை ஏமாற்றிவிட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டார்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களை பா.ஜனதா தனது கட்சியில் இணைத்துக் கொள்ளும்போது அவர்கள் மீதான குற்றச்சாட்டு குறித்து வாய் திறப்பதில்லை அல்லவா? அப்படித்தான் இவரும் சுத்தமாகி விட்டார்.

‘இரும்புத் தாது’ மாஃபியா என்று அழைக்கப்பட்டவர் ஜனார்த்தன ரெட்டி. பா.ஜ.க.வின் முக்கியத் தலைவர்களில் ஒருவராக இருந்த - மறைந்த சுஷ்மா சுவராஜ்தான் ரெட்டி சகோதரர்களுக்கு காப்பாளர். சுஷ்மா, பெல்லாரி தொகுதியில் போட்டியிட்டபோது முழுமையாக தேர்தல் பணியாற்றியவர்கள் இவர்கள். கர்நாடகாவில் பா.ஜ.க. காலூன்ற அடித்தளம் இட்டவர்களில் முக்கியமானவர்கள் ஜனார்த்தனன். 2006 ஆம் ஆண்டு பி.ஜே.பி. - ஜே.டி.எஸ். கூட்டணி ஆட்சி அமைந்தபோது தனது ஆதரவாளரான பி.ஸ்ரீராமுலுவை அமைச்சர் ஆக்கும் அளவுக்கு இவர்களுக்கு செல்வாக்கு வளர்ந்தது. ஜனார்த்தனன் ரெட்டிக்கு மேலவை உறுப்பினர் பதவியை வழங்கியது பா.ஜ.க.

பின்னர் கூட்டணி இல்லாமல், தனித்து பா.ஜ.க. ஆட்சி அமைக்கவும் ரெட்டி சகோதரர்களே பெரும் பங்கு ஆற்றினார்கள். இதற்கான பரிசாக எடியூரப்பா அமைச்சரவையில் சுற்றுலா மற்றும் உள்ளாட்சி அமைச்சராக ஆனார் ஜனார்த்தனன் ரெட்டி. பெல்லாரி மாவட்டத்தின் பொறுப்பாளராகவும் ஆக்கினார்கள். 2022 ஆம் ஆண்டு பா.ஜ.க.வில் இருந்து வெளியேறி ‘கல்யாண ராஜ்ய பிரகதி பஷா’ என்ற புதிய அரசியல் கட்சியை ரெட்டி தொடங்கினார். கடந்த ஆண்டு நடந்த சட்டசபைத் தேர்தலில் கங்காவதி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வென்றார். இப்போது அந்தக் கட்சியைக் கலைத்துவிட்டு பா.ஜ.க.வில் இணைந்து விட்டார்.

கர்நாடகாவில் பா.ஜ.க. ஆட்சியில் இருந்த 2008-2013 காலக்கட்டத்தில் சட்டவிரோதச் சுரங்கம் தொடர்பாக சி.பி.ஐ. தொடுத்த வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர் தான் ஜனார்த்தன் ரெட்டி. தன்னை அமித்ஷா தான் கட்சியில் இணையச் சொன்னதாக ரெட்டி சொல்லி இருக்கிறார்.

‘2006 முதல் 2011 வரை கர்நாடகாவில் இருந்து 12,228 கோடி ரூபாய்க்கு இரும்புத் தாதுவை சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்தார்கள்’ என்ற குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. 2011-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சி.பி.ஐ.யால் கைது செய்யப்பட்டார். கிட்டத்தட்ட ஓராண்டு காலம் சிறையில் இருந்த ரெட்டி, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் பல்லாரி பகுதிக்குள் செல்ல தடையும் விதிக்கப்பட்டது. 2023 கர்நாடக சட்டமன்றத் தேர்தலுக்காக ரெட்டி தாக்கல் செய்த தேர்தல் பிரமாண பத்திரத்தின் படி, அவர் மீது 20 கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. 20 வழக்குகளில், ஒன்பது வழக்குகள் சட்டவிரோத சுரங்க ஊழல் தொடர்பாக சி.பி.ஐ.-யால் விசாரிக்கப்படுகின்றன. கடந்த ஆண்டு கூட இவர் மீதான வழக்கில் வெளிநாடுகளுக்குத் தகவல்கள் கேட்டு கடிதம் அனுப்பியது சி.பி.ஐ. இப்படிப்பட்டவர் பா.ஜ.க.வில் இணைய முழுத் தகுதி படைத்தவர்தான்.

**‘பா.ஜ.க.வில் நான் இணைந்தது, தாயுடன் வந்து சேர்ந்ததைப் போல’ என்று சொல்லி இருக்கிறார் ஜனார்த்தனன் ரெட்டி. ஊழல், ஊழலோடு தானே சேரும்!**





‘இந்தியா’ கூட்டணியின் சார்பில் கோயம்புத்தூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் கணபதி ராஜ்குமாரை ஆதரித்து, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். கோயம்புத்தூர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள மலுமிச்சம்பட்டி பகுதியில் கூடி நின்ற மக்களைச் சந்தித்து,உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு அளிக்கப் பிரச்சாரம் செய்தார்.

# பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு பெண்கள், குழந்தைகளுக்கு பாதுகாப்பில்லை!

## கோவையில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி பேச்சு!

கோவை, மார்ச் 30-

தமிழ்நாட்டில் ஏப்ரல் 19ம் தேதி நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலைத் தேர்தலையொட்டி, இந்தியா கூட்டணியின் சார்பில் கோயம்புத்தூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் கணபதி ராஜ்குமார் ஆதரித்து, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். கோயம்புத்தூர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள துடியலூர் சந்தை சந்திப்பு பகுதியில் கூடி நின்ற மக்களைச் சந்தித்து, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு அளிக்கப் பிரச்சாரம் செய்தார்.

இந்த தொகுதியில் நாம் தெளிவாக வாக்களிக்க வேண்டும், இல்லையென்றால் அது இந்தியாவிற்கே பெரிய ஆபத்தாக அமையும், தனது சொந்த தொகுதியில் போட்டியிட்டால் தோல்வி அடைந்து விடுவோம் என்று வானதி ஸ்ரீனிவாசன் மூலம் வெற்றி பெற்று விடாமல் என்று கோவையில் நிற்கிறார் அண்ணாமலை, எங்கு நின்றாலும் 3வது இடம் தான். மக்களுக்கு இடையே பொய் செய்திகளைப் பரப்புவதற்காகத் தனிக் குழுவினை வைத்துச் செயல்பட்டு வருகிறார்கள். மக்களிடம் பொய் செய்தி மூலம் பிரிவினை ஏற்படுத்திட வேண்டும் அன்று செயல்படுகின்றனர்.

20,000 புத்தகம் இதுவரை படித்துள்ளாராம், 5 வயதில் இருந்து நாள் ஒன்று 2 புத்தகம் படித்தாலும் கூட 20000 ஆயிரம் புத்தகம் படித்து இருக்க முடியாது.

### அண்ணாமலைக்கு எது எடுத்தாலும் பொய்தான்!

அண்ணாமலைக்கு எது எடுத்தாலும் பொய் தான். பா.ஜ.க.வினர் பெரிய சலவை இயந்திரம் வைத்துள்ளனர், ஊழல் செய்த நபர் பா.ஜ.க.வில் சேர்ந்தாலும் உடனே சலவை செய்து அவரை வெள்ளையாக மாற்றி விடுவார்கள், ஆனால் அவர்கள் செய்யும் ஊழல் நாம் எடுத்துரைத்தால் உடனே அவர்கள் கைது, அல்லது வருமான வரித்துறை, அமலாக்கத்துறை சோதனை செய்வர்.

அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணி இல்லை, என்று கூறும் எடப்பாடி, எங்காவது மோடி அரசு பற்றிப் பேசுகிறாரா, இல்லை. இது சட்டமன்ற தேர்தல் என்று நினைத்து நாம் அரசைப் பற்றி எடப்பாடி பழனிசாமி குறை கூறி வருகிறார். சேலத்தில் 2 விவசாயிகள் நிலத்தை பா.ஜ.க. வினர் அபகரிக்க நினைத்தனர், அவர்கள் நிலத்தைத் தரவில்லை என்றதும் அவர்கள் மீது அமலாக்கத் துறை ஏவி சோதனை செய்தனர்.

### பா.ஜ.க.தான் அனைவருக்கும் எதிரான கட்சி!

தி.மு.க.வை கோயிலுக்கும், இந்து மதத்திற்கும், பெரும்பான்மை மக்களுக்கும் எதிரானவர்கள் என்று சொல்லுகிறது பா.ஜ.க., பா.ஜ.க. தான் அனைவருக்கும் எதிரான கட்சி. தி.மு.க.வின் கலைஞர் மகளிர் உரிமை திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன் போன்ற திட்டங்களில் பெரும்பான்மை மக்கள் தான் பயன்பெற்று வருகின்றனர். 1,331 கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்திய ஆட்சி, திராவிட மாடல் ஆட்சி, சிறு கோயில் வழங்கப்படும் மானியத்தை 1 லட்சத்திலிருந்து 2 லட்சம் உயர்த்தி வழங்கியவர் நமது முதலமைச்சர்.

யாருக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கிறது இல்லை என்பது முக்கியம் இல்லை, அவர்களுக்கு யார் நம்பிக்கையாக இருக்கிறார் என்பது தான் முக்கியம்.

770 கோடி ஒதுக்கீடு செய்து, இந்த பகுதியின் தண்ணீர் தட்டுப்பாட்டைச் சரி செய்து வரும் தி.மு.க. ஆட்சி. நாம் தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்றால் நமது வேட்பாளர் கணபதி ராஜ்குமார் அவர்களை உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என பிரச்சாரத்தின் போது கனிமொழி கருணாநிதி தெரிவித்தார்.



# நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமனுக்குப் பணம் இல்லாததால் நிற்கவில்லையாம்!

# தேர்தல் பத்திரம் மூலம் பா.ஜ.க. வாங்கிய ரூ. 12 ஆயிரம் கோடி எங்கே?

## தடங்கத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... - முதல் பக்கத் தொடர்ச்சி




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.3.2024) தருமபுரி மாவட்டம், தடங்கம்பகுதியில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் தர்மபுரி வேட்பாளர் ஆ.மணி அவர்களையும், கிருஷ்ணகிரி வேட்பாளர் கோபிநாத் அவர்களையும் அறிமுகப்படுத்தி இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சக்கரபாணி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் செல்வகணபதி, தடங்கம் சுப்பிரமணி, பிரகாஷ், பழனியப்பன், மதியழகன், நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில் குமார், சட்டமன்ற உறுப்பினர் இராமசந்திரன், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் தங்கபாலு, ஒருங்கிணைந்த தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

கொங்கு வேளாள கவுண்டர் சமூகத்தினர் இன்று முன்னேறி இருப்பதற்கு இதுதான் அடிப்படைக் காரணம்!

மற்றொன்றையும் பெருமையுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு 18 விழுக்காடும் – பழங்குடியினருக்கு 1 விழுக்காடும் – இடஒதுக்கீடு வழங்கி, அவர்களின் முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக இருந்தவர் தலைவர் கலைஞர்தான்!

### வன்னியர் சங்கத்தினர் மீது போடப்பட்ட வழக்குகளை திரும்பப் பெற்றார் கலைஞர்!

நம்முடைய திராவிட மாடல் அரசுதான், புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாளைச் சமத்துவ நாளாக அறிவித்தோம்! ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஆணையத்தைப் புதுப்பித்தோம். பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்காக ஒதுக்கப்படும் நிதி, வளர்ச்சித் திட்டங்களுக்கு முறையாகச் செலவழிக்கப்படுவதைக் கண்காணிக்க தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல்திட்டச் சட்டம் கொண்டுவந்ததும் தி.மு.க. அரசுதான். இப்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களைக் கல்வி, பொருளாதார மற்றும் சமூக நிலைகளில் உயர்த்த அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு கவனத்துடன் மேற்கொண்டு வருகிறது.

வன்னியர் சமுதாய மக்கள் 1987–ஆம் ஆண்டை மறந்திருக்க மாட்டார்கள்! தனி இடஒதுக்கீடு கேட்டுக் கடுமையான போராட்டம் நடந்த ஆண்டு அது! ஆனால், அ.தி.மு.க. ஆட்சியில் தனி இடஒதுக்கீடு கொடுக்கவில்லை! தலைவர் கலைஞர் 1989–ஆம் ஆண்டு முதலமைச்சரானதும், ஆட்சிக்கு வந்த 43–வது நாளில் வன்னியர் சமூகம் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு 20 விழுக்காடு இடஒதுக்கீட்டை கொடுத்தார். இந்த முப்பதாண்டு காலத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்த குடும்பங்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிய இடஒதுக்கீடுதான் அது!

வன்னியர் சங்கத்தினர் மேல் போடப்பட்டிருந்த வழக்குகளைத் திரும்பப் பெற்றார் தலைவர் கலைஞர்! 1987–ஆம் ஆண்டு போராட்டத்தில் உயிரிழந்த 21 பேர் குடும்பத்திற்கு, மூன்று இலட்சம் ரூபாய் கருணைத் தொகை கொடுத்தவர் தலைவர் கலைஞர். இன்றைக்கும் அந்தக் குடும்பங்கள் மாதம் 3 ஆயிரம் ரூபாய் பென்ஷன் பெறுகிறார்கள்.

சமூகநீதித் தியாகிகளான அவர்களைப் போற்றி மணிமண்டபம் கட்டப்படும் என்று விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் நான் வாக்குறுதி கொடுத்தேன். இன்றைக்கு விழுப்புரத்தில் அந்த மணிமண்டபம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது! விரைவில் திறக்கப்பட இருக்கிறது. சொன்னதைச் செய்த பெருமையுடன் நான் உங்கள் முன்னால் வாக்கு கேட்டு நிற்கிறேன்.

இந்த நேரத்தில் சில பேர் மறந்துபோன, மறைக்க நினைக்கும் வரலாற்று நிகழ்ச்சிகளை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

### அய்யா ராமதாஸ் அவர்களே அன்று பேசியது மறந்து போச்சா?

கோனேரிக்குப்பத்தில் நடந்த வன்னியர் சங்க வெள்ளிவிழா மாநாட்டிற்கு, தலைவர் கலைஞரை அழைத்தார் அய்யா ராமதாஸ் அவர்கள்! அய்யா ராமதாஸ் அவர்களே அன்றைக்கு மேடையில் என்ன பாராட்டிப் பேசினீர்கள் என்று ஞாபகம் இருக்கிறதா? நீங்கள் மறந்தாலும் வன்னிய சமுதாய மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்! 1987–ஆம் ஆண்டுமுதல் இடஒதுக்கீட்டிற்காக நாங்கள் போராடினோம், 21 உயிர்களைப் பலி கொடுத்ததைத் தவிர ஒன்றும் நடக்கவில்லை. அன்றைக்கு இருந்த அ.தி.மு.க. முதலமைச்சரைப் பார்க்கவே முடியவில்லை! ஆனால் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தார். வந்தவுடன் என்னை அழைத்து இடஒதுக்கீடு தந்த கலைஞர் அவர்களே! உங்களுக்கு நன்றி! இந்த சமுதாயம் என்றென்றும் உங்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் மட்டும் 20 விழுக்காடு இடஒதுக்கீடு தரவில்லை என்றால், இங்கு மத்திய அமைச்சர் சொன்னதைப்போல், கூலி வேலை செய்து விட்டு, ஓட்டு மட்டும் போடும் ஒரு சமுதாயமாக இந்த ஒடுக்கப்பட்ட சமுதாயம் இருந்திருக்கும். அதை மாற்றிய பெருமை, கலைஞர் அவர்களையே சாரும் என்று சொன்னீர்களே, அத்தகைய சாதனையைச் செய்த இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

**கோனேரிக்குப்பத்தில் நடந்த வன்னியர் சங்க வெள்ளிவிழா மாநாட்டிற்கு, தலைவர் கலைஞரை அழைத்தார் அய்யா ராமதாஸ் அவர்கள்! அய்யா ராமதாஸ் அவர்களே... அன்றைக்கு மேடையில் என்ன பாராட்டிப் பேசினீர்கள் என்று ஞாபகம் இருக்கிறதா? நீங்கள் மறந்தாலும் வன்னிய சமுதாய மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்! "1987–ஆம் ஆண்டுமுதல் இடஒதுக்கீட்டிற்காக நாங்கள் போராடினோம், 21 உயிர்களைப் பலி கொடுத்ததைத் தவிர ஒன்றும் நடக்கவில்லை. அன்றைக்கு இருந்த அ.தி.மு.க. முதலமைச்சரைப் பார்க்கவே முடியவில்லை! ஆனால் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தார். வந்தவுடன் என்னை அழைத்து இடஒதுக்கீடு தந்த கலைஞர் அவர்களே! உங்களுக்கு நன்றி! இந்த சமுதாயம் என்றென்றும் உங்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் மட்டும் 20 விழுக்காடு இடஒதுக்கீடு தரவில்லை என்றால், இங்கு மத்திய அமைச்சர் சொன்னதைப்போல், கூலி வேலை செய்து விட்டு, ஓட்டு மட்டும் போடும் ஒரு சமுதாயமாக இந்த ஒடுக்கப்பட்ட சமுதாயம் இருந்திருக்கும். அதை மாற்றிய பெருமை, கலைஞர் அவர்களையே சாரும்" என்று சொன்னீர்களே, அத்தகைய சாதனையைச் செய்த இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.**

### இராமசாமி படையாச்சியாருக்கு சென்னையில் சிலை வைத்தது யார்?

கடந்த தேர்தலில் அ.தி.மு.க. – பா.ம.க. கூட்டணி முறிந்ததும், அ.தி.மு.க.வும் – பா.ம.க.வும் மாறி மாறி, அவர்கள் ஆட்சியில் வழங்கிய இடஒதுக்கீடு பற்றி, குற்றம் சொல்லுகிறார்களே? என்னவெல்லாம் பேசுகிறார்கள் என டி.வி.யில் பார்க்கிறோமே! அதையெல்லாம் இப்போது சொல்லி, இந்த மேடையின் கண்ணியத்தைக் குறைத்துக் கொள்ள நான் விரும்பவில்லை!

மரியாதைக்குரிய இராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு, சென்னையில் சிலை வைக்க வேண்டும் என்று வாழப்பாடி ராமமூர்த்தி அவர்களும் – வன்னிய அடிகளார் அவர்களும் – சி.என்.ராமமூர்த்தி அவர்களும் கலைஞரைச் சந்தித்துக் கோரிக்கை வைத்தபோது, சென்னை ஹால்டா சந்திப்பில் சிலை அமைத்தார் தலைவர் கலைஞர். அந்த நிகழ்ச்சியில், கலைஞருடன் சென்னை மேயராக இந்த அடியேனும் கலந்து கொண்டேன். எந்தச் சமூகமாக இருந்தாலும் அந்தச் சமூகத்தின் மேன்மைக்காகத் திட்டங்களைத் தீட்டித் தரும் சமூகநீதி இயக்கம்தான் தி.மு.க. ஆனால் சமூகநீதி பேசும் மருத்துவர் அய்யா அவர்கள், சமூகநீதிக்கு எதிரான பா.ஜ.க.வுடன் கை கோத்த மர்மம் என்ன? பா.ம.க. வலியுறுத்தும் ஒரு கொள்கைக்குக்கூட ஆதரவு தெரிவிக்காத, அதற்கு முற்றிலும் நேர் எதிரான கொள்கை கொண்டதுதான் பா.ஜ.க! இது, மூத்த தலைவரான மருத்துவர் ஐயாவுக்குத் தெரியாதா? நான் மட்டும் இதைச் சொல்லவில்லை, மனசாட்சி உள்ள பா.ம.க.வின் தொண்டர்கள்கூட இதை ஜீரணிக்க முடியாமல் வேதனையோடு இருக்கிறார்கள்! அய்யா ராமதாஸ் அடிக்கடி பேசுவாரே, மண்டல் கமிஷன் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்தியபோது நாட்டில் திட்டமிட்டு எப்படியெல்லாம் கலவரம் செய்தது பா.ஜ.க! சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் ஆட்சியையே பா.ஜ.க. கவிழ்த்ததே!

### இட ஒதுக்கீட்டை குளோஸ் செய்ய படுபாதகங்களைச் செய்யும் பா.ஜ.க.!

இப்போதுகூட, பிற்படுத்தப்பட்ட – பட்டியலின – பழங்குடி மக்களின் இடஒதுக்கீட்டை முழுமையாக 'குளோஸ்' செய்வதற்காக எவ்வளவு படுபாதகங்களை பா.ஜ.க. செய்திருக்கிறது அதை மறந்துவிட்டாரா? பா.ம.க.வின் சார்பில், இப்போது தேர்தல் அறிக்கையில் அய்யா ராமதாஸ் என்ன சொல்லி இருக்கிறார்? 2021–இல் நடந்திருக்க வேண்டிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, இந்த ஆண்டு இறுதியிலே நடக்கிறது. அப்போது இந்தியா முழுவதும் மக்கள் தொகைக் கணக்கெடுப்போடு, சாதிவாரி கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்தப் பா.ம.க. பாடுபடும் என்று சொல்கிறார்கள்! நாம் கேட்பது, தன்னுடைய ஆட்சிக் காலத்தில் பிரதமர் நரேந்திர மோடி இதை ஏன் செய்யவில்லை என்று கேட்டாரா? இப்போதாவது இந்தக் கோரிக்கையைப்

தொடர்ச்சி 4- ஆம் பக்கம்

## நாடாளுமன்றத் தேர்தல் – கழகத் தலைவர்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்றைய பிரச்சாரம்!



2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரித்து வருகிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் இன்றைய தேர்தல் பிரச்சாரப் பயண விவரம் :-

| தேதி | | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|---|
| **30.03.2024 (சனிக்கிழமை)** | - | **சேலம்** |
| | | **கள்ளக்குறிச்சி** |

# கெஜ்ரிவால் கைது : ஒன்றிய அரசு மீது ஐ.நா. சபை கண்டனம்!

## காங்கிரஸ் வங்கிக்கணக்கு முடக்கப்பட்டது குறித்து ஐ.நா. கேள்வி !

*நியூயார்க், மார்ச் 30-*


இந்தியாவில் அனைவரின் உரிமைகளும் பாதுகாக்கப்படும் என நம்புகிறோம் - என்றும் இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் நடத்துவதை உறுதிசெய்ய வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.



இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், ஒன்றிய பா.ஜ.க. அரசு அமலாக்கத்துறை, வருமான வரித்துறை போன்ற விசாரணை அமைப்புகள் மூலம் எதிர்க்கட்சிகளை முடக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. அதன்படி, காங்கிரஸ் கட்சியின் வங்கிக்கணக்குகள்முடக்கப்பட்டதுடன், டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலையும் கைது செய்தது. கெஜ்ரிவாலின் கைதுக்கு ஜெர்மனி மற்றும் அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்தன.

நீதித் துறையின் சுதந்திரம், அடிப்படை ஜனநாயகக் கோட்பாடுகள், கெஜ்ரிவால் வழக்கில் பயன்படுத்தப்படும் என எதிர்பார்ப்பதாக ஜெர்மனி கூறியது. இந்தியாவில் பொதுத்தேர்தல் நேர்மையான, நியாயமான முறையில் நடைபெற வேண்டும் என விரும்புவதாக கூறிய அமெரிக்கா, காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டிருப்பது, அக்கட்சியின் தேர்தல் பிரச்சாரத்தை பாதிக்கும் என்றும், கெஜ்ரிவால் கைது விவகாரத்தில் நியாயமான, வெளிப்படையான விசாரணையை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், இந்த விவகாரங்கள் தொடர்பாக நியூயார்க் நகரில் செய்தியாளர்களிடம் பேசிய ஐ.நா. பொதுச்சபை செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் துஜாரிக், இந்தியாவில் அனைவரின் உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்று எதிர்பார்ப்பதாக தெரிவித்தார். மேலும், தேர்தல் நடைபெறும் ஒரு நாட்டில் மக்களின் "அரசியல் மற்றும் சிவில் உரிமைகள்" பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். மேலும், இந்தியாவில் சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் தேர்தல் நடத்துவதை உறுதி செய்ய வேண்டும் ஸ்டீபன் துஜாரிக் வலியுறுத்தினார்.



# உங்கள் வாக்கு இந்தியாவை - தமிழ்நாட்டைக் காப்பதாக இருக்கட்டும் உங்கள் ஸ்டாலின் அழைக்கிறேன்... நாடும் நமதே! நாற்பதும் நமதே!

## தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...

- 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

பிரதமர் ஏற்று இருக்கிறாரா? மோடி அவர்கள் இப்போது கேரண்டி கேரண்டி என்று விளம்பரப் படுத்துகிறாரே? சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த உங்களுக்கு கேரண்டி கொடுத்தாரா?

மோடி கேரண்டியில், இடஒதுக்கீட்டின் வரம்பை உயர்த்துவதற்கான உறுதிமொழி உண்டா? அய்யா ராமதாஸ் அவர்கள் மோடியிடமோ, அமித்ஷாவிடமோ அதற்கான உத்தரவாதத்தைப் பெற்று இருக்கிறாரா? இன்னும் சொல்ல வேண்டும் என்றால், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் எடுக்கப்பட்ட சாதிவாரிக் கணக்கெடுப்பைக்கூட வெளியிடாமல் முட்டுக்கட்டை போட்டதுதான் பா.ஜ.க.

இன்று இந்திய அளவில், நம்முடைய கோரிக்கையை ஏற்று, சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தவும், இடஒதுக்கீடு விழுக்காட்டை அதிகரிக்கும் வாக்குறுதி அளித்திருக்கும் ஒரே தேசிய கட்சி காங்கிரஸ். மல்லிகார்ஜுன கார்கே அவர்கள் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் அதை வாக்குறுதியாகத் தந்திருக்கிறார். பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் அந்த மாதிரி வாக்குறுதி உண்டா? அருமைச் சகோதரர் ராகுல் காந்தி அவர்கள் செல்லும் இடமெல்லாம் இதைப் பற்றி பேசுகிறாரே?

இதைச் சொன்னால், நீங்களே ஏன் நடத்தவில்லை என்று நம்மை கேட்கிறார்! நாம் மீண்டும் மீண்டும் சொல்வது, சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது, அரசியலமைப்புச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டு, எடுக்கப்பட வேண்டியது! அதற்கான அதிகாரம் ஒன்றிய அரசிடம்தான் இருக்கிறது! மாநில அரசால் சர்வேதான் எடுக்க முடியும்! சென்சஸ் எடுக்க முடியாது! இந்த நடைமுறையெல்லாம் சமூகநீதிப் போராளியான அய்யா ராமதாஸ் அவர்களுக்கு தெரியாது என்று நான் நினைக்கவில்லை! தெரிந்தே, இந்த அரசியலை நடத்துகிறார்! அவர் மேல் வைத்திருக்கும் பெரும் மரியாதைக்காக இதற்கு மேல், நான் எதுவும் பேச விரும்பவில்லை!

### மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி பல மணிநேரம் நின்று கொண்டே வழங்கினேன்!

யார் என்ன சொன்னாலும், பேரறிஞர் அண்ணா வழியில், ”வாழ்க வசவாளர்கள் என்று நம்முடைய திராவிட மாடல் பணிகளைத் தொடர்ந்து கொண்டிருக்கிறோம் அதனால்தான், இன்றைக்கு உங்கள் குடும்பங்களில் ஒருவனாக – உங்களில் ஒருவனாக – நான் இருக்கிறேன். இதற்கு தருமபுரியும் மிக முக்கியக் காரணம்! நான் எங்குச் சென்றாலும் தாய்மார்களும், சகோதரிகளும் என்னிடம் பாசத்தோடும், மகிழ்ச்சியோடும் உரிமையோடும் பேச வைத்தது மகளிர் சுய உதவிக் குழுக்கள்தான்! ஏன் என்றால், அந்தக் குழுக்களுக்கான சுழல்நிதியைப் பல மணிநேரம் நின்றுக்கொண்டே வழங்கியவன்தான் இந்த ஸ்டாலின்!

அதே மாதிரிதான், இன்றைக்கு நான் கொண்டுவந்திருக்கும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில், எங்கள் அண்ணன் ஸ்டாலின் தாய்வீட்டுச் சீர் மாதிரி மாதா மாதம் ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார் என்று ஒரு கோடியே 15 இலட்சம் சகோதரிகள் சொல்கிறார்கள் என்றால், அதற்கான விண்ணப்பங்கள் கொடுக்கும் பணியைத் தொடங்கி வைக்க நான் தேர்ந்தெடுத்த ஊரும் இதே தருமபுரிதான்!

எனக்கு தாய்மார்கள் மனதில், அவர்கள் குடும்பத்தில் ஒருவனாக நினைக்க வைத்து, பாசப் பாலத்தை அமைத்தது, இந்த தருமபுரிதான்! இதுமட்டுமல்ல, நம்முடைய திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற இந்த மூன்று ஆண்டுகளில், நிறைவேற்றிய திட்டங்களில் சிலவற்றை மட்டும் சொல்ல வேண்டும் என்றால்,

### மூன்றாண்டு ஆட்சியில் நிறைவேற்றிய சிலவற்றை மட்டும் சொல்கிறேன்!

**● காலையில் பள்ளிக்கு வரும் குழந்தைகள் வெறும் வயிற்றுடன் இருக்கக் கூடாது, நன்றாகச் சாப்பிட்டு – நன்றாகப் படிக்க வேண்டும் என்று முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.**

**● நாங்கள் ஆட்சிக்கு வந்ததில் இருந்து, தினமும் இலட்சக்கணக்கான மகளிர் மகிழ்ச்சியாக, நாங்கள் ஸ்டாலின் அய்யா பஸ்சில், இலவசமாகப் பயணம் செய்கிறோம் என்று சொல்லும் விடியல் பயணம் திட்டம்!**

**● வெளியூரில் வேலைக்குச் செல்லும் மகளிர் பாதுகாப்பாகத் தங்குவதற்கு, தோழி விடுதி திட்டம்!**

**● அடுத்து, பெண் பிள்ளைகளுக்கு மாதா மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டம்!**

**● மாணவர்களுக்கும் மாதா மாதம் ஆயிரம் ரூபாய் வழங்க இருக்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம்!**

**● இளைஞர்களுக்கு, திறன் பயிற்சி வழங்கி வேலைவாய்ப்பு பெற்றுத் தரும், நான் முதல்வன் திட்டம்!**

இப்படி, பள்ளிக் குழந்தைகள் முதல் கல்லூரிக்குச் செல்லும் மாணவ – மாணவிகள் வரை, பயன்பெறும் ஏராளமான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம்.

### திராவிட மாடல் ஆட்சியை மற்ற மாநிலங்களும் பின்பற்றுகின்றன!

இந்தத் திட்டங்களால் ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு மாணவியும், ஒவ்வொரு மாணவனும், ஏன், தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொரு குடும்பமும் பயனடைகிறார்கள் என்று நெஞ்சை நிமிர்த்திப் பெருமையுடன் சொல்வேன்! அதனால்தான் நம்முடைய திராவிட மாடல் திட்டங்களை, மற்ற மாநிலங்களும் பின்பற்றும் நல்லாட்சியை வழங்கி வருகிறோம்!

இந்த நல்லாட்சி, இந்தியா கூட்டணி மூலமாக, தில்லியிலும் நடக்க வேண்டும் என்றுதான், பல்வேறு வாக்குறுதிகளைத் தேர்தல் அறிக்கையாக வழங்கியிருக்கிறோம். சாதனைகளாக மாறப்போகும் அந்த வாக்குறுதிகளில் சிலவற்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

**● பத்தாண்டுகளாகச் சாமானிய மக்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்று கொஞ்சமும் நினைத்துப் பார்க்காமல், மக்கள் விரோத பா.ஜ.க. அரசால் தொடர்ந்து உயர்த்தப்பட்ட பெட்ரோல், டீசல், கேஸ் விலை குறைக்கப்படும்!**

**● சிறுபான்மையின மக்களுக்கு எதிரான சட்டங்கள் ரத்து செய்யப்படும்!**

**● தொழிலாளர் விரோதச் சட்டங்கள், மறுசீரமைப்பு செய்யப்படும்!**

**● ஜி.எஸ்.டி. சட்டத்தில் சீர்திருத்தம் செய்யப்படும்.**

**● விவசாயிகள் கூட்டுறவு அமைப்புகளிலும் – வங்கிகளிலும் வாங்கியிருக்கும் கடனும் – வட்டியும் தள்ளுபடி செய்யப்படும்.**

**● உழவர்களின் வேளாண் விளை பொருட்களுக்கு மொத்த உற்பத்தி செலவுடன் பிளஸ் ஐம்பது விழுக்காடு என்பதை வலியுறுத்தி, குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்யப்படும்.**

**● நாட்டைப் பாதுக்காத்த இந்திய ஆயுதப் படையினரின் ஓய்வூதியம் மற்றும் பிற நிதிப் பலன்கள் உயர்த்தப்படும்.**

**● தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் சுங்கச் சாவடிகள் முற்றிலுமாக அகற்றப்படும்.**

**● மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் வேலை நாட்கள் 100–ல் இருந்து, 150 நாட்களாகவும், ஊதியம் 400 ரூபாயாகவும் உயர்த்தப்படும்.**

**● வங்கிகளில் மினிமம் பேலன்ஸ் இல்லாத போது விதிக்கப்படும் அபராதம் நீக்கப்படும்.**

**● தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களில் வசிக்கும் 'வால்மீகி' இன மக்கள் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்.**

**● அதேபோல், 'குன்னுவார்' இனமக்களும் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்.**

**● ஓசூரில் புதிய விமான நிலையம் அமைக்கப்படும்.**

**● ஜுஜுவாடி முதல் சிப்காட்–II வரை பறக்கும் சாலைப் பாலம் அமைக்கப்படும்.**

**● கிருஷ்ணகிரியில் இரயில் நிலையம் அமைக்கப்படும்.**

**● ஜோலார்பேட்டை, ஓசூர் இரயில் சேவை கிருஷ்ணகிரி வழியாகத் தொடங்கப்படும்.**

**● ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் விரிவுபடுத்தப்படும்.**

**● ஓசூர், கிருஷ்ணகிரி, சென்னை இரயில் சேவை தொடங்கப்படும்.**

**● சிப்காட்டில் மானியத்துடன்கூடிய ஐம்பது ஏக்கர் நிலத்தை விசைத்தறித் தொழில் வளர்ச்சிக்கு ஒதுக்கித் தர ஆவன செய்யப்படும்.**

**● ஓசூரில் இருந்து பெங்களூருக்கு மெட்ரோ இரயில் சேவை தொடங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.**



**● ஓசூர், தளி சாலையில் இரயில் மேம்பாலம் அமைக்க ஆவன செய்யப்படும்.**

**● மொரப்பூர் இரயில் நிலையத்தையும், தருமபுரி இரயில் நிலையத்தையும் இணைக்கும் வகையில் புதிய அகல இரயில் பாதை அமைக்கப்படும்.**

இது எல்லாவற்றிற்கும் மேல், முக்கியமாக, சாதிவாரிக் கணக்கெடுப்பும், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்கள் குறித்த கணக்கெடுப்பும், ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரே நேரத்தில், ஒன்றிய அரசால் எடுக்கப்படும்.

நாம் ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வோம் என்று, இப்படி சொல்வதுபோல் பா.ம.க. அங்கம் வகிக்கும் பா.ஜ.க. ஆட்சியில் தமிழ்நாட்டிற்குப் பத்து ஆண்டுகள் செய்த சிறப்புத் திட்டங்கள் என்ன? என்று சொல்ல முடியுமா? பிரதமர் மோடி தமிழ்நாட்டிற்கு வரும்போது சிறப்புத் திட்டங்களைச் சொல்லுங்கள் என்று தொடர்ந்து கேட்கிறோம்? ஒரு மாதமாக நான் கேட்கிறேன். பிரதமரிடம் அதற்கு பதில் இல்லை!

### சிறப்புத் திட்டங்களை நாம் பட்டியலிட முடியும்! பா.ஜ.க.வால் முடியுமா?

ஒன்றிய அரசில் பங்கு வகித்த தி.மு.க. தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்த சிறப்புத் திட்டங்கள் என்ன என்று சமீபத்தில் பட்டியல் போட்டுச் சொன்னேன்

**தமிழ் செம்மொழியாக அறிவிப்பு!**

**ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்!**

**சேலத்தில் புதிய இரயில்வே கோட்டம்!**

**சென்வாட் வரி நீக்கம்!**

வரிசையாக நிறைய பட்டியல் போட்டேன் அதுமாதிரி, தமிழ்நாட்டுக்கான சிறப்புத் திட்டங்களை மட்டும் பட்டியல் போடுங்கள் என்றுதான் கேட்கிறோம். ஒன்று கூட பா.ஜ.க.வினால் சொல்ல முடியவில்லை! சிறப்புத் திட்டத்தின் இலட்சணம்தான் இப்படி என்றால், பொதுவான திட்டங்களாக இருந்தாலும் – மாநிலத்திற்குச் சேர வேண்டிய நிதியாக இருந்தாலும் – தமிழ்நாடு கொடுக்கும் வரிக்கு ஏற்ற மாதிரியான நிதி யாவது வருகிறதா? அதுவும் இல்லையே!

பா.ஜ.க. ஆட்சியில் இருக்கும் உத்தரப் பிரதேசம், ஒரு ரூபாய் கொடுத்தால், டபுள் மடங்காக நிதியைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, தமிழ்நாட்டிற்கு மட்டும் ஒரு ரூபாய் கொடுத்தால், வெறும் 29 பைசா மட்டும் திருப்பி கொடுப்பது ஓரவஞ்சனை இல்லையா?

### ஜி.எஸ்.டி.யால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நலிந்து போகும் தொழில்கள்!

அதுமட்டுமா, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருக்கும், சிறு – குறு தொழில் நிறுவனங்கள் ஜி.எஸ்.டி.யால் எப்படி நலிந்து போயிருக்கிறார்கள்? அசோக் லேலண்டு, டி.வி.எஸ், ஹோண்டா, டொயோட்டா போன்ற நிறுவனங்களுக்கு உதிரி பாகங்கள் தயாரித்து வழங்கும் 2500 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஓசூரில் இருக்கின்றன. இந்த உதிரிபாகங்களுக்கும் 28 விழுக்காடு ஜி.எஸ்.டி போட்டு, அந்த நிறுவனங்கள் எல்லாம் பாடா படுது! இவர்களுக்காக நீங்கள் என்றைக்காவது கவலைப்பட்டதுண்டா?

மூன்று வேளாண் சட்டங்கள் கொண்டு வந்து, அதை எதிர்த்த விவசாயிகளை ஏதோ தீவிரவாதிகளைப்போல் எப்படி கொடுமைப்படுத்தினீர்கள்? இன்றைக்கும் தலைநகர் தில்லியில் விவசாயிகளை நுழைய விடாமல் சாலை முழுவதும் ஆணி அடித்தீர்களே! விவசாயிகளுக்கு நீங்கள் செய்யும் கொடுமை மாதிரி, இந்திய வரலாற்றிலேயே எந்தப் பிரதமரும் செய்திருக்க மாட்டார்கள்... ஏன், உலக வரலாற்றில்கூட, எந்த சர்வாதிகாரியும் செய்திருக்க மாட்டார்கள்!

### மோடி அவர்களே நீங்கள் எஜமானர் அல்ல மக்கள் தான் எஜமானர்கள் என்பதை மறவாதீர்!

பிரதமர் மோடி அவர்களே உங்கள் பத்தாண்டுகால ஆட்சியின் அடையாளம் என்ன? ரஃபேல் ஊழல், சி.ஏ.ஜி. ஊழல், தேர்தல் பத்திர ஊழல் இதற்கெல்லாம் பதில் எங்கே? இதற்கெல்லாம் தேர்தலுக்குப் பின், நீங்கள் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். 12 ஆண்டு காலம் குஜராத் முதலமைச்சராக இருந்து, மாநில உரிமைகளைப் பேசிய மோடி, தில்லிக்குச் சென்று பிரதமரானதும், மாநிலங்களை அழிக்கத் துடியாகத் துடிக்கிறார். மாநிலங்களுக்கு என்று எந்த அதிகாரங்களும் இருக்கக் கூடாது. மொத்த அதிகாரமும் தன்னுடைய பாக்கெட்டில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று சர்வாதிகாரியைப்போல் நினைக்கிறார்.

பிரதமர் மோடி அவர்களே நீங்கள் எஜமானர் அல்ல! மக்கள்தான் உங்களுக்கு எஜமானர்கள்! அதை மறந்துவிடாதீர்கள்! ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்! இன்னமும் மக்களிடம் நீங்கள் வாக்கு கேட்டு வருகிறீர்கள்! நீங்கள் எப்படிப்பட்ட தோல்வி பயத்தில் இருக்கிறீர்கள் என்று, சிலிண்டர் விலையைக் குறைக்கும்போதே தெரிந்துவிட்டதே! ஆண்டுதோறும்தான், மகளிர் தினம் வருகிறது, அப்போதெல்லாம் குறைக்காதவர், தேர்தல் வருகிறது என்று இந்த வருடம் குறைக்கிறார்! சிலிண்டர் விலையை உயர்த்தியது யார்? இப்போது குறைப்பதாக நாடகம் நடத்தும் அதே மோடிதான்!

தேர்தல் வந்ததால் பெட்ரோல், டீசல் விலையைக் குறைக்கிறார். பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தியது யார்? அதுவும், இப்போது குறைப்பதாக நாடகம் நடத்தும் அதே மோடிதான்!

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு, நடத்தை விதிகள் அமலில் இருக்கிறது! அரசு புதியதாக எதையும் அறிவிக்கக் கூடாது! ஆனாலும், நூறு நாள் வேலைத் திட்டத்திற்கான ஊதியத்தை உயர்த்துவதாக அறிவித்திருக்கிறார்கள். மக்கள் மேல் ஏன் இந்த திடீர் கரிசனம்? பாசம்? இரக்கம்? பிரதமர் மோடி அவ்வளவு இரக்கமும் – பாசமும் உடையவர் என்றால், கிராமத்தில் வாழும் ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்று காங்கிரஸ் கொண்டு வந்த இந்த திட்டத்தை இவ்வளவு நாள் ஏன் முடக்கி வைத்தீர்கள்? காங்கிரஸ் கொண்டு வந்தால் என்ன, ஏழை மக்களுக்குதானே பயன் படுகிறது என்று, ஒரு அடிப்படை மனிதாபிமானத்துடன் செய்தீர்களா? இல்லையே?

அப்படி என்றால், இந்த திட்டத்தை முடக்கியதற்கு காரணம், காங்கிரஸ் மேல் இருக்கும் வன்மம் மட்டுமல்ல! ஏழை மக்களை வஞ்சிக்கும், எண்ணம்தான் காரணம்! எப்படியெல்லாம் நூறு நாள் வேலைத்திட்டத்தைச் சீரழித்தார்கள்! அந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்குவதில் முக்கியத்துவம் அளிக்கவில்லை! ஒதுக்கப்பட்டு வந்த நிதியையும், ஓரவஞ்சனையுடன் குறைத்தீர்கள்! இன்னும் சொல்ல வேண்டும் என்றால், ஆண்டுக்குச் சராசரியாக நாற்பது நாட்கள் மட்டுமே வேலை கொடுத்து, இந்தத் திட்டத்தின் நோக்கத்தையே சிதைத்து, சின்னாபின்னப்படுத்தினார்கள்.

### ஏழைகளுக்கான திட்டங்களை சீரழித்து கார்ப்பரேட்களுக்கு கம்பளம் விரிக்கும் மோடி!

கார்ப்பரேட்களுக்கு ரத்தினக் கம்பளம் விரிக்கும் மோடி அரசு, இரத்தம் சிந்தி உழைக்கும் ஏழைகளுக்கு, உதவியாக இருக்கும் திட்டத்தை சீரழித்து வேடிக்கை பார்த்தது. நம்முடைய தேர்தல் அறிக்கையில் சொன்னதைப் பார்த்து, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கு 294 ரூபாயிலிருந்து, 319 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள்! அடேங்கப்பா, மக்கள் மேல் எவ்வளவு அக்கறை! அவ்வளவு அக்கறை இருக்கிறவர், இதையெல்லாம் தேர்தலுக்கு முன்னால் ஏன் செய்யவில்லை? ஏன் என்றால், இதெல்லாம் கண்துடைப்பு நாடகம்!

திரும்பவும் நாங்கள் உறுதியோடு சொல்கிறோம். 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில், வேலைவாய்ப்பு நாட்களை, 150 நாட்களாக உயர்த்தி, ஊதியத்தையும் 400 ரூபாயாக உயர்த்துவோம்!

நேற்று ஒரு செய்தி பார்த்தேன். நம்முடைய மக்களுக்கு வெள்ள பாதிப்பின்போது, நிவாரணம் கொடுத்ததைப் பிச்சை என்று சொன்னார்களே, அமைச்சர் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் பேசிய செய்தி! இவர்கள் பிச்சை என்று சொன்னதும், நான் என்ன சொன்னேன்? நிர்மலா சீதாராமன் அவர்களே ஒருமுறையாவது மக்களை வந்து சந்தித்துப் பாருங்கள் மக்கள் உங்களுக்குச் சொல்லும் பதிலில், 'பிச்சை' என்ற சொல்லே இனி உங்கள் ஞாபகத்திற்கு வராது என்று சொன்னேன்.

ஆனால், வேட்பாளர் பட்டியலில் அவர்கள் பெயர் இல்லை! ஏன் போட்டியிடவில்லை என்பதற்கு அவர் சொன்ன காரணம்தான் சூப்பர்! தேர்தலில் போட்டியிட அவரிடம் பணம் இல்லை என்று சொல்லியிருக்கிறார். சொல்வது யார்? சாதாரண மக்களின் பேங்க் பேலன்ஸ் குறைவாக இருந்தால் அபராதம் விதிக்கிறவர்கள் சொல்கிறார்கள்! இவரிடம் பணம் இல்லை என்றால் 12 ஆயிரம் கோடி தேர்தல் பத்திரமாக வாங்கி பா.ஜ.க. வேட்பாளர்கள் நிற்கிறார்களே? அந்தப் பணம் என்ன ஆனது? உங்களுக்குத் தர முடியாது என்று சொல்லிவிட்டார்களா? யாரைக் குற்றம்சாட்டுகிறார்?

### தேர்தலில் நின்றால் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என்ற பயம்!

அம்மையார் அவர்களே, தேர்தலில் போட்டியிட மக்களைச் சந்திக்க வேண்டும்! மக்களுக்காக உழைக்கத் தெரிய வேண்டும்! மக்களைப் பற்றிய உண்மையான அக்கறை இருக்க வேண்டும்! உங்களுக்கே தெரிந்துவிட்டது! தேர்தலில் நின்றால், மக்கள் உங்களுக்குத் தக்க பாடம் புகட்டுவார்கள் என்று, தப்பிவிட்டீர்கள்!

தமிழ்நாட்டு மக்கள் 2019 தேர்தலைப் போன்று, இந்தத் தேர்தலிலும் பா.ஜ.க.வை ஒதுக்கத்தான் போகிறார்கள்! பா.ஜ.க.வுடன் வெளிப்படையாகக் கூட்டணி அமைத்திருப்பவர்களும், கள்ளக் கூட்டணியாகத் தமிழ்நாட்டிற்கு துரோகமிழைக்கும் பழனிசாமி கூட்டமும் தோற்கடிக்கப்பட வேண்டும்.

பா.ஜ.க.வையே விமர்சிக்காமல் பா.ஜ.க.வுக்கு எதிரான கூட்டணி என்று வசனம் பேசுகிறார் 'கொடநாடு புகழ்' பழனிசாமி! பதவி சுகத்தை அனுபவிக்க, நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்களை நீட் தேர்வை எழுத வைத்தார்!

மூன்று வேளாண் சட்டங்களை ஆதரித்தார். அதுமட்டுமல்ல, எந்த விவசாயி பாதிக்கப்படுகிறார், நான் விவாதம் நடத்தத் தயாராக இருக்கிறேன் என்று உழவர்களின் துயரத்தைப் பார்த்து ஏகடியம் செய்து, பச்சைத் துண்டு போட்டு பச்சைத் துரோகம் செய்தவர்தான் பழனிசாமி.

### பா.ஜ.க.வின் மக்கள் விரோத திட்டங்களை ஆதரித்த தமிழ்நாட்டின் துரோகி பழனிசாமி!

குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை ஆதரித்தார். அதிலும், எந்த முஸ்லிம் பாதிக்கப்படுகிறார் என்று, அட்டர்னி ஜெனரல் மாதிரி 'லா பாய்ண்ட்' எல்லாம் பேசினார் பழனிசாமி. பா.ஜ.க. கொண்டு வரும் எல்லாவற்றையும் ஆதரித்து அவர்கள் பாதம்தாங்கியாக இருந்து, மோடி – அமித்ஷா இரட்டையருக்கு பவுசாகப் பல்லக்கு தூக்கிய, தமிழ்நாட்டு துரோகிதான் பழனிசாமி.

இப்போது புதியதாகத் தமிழ்நாட்டை மீட்கப் போகிறாராம். இதைக் கேட்டு தமிழ்நாட்டு மக்கள் சிரிக்கிறார்கள். பா.ஜ.க.விடம் இருந்து சிறுபான்மை மக்களைக் காக்கப் போகிறாராம். இதைக் கேட்டுச் சிறுபான்மை மக்களும் சிரிக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பாழ்படுத்திய அ.தி.மு.க. – தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. – அதனுடன் சந்தர்ப்பவாதக் கூட்டணி அமைத்துள்ள பா.ம.க. என்று இந்த மக்கள் விரோதக் கூட்டத்தை தோற்கடிக்க வேண்டும்!

அதற்கு, இந்தியா கூட்டணி வேட்பாளர்கள், தருமபுரி நாடாளுமன்றத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழக வெற்றி வேட்பாளர் மணி அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திலும், கிருஷ்ணகிரி நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் கட்சியின் வெற்றி வேட்பாளர் கோபிநாத் அவர்களுக்கு கை சின்னத்திலும் உங்களது பொன்னான வாக்குகளை அளித்து வெற்றி பெற வையுங்கள்.

உங்கள் வாக்கு, இந்தியாவைக் காப்பாற்றும் வாக்காக அமையட்டும். தமிழ்நாட்டைக் காக்கும் வாக்காக அமையட்டும். ஜனநாயகத்தைக் காக்கும் வாக்காக அமையட்டும். பாசிசத்தை வீழ்த்த ஜனநாயகத்தைக் காக்க – உங்கள் ஸ்டாலின் அழைக்கிறேன். நாற்பதும் நமதே! நாடும் நமதே! நாற்பதும் நமதே! நாடும் நமதே!

இவ்வாறு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## தமிழ்நாட்டின் நல்லாட்சிபோன்று 'இந்தியா' கூட்டணி மூலம் டெல்லியிலும் நடக்க வேண்டும்!




பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பம்மல் வடக்குப் பகுதியின் அனகாபுத்தூர் நகரத்தில் 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளின் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளரும், கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு அவர்கள், வீதிவீதியாகச் சென்று வாக்கு சேகரித்தார். இதில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, பம்மல் வடக்குப் பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார், மாவட்டக் கழகப் பிரதிநிதி எஸ்.கே.நெப்போலியன், மாநகரத் துணைச் செயலாளர் இரா.நரேஷ் கண்ணா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# வருமான வரித்துறை புதிய நோட்டீஸ்!

## பா.ஜ.க. அரசின் சதி என காங். குற்றச்சாட்டு !

புதுடெல்லி, மார்ச் 30 - 2017 முதல் 3 நிதி ஆண்டுகளுக்கான கணக்கை நாளை மறுநாளுக்குள் தாக்கல் செய்யுமாறு காங்கிரஸ் கட்சிக்கு, வருமான வரித்துறை திடீர் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் காங்கிரஸ் கட்சி வருமான வரி தாக்கல் செய்ய தாமதமானதாக கூறி , வருமான வரித்துறை 250 கோடி ரூபாய்க்கும் மேல்அபராதம் விதித்து நோட்டீஸ் அனுப்பி இருந்தது.

இதனை தொடர்ந்து, காங்கிரஸ் கட்சியின் 11 வங்கி கணக்குகளையும் முடக்கியது.

இதனை எதிர்த்து காங்கிரஸ் கட்சி தொடர்ந்த மேல் முறையீட்டு வழக்கை வருமான வரித்துறை மேல் முறையீட்டு தீர்ப்பாயம் தள்ளுபடி செய்தது.

இந்த நிலையில், கடந்த 2017 - 18 முதல் 2020 - 21 ஆம் ஆண்டு வரையிலான 3 நிதி ஆண்டுகளுக்கான கணக்குகளை வரும் 31ஆம் தேதிக்குள் தாக்கல் செய்ய வேண்டும் என வருமான வரித்துறை புதிய நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

மேலும், இந்த 3 ஆண்டுகளில் அபராதம், அபராதத்துக்கு அபராதம் உட்பட ஆயிரத்து 700 கோடி ரூபாய்க்கான நோட்டீசை அனுப்பியுள்ளது.

வருமானவரித் துறையின் இந்த செயல் காங்கிரஸ் கட்சியை முற்றிலுமாக செயல் இழக்க செய்யும் பா.ஜ.க.வின் சதித் திட்டம் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் குற்றம்சாட்டியுள்ளார்.

வருமான வரித்துறையின் நோட்டீசை எதிர்த்து, நீதிமன் றத்தில் வழக்கு தொடரப்படும் என்றும் காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

### 100 நாள் வேலைத் திட்டம்

# ரூ. 7 வரை உயர்த்திவிட்டு ரூ.700 கோடிக்கு விளம்பரம்!

## ராகுல்காந்தி விமர்சனம்!

புதுடெல்லி, மார்ச் 30 - நூறு நாள் வேலை திட்ட சம்பளத்தை சுமார் 7 ரூபாய் வரை உயர்த்தி விட்டு மோடி அரசு 700 கோடி ரூபாய் செலவில் விளம்பரம் தேடிக் கொள்ளும் என காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

100 நூறு நாள் வேலை திட்டத்தில் தினசரி சம்பளத்தை 3 முதல் பத்து சதவிகிதம் வரை ஒன்றிய அரசு உயர்த்தியுள்ளது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கு தினசரி ஊதியம் 294 ரூபாயாக இருந்த நிலையில் 319 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இது குறித்து சமூக வலைதளத்தில் கருத்து பதிவிட்டுள்ள காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல் காந்தி,

100 நாள் வேலை திட்ட பணியாளர்களின் ஊதியத்தை ஏழு ரூபாய் உயர்த்தியுள்ள மோடி அரசு, அதற்காக 700 கோடி ரூபாய் செலவில் விளம்பரம் தேடிக்கொள்ளும் என கூறியுள்ளார்.

7 ரூபாய் உயர்த்தி விட்டு, இவ்வளவு பெரிய தொகையை நீங்கள் என்ன செய்வீர்கள் என்று 100 நாள் வேலைத் திட்ட பணியாளர்களிடம் மோடி கேள்வி கேட்பார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்ததும், முதல் நாளிலேயே 100 நாள் வேலைத் திட்ட பணியாளர்களின் சம்பளம் 400 ரூபாயாக உயர்த்தப்படும் என்றும் காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

### இரா.துரைராஜ் தலைமை! முனைவர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து

# சைதை கிழக்குப் பகுதி தேர்தல் பணிமனை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்!

சென்னை, மார்ச் 30- தென் சென்னை நாடாளுமன்ற தேர்தல் 2024 இந்தியா கூட்டணியின் கழக வேட்பாளர் முனைவர், தமிழச்சி தங்கப்பாண்டியன் அவர்களை ஆதரித்து சைதை கிழக்கு பகுதி திமுக தேர்தல் பணிமனையை சைதை கிழக்கு பகுதி செயலாளர் இரா.துரைராஜ் தலைமையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்.

இன்று (30.03.2024 சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு வேளச்சேரி, நேரு நகர் நெடுஞ்செழியன் தெருவில் தென் சென்னை நாடாளுமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் முனைவர், தமிழச்சி தங்கப்பாண்டியனை ஆதரித்து பகுதி செயலாளர் இரா.துரைராஜ் தலைமையில் சைதை கிழக்கு பகுதி திமுக தேர்தல் பணிமனை திறப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

தேர்தல் பணிமனையை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்து சிறப்பிக்கிறார்.

எனவே சைதை கிழக்கு பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், கழக அணிகளின் நிர்வாகிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்வதாக சைதை கிழக்கு பகுதி திமுக தேர்தல் பணிக்குழு அறிவித்துள்ளது.

### தமிழ் மாநில தேசிய லீக் பொதுச்செயலாளர்

# திருப்பூர் அல்தாப் பிரச்சாரம்!



| நாள் | கிழமை | தொகுதி |
| --- | --- | --- |
| 31.03.2024 | ஞாயிறு | தென் சென்னை |
| 01.04.2024 | திங்கள் | தஞ்சாவூர் |
| 02.04.2024 | செவ்வாய் | பெரம்பலூர் |
| 03.04.2024 | புதன் | திருச்சி |
| 04.04.2024 | வியாழன் | இராமநாதபுரம் |
| 05.04.2024 | வெள்ளி | இராமநாதபுரம் |
| 06.04.2024 | சனி | தூத்துக்குடி |
| 07.04.2024 | ஞாயிறு | தேனி |
| 09.04.2024 | செவ்வாய் | ராணிப்பேட்டை வேலூர், ஆம்பூர் வாணியம்பாடி |
| 10.04.2024 | புதன் | சேலம், கள்ளக்குறிச்சி |
| 11.04.2024 | வியாழன் | கோவை, பொள்ளாச்சி |
| 12.04.2024 | வெள்ளி | திருப்பூர் (பகுதி செயலாளர் உசேன் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சி ) |
| 13.04.2024 | சனி | ஊட்டி, நீலகிரி |
| 14.04.2024 | ஞாயிறு | விழுப்புரம், செஞ்சி செங்கம் |
| 15.04.2024 | திங்கள் | திருப்பெரும்புதூர் |
| 16.04.2024 | செவ்வாய் | வடசென்னை, மத்திய சென்னை தென் சென்னை |
| 17.04.2024 | புதன் | தி.மு.க. தலைவர் அவர்களின் நிறைவு பிரச்சார கூட்டம் |

# நீதித்துறை மீது மோடி அரசு தாக்குதல்!

## காங்கிரஸ் குற்றச்சாட்டு !

புதுடெல்லி, மார்ச் 30 - நீதித்துறையை பாதுகாப்பது போல் அதன் மீது மோடி அரசு தாக்குதல் நடத்தி வருவதாக காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர் ஹரிஷ் சால்வே, இந்திய பார் கவுன்சில் தலைவர் மன்னன் குமார் மிஸ்ரா மற்றும் 600 வழக்கறிஞர்கள் அடங்கிய குழு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட்டுக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

அதில், நீதித்துறைக்கு அழுத்தம் கொடுக்கவும், நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையிடவும் ஒரு குழு முயன்று வருகிறது என்றும், அரசியல்வாதிகள் தங்களுக்கு சாதகமான தீர்ப்பு வரவில்லை என்றால் நீதிமன்றங்களுக்கு உள்ளேயும், ஊடகங்களின் வாயிலாகவும் நீதித்துறையை விமர்சிக்கி ன்றனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெயராம் ரமேஷ் வெளியிட் சமூக வலைதளப்பதிவில், நீதித்துறையை பாதுகாப்பது போல் அதன் மீது மோடி தாக்குதல் நடத்துவது பாசாங்குத் தனத்தின் உச்சம் என்று குறிப்பிட்டுள்ளார்.

10 ஆண்டுகளில் மக்களை பிரித்தாளவும், கவனத்தை திசை திருப்ப வும், அவதூறுகளை பரப்புவதையும் தான் செய்து வந்தாகவும், விரைவில் 140 கோடி மக்கள் மோடிக்கு தகுந்த பதிலடி கொடுக்க தயாராகி விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# 'இந்தியா' கூட்டணி கட்சிகள் பீகாரில் தொகுதி உடன்பாடு!

பாட்னா, மார்ச் 30 - நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க.வை எதிர்த்து நாட்டில் உள்ள 28 கட்சிகள் இணைந்து 'இந்தியா' கூட்டணியை உருவாக்கியுள்ளன.

'இந்தியா' கூட்டணி கட்சிகள் இடையே தொகுதி பங்கீடு இறுதி செய்யப்பட்டு வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றனர்.

40 தொகுதிகள் கொண்ட பீகார் மாநிலத்தில் 7 கட்டங்களாக தேர்தல் நடைபெறும் நிலையில், அம்மாநிலத்தில் 'இந்தியா' கூட்டணி கட்சிகள் இடையே தொகுதி உடன்பாடு இறுதி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 'இந்தியா' கூட்டணி வெளியிட்டுள்ள அறிக்கையில், லாலுபிரசாத் யாதவின் ராஷ்ட்ரிய ஜனதா தளம் 26 தொகுதிகளிலும், காங்கிரஸ் 9 தொகுதிகளிலும், இடதுசாரிகள் 5 இடங்களிலும் போட்டியிட உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

### மதவாத பி.ஜே.பி. கூட்டணியை வீழ்த்திடவும் - 'இந்தியா' கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தும்

# திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பிரச்சாரப் பயணம் தொடங்குகிறார்!



கடந்த 10 ஆண்டுகளாக ஒன்றிய ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்திருக்கும் பி.ஜே.பி. மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியை வரும் மக்களவைத் தேர்தலில் வீழ்த்திடவும், இந்தியா கூட்டணியை வெற்றி பெறச் செய்வதற்குமான தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணத்தினை திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் ஏப்ரல் 2ஆம் தேதி தென்காசியில் தொடங்கி, ஏப்ரல்17ஆம் தேதி தஞ்சாவூரில் நிறைவு செய்கிறார்.

கடந்த 10 ஆண்டுகளாக மோடி தலைமையில் இயங்கும் ஒன்றிய பி.ஜே.பி. அரசு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மாண்புகளுக்கு எதிராகவும், ஆர்.எஸ்.எஸின் சித்தாந்தங்களைச் செயல்படுத்தும் வகையிலும் மதவாத அரசாக செயல்பட்டு வருகிறது.

மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பது, பி.ஜே.பி. ஆளும் மாநிலங்களுக்குச் சாதகமாகவும், பி.ஜே.பி. ஆட்சியில் இல்லாத மாநிலங்களுக்கு விரோதமாகவும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

மக்களின் வளர்ச்சித் திட்டங்களின்மீது கவனம் செலுத்தாமல், ராமன் கோவில் கட்டுவது, பூஜை புனஸ்கார நடவடிக்கைகளில் ஈடுபடுவது, 'ஜெய் ராம்' கோஷங்களை அரசு நிகழ்ச்சிகளில்கூட முழங்குவது, சிறுபான்மை மக்களை வதைப்பது, சமூக நீதியைக் குழிதோண்டிப் புதைப்பது, ஹிந்தி, சமற்கிருத மொழிகளுக்கு நிதியைக் கோடிக்கணக்கில் செலவிடுவது, ஊழலில் பி.ஜே.பி.யை மிஞ்சக்கூடிய ஆட்சி இதற்குமுன் இருந்ததில்லை என்று கூறும் அளவுக்கு (எடுத்துக்காட்டு தேர்தல் பத்திரம்) செயல்படுவது உச்சநீதிமன்றத்தால் கடும் கண்டனத்துக்கு ஆளாவது, இயற்கைப் பேரிட ரில்கூட கட்சிக் கண்ணோட்டத்தோடு நடந்துகொள்வது உள்ளிட்ட மக்கள் விரோத மோடி தலைமையிலான ஆட்சியை வீழ்த்துவது சித்தாந்த ரீதியாகவும், திராவிடர் கழகத்துக்கு முக்கிய பங்கு உண்டு.

"மக்கள் விரோத பா.ஜ.க. அரசை விரட்டியடிப்போம்!" (நூலாசிரியர் கி.வீரமணி) என்ற 48 பக்க நூல் ஒன்றும் திராவிடர் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது. தி.மு.க. அரசின் மூன்றாண்டு சாதனைகளை ஆதாரங்களுடன் நூல் ஒன்றும் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தேர்தலிலும் திராவிடர் கழகத்தின் வெளியீடுகள் முக்கியத்துவம் பெற்று வந்திருக்கின்றன பொதுமக்களால் வரவேற்கவும்பட்டுள்ளன.

தேர்தலில் நேரடியாக ஈடுபடாத சமூகப் புரட்சி இயக்கமான திராவிடர் கழகத்திற்கு நாட்டை யார் ஆளவேண்டும் யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கக்கூடிய சமூக நலனில் பெரிதும் அக்கறை உண்டு.

கடந்த காலங்களில் தேர்தல்களில் திராவிடர் கழகப் பிரச்சாரத்தின் தாக்கம் குறிப்பிடத்தக்கதாகவும் இருந்திருக்கிறது.

நடக்கவிருக்கும் மக்களவைத் தேர்தலில் கடமை உணர்ச்சியின் அடிப்படையில் திராவிடர் கழகத் தலைவர் மேற்கொள்ளவிருக்கும் பயணம் வெளியிடப்படுகிறது.

கழகப் பொறுப்பாளர்களும், தோழர்களும், வேட்பாளரையும், சம்பந்தப்பட்ட கட்சிகளின் பொறுப்பாளர்களையும் அணுகி, கழகத் தலைவர் மேற்கொள்ளும் பிரச்சாரப் பயணத்தைத் திட்டவட்டமான வகையில் வெற்றிகரமாக நடத்திட ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சுற்றுப்பயண விவரம் வருமாறு :

| வ.எண் | தேதி | நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் | தொகுதி |
| --- | --- | --- | --- | --- |
| முதல் கட்டம் | | | | |
| 1 | 02.04.2024 செவ்வாய் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | தென்காசி<br>திருநெல்வேலி | தென்காசி<br>திருநெல்வேலி |
| 2 | 03.04.2024 புதன் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | தூத்துக்குடி<br>விருதுநகர் | தூத்துக்குடி<br>விருதுநகர் |
| 3 | 04.04.2024 வியாழன் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | ஆண்டிப்பட்டி<br>மதுரை | தேனி<br>மதுரை |
| 4 | 05.04.2024 வெள்ளி | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | பழனி<br>உடுமலைப்பேட்டை | திண்டுக்கல்<br>பொள்ளாச்சி |
| 5 | 06.04.2024 சனி | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | கோயமுத்தூர்<br>மேட்டுப்பாளையம் | கோவை<br>நீலமலை |
| 6 | 07.04.2024 ஞாயிறு | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | சத்தியமங்கலம்<br>கோபிசெட்டிப்பாளையம் | நீலமலை<br>திருப்பூர் |
| 7 | 08.04.2024 திங்கள் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | சேலம்<br>அரூர் | சேலம்<br>தருமபுரி |
| இரண்டாம் கட்டம் | | | | |
| 8 | 10.04.2024 புதன் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | அரக்கோணம்<br>திருவள் ளூர் | அரக்கோணம்<br>திருவள் ளூர் |
| 9 | 11.04.2024 வியாழன் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | அம்பத்தூர்<br>வடசென்னை | திருபெரும்புதூர்<br>வடசென்னை |
| 10 | 12.04.2024 வெள்ளி | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | திண்டிவனம்<br>தியாகதுருகம் | விழுப்புரம்<br>கள்ளக்குறிச்சி |
| 11 | 13.04.2024 சனி | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | ஜெயங்கொண்டம்<br>பெரம்பலூர் | சிதம்பரம்<br>பெரம்பலூர் |
| 12 | 14.04.2024 ஞாயிறு | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | துறையூர்<br>திருச்சி | பெரம்பலூர்<br>திருச்சி |
| 13 | 15.04.2024 திங்கள் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | மயிலாடுதுறை<br>நாகப்பட்டினம் | மயிலாடுதுறை<br>நாகப்பட்டினம் |
| 14 | 16.04.2024 செவ்வாய் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | அறந்தாங்கி<br>பேராவூரணி | இராமநாதபுரம்<br>தஞ்சாவூர் |
| 15 | 17.04.2024 புதன் | மாலை 3 மணி | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |

சிறப்புரை:

திராவிடர் கழகத் தலைவர் **ஆசிரியர் கி.வீரமணி** அவர்கள்,

முனைவர் **துரை.சந்திரசேகரன்**, திராவிடர் கழகப் பொதுச்செயலாளர்

பயண ஒருங்கிணைப்பாளர்கள்:

ஆலோசகர்: **கலி.பூங்குன்றன்**, திராவிடர் கழகத் துணைத் தலைவர்

**வீ.அன்புராஜ்**, திராவிடர் கழகப் பொதுச்செயலாளர்

**இரா.ஜெயக்குமார்**, திராவிடர் கழக மாநில ஒருங்கிணைப்பாளர்

**இரா.குணசேகரன்**, திராவிடர் கழக மாநில ஒருங்கிணைப்பாளர்

**பேரா.ப.சுப்ரமணியன்**, பெரியார் வீர விளையாட்டு திராவிடர் கழக மாநிலத் தலைவர்

# மக்களவைத் தேர்தல்: 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து சிபிஐ (எம்) மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் பிரச்சார பயணம்!



18வது மக்களவை தேர்தலையொட்டி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)யின் தமிழ்நாடு மாநில செயலாளர் கே. பாலகிருஷ்ணன் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் மேற்கொள்கிறார். அவருடைய பிரச்சார பயணத் திட்ட விபரம் கீழே தரப்பட்டுள்ளது. அடுத்த பயண திட்டம் பின்னர் வெளியிடப்படும்.

| | |
|---|---|
| **30.3.2024** | **கன்னியாகுமரி** |
| **31.03.2024** | **திண்டுக்கல்** |
| **01.04.2024** | **தேனி** |
| **02.04.2024** | **விருதுநகர்** |

ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# புதுடெல்லியில் நாளை 'இந்தியா' கூட்டணி ஆர்ப்பாட்டம்!

புதுடெல்லி, மார்ச் 30-

நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகளை முடக்கிவரும் ஒன்றிய பாஜ.க. அரசைக் கண்டித்து தலைநகர் டெல்லியில் இந்தியா கூட்டணி சார்பில் நாளை (31.03.2024) பிரமாண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகளை முடக்க விசாரணை அமைப்புகளை பயன்படுத்தி மோடி அரசு அனைத்து அட்டூழியங்களையும் செய்து வருகிறது. டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், ஜார்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரனை சிறையில் அடைத்துள்ளனர். காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகளை முடக்கி உள்ளனர். ஒன்றிய பா.ஜ.க. அரசின் சர்வாதிகார நடவடிக்கையை கண்டித்து இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் தலைநகர் டெல்லியில் நாளை பிரம்மாண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. டெல்லி ராம்லீலா மைதானத்தில் நடக்கும் போராட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் டி.ராஜா, தி.மு.க. மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா மற்றும் முக்கியத் தலைவர்களும் பங்கேற்க இருக்கின்றனர். மேலும், இந்தியா கூட்டணி கட்சிகளின் தொண்டர்கள் சுமார் ஒரு லட்சம் பேர் போராட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, தேர்தல் பிரச்சாரம்!

(திருத்தப்பட்டது)

## தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 01.04.2024 (திங்கட் கிழமை) | கன்னியாகுமரி<br>திருநெல்வேலி |
| 02.04.2024 (செவ்வாய் கிழமை) | திருநெல்வேலி<br>தென்காசி |
| 04.04.2024(வியாழக் கிழமை) | மதுரை<br>தேனி |
| 08.04.2024 (திங்கட் கிழமை) | சென்னை தெற்கு |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18.
29.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

காஞ்சிபுரம் தொகுதி இந்தியா கூட்டணி வேட்பாளர் க.செல்வத்தை ஆதரித்து

# மதுராந்தகத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று தேர்தல் பிரச்சாரம்!

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம், மார்ச் 30

காஞ்சிபுரம் நடாளுமன்றத் தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட் பாளர் க.செல்வத்தை ஆதரித்து மதுராந்தகம் தொகுதியில், கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் இன்று மேற்கொள்கிறார். எனவே காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள கழக முன்னணியினர் தோழர்கள், கூட்டணிக் கட்சி - முன்னணித் தோழர்கள் திரளாகப் பங்கேற்றிட வேண்டுமாய் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில், நாடாளுமன்றத் தேர்தல் வருகிற ஏப்ரல் மாதம் 19-ஆம் தேதி அன்று நடைபெறுகின்றது. இத் தேர்தலில் காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தேர்தலில், இந்தியா கூட்டணி சார்பில் கழக வேட்பாளராக க. செல்வம் போட்டியிடுவார்



என்று திராவிட மாடல் அரசின் நாயகர், கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார். அதன்படி காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி சார்பில் வாக்கு சேகரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் காஞ்சிபுரம் தொகுதி வேட்பாளர் க.செல்வத்தை ஆதரித்து நமது கழக இளைஞர் அணிச் செயலாளர் மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (30.03.2024 சனிக்கிழமை) காலை 10 மணிக்கு மதுராந்தகம் தொகுதியில் அண்ணா பேருந்து நிலையம் அருகில் இருந்து பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

இந்தப் பிரச்சாரத்தில் இந்தியா கூட்டணி வேட்பாளர் க.செல்வத்தை ஆதரித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மக்களிடம் வாக்கு சேகரிக்கிறார்.

எனவே இந்த மாபெரும் தேர்தல் பிரச்சாரத்தில் பங்கேற்று உரையாற்றும் அமைச் சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சாரத்தில் நமது மாவட்டத்தில் அடங்கிய தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய பேரூர்க் கிளைக் கழக நிர்வாகி கள்,அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக முன்னணித் தோழர்கள்

மற்றும் இந்தியா கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், தோழர்கள் அனைவரும் திரளாக இன்று காலை 9 மணிக்கே மதுராந்தகம் அண்ணா பேருந்து நிலையம் அருகில் வருகை தந்து சிறப்பித்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

தலைமை மு.இ.ஏழுமலை! முன்னிலை நந்தனம் மதி எம்.சி.! 123வது வட்ட கழகத்தில்

# தமிழச்சி தங்க பாண்டியனுக்கு மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வாக்கு சேகரிக்கிறார்!

சென்னை, மார்ச் 30

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்குப் பகுதி, 123-வது வட்ட தி.மு.கழகத்தில், தென் சென்னை நாடாளுமன்ற தி.மு.க. வேட்பாளர் முனைவர் திருமதி. சுமதி (எ) தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களுக்கு, வட்ட செயலாளர் மு.இ.ஏழுமலை தலைமையில், மயிலை மேற்கு பகுதி கழக செயலாளர் நந்தனம் மதி எம்.சி. முன்னிலையில், மாவட்ட கழக செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர், மயிலை த.வேலு, தென்சென்னை பாராளுமன்ற கழக வேட்பாளருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரிக்க, 123வது வட்டத்துக்கு உட்பட்ட, அனைத்து தெருக்களிலும் இன்று (30.03.2024 சனிக்கிழமை) மாலை 3.30 மணி அளவில், தேனாம்பேட்டை எல்டாம்ஸ் சாலை சிக்னல் அருகில் இருந்து, பரப்புரை மேற்கொள்ள இருக்கிறார்.

123-வது வட்ட திமுக தேர்தல் பரப்புரை விவரம் வருமாறு:-

எல்டாம்ஸ் சாலை - ஜெகநாதன் தோட்டம் சந்திப்பு, காமராஜர் சாலை 3, கரிமேடு குடிசைப் பகுதி, வெங்கட்ராமன் தெரு, காமராஜர் தெரு 1, காமராஜர் 2, பெரியார் சாலை, பெரியார் சாலை மார்க்கெட் பகுதி, இராமலிங்கேஸ்வரர் கோயில் தெரு 1, இராமலிங்கேஸ்வரர் கோயில் தெரு 2, எல்டாம்ஸ் சாலை திருவள்ளுவர் சாலை சந்திப்பு, திருவள்ளூர் சாலை மந்திர மூர்த்தி சந்திப்பு, சீத்தாம்மாள் ரோடு சந்து, சீத்தாம்மாள் ரோடு, காமராஜர் தெரு, வ.உ.சி. தெரு, பாரதியார் தெரு, திருவள்ளுவர் சாலை சந்து, பக்தவச்சலம் தெரு, வன்னிய புரம், ராஜி நாயக்கன் தெரு, அப்பாதுரை தெரு, கே.பி.தாசன் சாலை குடிசை பகுதி, ராமசாமி ரோடு, பீமன்ன பிரதான சாலை, ஸ்ரீராம் காலனி, பீமன்ன முதல் தெரு, பீமன்ன இரண்டாவது தெரு, ஆனந்தபுரம், டாக்டர் ரங்கா ரோடு, வாரன் ரோடு, சென்மேரிஸ் ரோடு, கால்வாய்கரை சாலை மந்தவெளி ரயில்வே ஸ்டேஷன், கால்வாய்கரை சாலை தாசில்தார் ஆபீஸ் சந்திப்பில் பரப்புரை நிறைவு பெறுகிறது.

இப்பரப்புரையில் 123வது வட்டத்துக்குட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக, அணிகளின், BLA2, BLC நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கழக உறுப்பினர்கள், மற்றும் இந்தியா கூட்டணி அனைத்து கட்சிகள், அனைவரும் கலந்து கொண்டு, தென் சென்னை பாராளுமன்ற கழக வேட்பாளருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேர்க்கும் பரப்புரை மேற்கொள்கின்றனர்.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஊர்களில் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | | பிரச்சாரம் செய்யும் ஊர் |
|---|---|---|
| 02-04-2024 | - | திருவள்ளூர் |
| 03-04-2024 | - | திருத்தணி |
| 04-04-2024 | - | பூவிருந்தவல்லி |
| 05-04-2024 | - | அம்பத்தூர் |
| 06-04-2024 | - | இராணிப்பேட்டை |
| 07-04-2024 | - | காஞ்சிபுரம் |
| 09-04-2024 | - | வேலூர் |
| 10-04-2024 | - | மீஞ்சூர் |
| 11-04-2024 | - | செய்யார் |

மேற்குறிப்பிட்ட இடங்களைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள், இவரது பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் - இன்று திறந்து வைக்கிறார்!

# கலைஞர் நகர் தெற்குப் பகுதி தலைமை தேர்தல் பணிமனை திறப்பு விழா!

## ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா - க.தனசேகரன் - கே.கண்ணன் - மு.ராசா - கன்னிகை ஸ்டாலின் முன்னிலை!

சென்னை, மார்ச் 30-

தென்சென்னை நாடாளுமன்ற திமுக வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்க பாண்டியனை ஆதரித்து, கலைஞர்நகர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் 32/77 அண்ணா பிரதான சாலையில் உள்ள தி.மு.க. பகுதிக் கழக அலுவலக வளாகத்தில், இன்று (30.03.2024), காலை 9 மணியளவில் பகுதி தலைமை 'இந்தியா' கூட்டணி தேர்தல் பணிமனையை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அவர்கள் திறந்து வைக்கிறார்.

விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, கணக்குநிலைக்குழுத் தலைவர் க.தனசேகரன், பகுதிச் செயலாளர்கள் கே.கண்ணன், மு.ராசா, தொகுதிப் பொறுப்பாளர் கன்னிகை G. ஸ்டாலின் ஆகியோர் முன்னிலையில் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் மாநில வர்த்தகரணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம், மாநில அயலக அணி துணைச் செயலாளர் கௌதமன், பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், எஸ்டி.தங்கராஜ், மாவட்ட துணை செயலாளர் வாசுகி பாண்டியன், மகளீரணி பிரச்சார குழு செயலாளர்கள் ரத்னா லோகேஷ்வரன், யாழினி, வி.சி.க. மாவட்ட செயலாளர் கரிகால்வளவன், மமக மாவட்ட செயலாளர் முகமது அலி ஜின்னா, பகுதி காங்கிரஸ் பகுதி தலைவர்கள் பி. ராஜ மாணிக்கம், கே.ராஜ பாண்டி, ம.தி.மு.க. பகுதி செயலாளர் வைகோரவி, சி.பி.எம். பகுதி செயலாளர் E. ரவி, சி.பி.ஐ. பகுதி செயலாளர் தயாளன், திமுக மாவட்ட அமைப்பாளர்கள் ஆர். சசிகுமார், கனிமொழி தனசேகரன், நிஷா சையத், மமக பகுதி செயலாளர்கள் அப்துல்லா, மன்சூர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சிக்கந்தர், முபாரக், மக்கள் நீதி மையம் செல்வம், கொங்கு மக்கள் தேசிய கட்சி பாலசுப்பிரமணியன், ஆம்ஆத்மி வினோத் குமார், தமிழ் மாநில தேசிய லீக் எம். ஹாஜா, கிருஸ்துவ நல்லெண்ண இயக்கம் மேத்யூஸ், சமத்துவ துரை மாணிக்கம், அதிதமுக விஜய், மு.பு.ப மூர்த்தி, பகுதி நிர்வாகிகள் எஸ். உமாபதி, அஜந்தாரவி, அ_பாபு, #தியாகு, வட்ட செயலாளர்கள் இரா.செழியன், பூக்கடை ஆர்.பழனிச்சாமி, பி.கே.குமார், சோ.செந்தில் குமார், மு.அன்பழகன், அ.கதிரேசன், சதீஷ்கண்ணன் ஆகியோர் இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்வில் பகுதிக்குட்பட்ட மாவட்டப் பிரதி நிதிகள், நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டகழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னனியினர் கூட்டணி கட்சியினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் கே.கண்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மதிமாறன் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்- 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, மதிமாறன். இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :-

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 02.04.2024 | - | மதுரை |
| 03.04.2024 | - | தேனி |
| 04.04.2024 | - | திண்டுக்கல் |
| 05.04.2024 | - | கரூர் |
| 06.04.2024 | - | பொள்ளாச்சி |
| 07-04-2024 | - | கோயம்புத்தூர் |
| 08-04-2024 | - | நீலகிரி |
| 09-04-2024 | - | திருப்பூர் |
| 10-04-2024 | - | சேலம் |
| 11-04-2024 | - | நாமக்கல் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நாஞ்சில் சம்பத் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, நாஞ்சில் சம்பத் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :-

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 03.04.2024 | - | திருநெல்வேலி |
| 04.04.2024 | - | விருதுநகர் |
| 05.04.2024 | - | தென்காசி |
| 06.04.2024 | - | தூத்துக்குடி |
| 07.04.2024 | - | இராமநாதபுரம் |
| 08-04-2024 | - | மதுரை |
| 09-04-2024 | - | சேலம் |
| 10-04-2024 | - | கள்ளக்குறிச்சி |
| 11-04-2024 | - | கடலூர் |
| 12-04-2024 | - | பொள்ளாச்சி |
| 13-04-2024 | - | திருப்பூர் |
| 14-04-2024 | - | கோயம்புத்தூர் |
| 15-04-2024 | - | நீலகிரி |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து போஸ் வெங்கட் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, போஸ் வெங்கட் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு: -

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 01.04.2024 | - | சேலம் |
| 02.04.2024 | - | நாமக்கல் |
| 03.04.2024 | - | பெரம்பலூர் |
| 04.04.2024 | - | திருச்சி |
| 05.04.2024 | - | கோயம்புத்தூர் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு

திருநெல்வேலி மத்திய மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் ஒய்.இன்பராஜ், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29-03-2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



துறைமுகம் கிழக்கு பகுதி 56வது வட்டத்தில் மத்திய சென்னை தி.மு.க. வேட்பாளர் தயாநிதி மாறன் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அருகில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளிட்ட ஏராளமான கட்சி தொண்டர்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழகத்தில் இனி கால் நூற்றாண்டுக்கு தி.மு.கழக ஆட்சிதான்!

# கொளத்தூர் தொகுதியில் 75 சதவிகித வாக்குகள் உதயசூரியனுக்குத் தான்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு உறுதி!

சென்னை, மார்ச் 30-

தமிழகத்தில் இனி கால் நூற்றாண்டுகள் தி.மு.கழகத்தின் ஆட்சிதான் என்றும், கொளத்தூர் தொகுதியிலேயே பதிவாகின்ற வாக்குகளில் 75 சதவிகிதம் அளவிற்கு உதயசூரியன் சின்னம் பெரும் என்பதில் எவ்விதமான ஐயமில்லை என்று கொளத்தூர் தொகுதியில் வடசென்னை தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் கலாநிதி வீராசாமியை ஆதரித்து பேசுகையில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு குறிப்பிட்டார்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (29.03.2024) சென்னை, அகரம், ஜெகநாதன் தெருவில், தி.மு.க சென்னை கிழக்கு மாவட்டம், வடசென்னை நாடாளுமன்ற இந்தியா கூட்டணி கட்சியின் வேட்பாளர் டாக்டர். கலாநிதி வீராசாமி அவர்களை ஆதரித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட பொழுது இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவர் பி.கே.சேகர்பாபு பேசியதாவது:

பொற்கால ஆட்சி நடத்தி வரும் இந்தியாவின் இரும்பு மனிதர் என்று அனைவராலும் இன்றைக்கு பாராட்டப் போற்றப்படுகின்றன நலிந்தோர் நலம் காக்குகின்ற குறிப்பாக இன்றைக்கு பெண்ணினத்தின் பேரொளியாக, பெண்கள் முன்னேற்றத்திற்கு பல நல்ல திட்டங்களை அறிவித்து வருகின்றன எங்கள் உயிரினும் மேலான அன்புத் தலைவர் அவர்களுடைய கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் இன்றைக்கு 7 மாநகராட்சி வார்டுகளில் 14 தேர்தல் பணி செய்வதற்குண்டான அலுவலகங்களும், கட்சி ரீதியாக செயல்படுகின்ற இரண்டு பகுதிகளில் பகுதி கழகத்தின் அலுவலகம் என்று 16 அலுவலகங்கள் திறக்குகின்ற நிகழ்ச்சி முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நடத்தி கொளத்தூர் சட்டமன்ற தொகுதி பொறுத்தளவில் தினந்தோறும் தேர்தல் பணியை எப்போதும் செய்து கொண்டிருக்கின்ற கழகத் தோழர்கள் நிறைந்த பகுதி, மக்கள் மீது அக்கறை கொண்ட தலைவரின் நல்வழியை பின்பற்றுகின்ற மக்கள் நலவிரும்பிகள் தான், இந்த தொகுதியில் மாநகராட்சியின் மாமன்ற உறுப்பினர்களாகவும், கட்சியினுடைய முக்கிய பொறுப்புகளில் இருப்பதால் மக்களோடு தினசரி மக்களுடைய பிரச்சனைகளை அணுகுவதால் இந்த முறை இந்த கொளத்தூர் தொகுதியிலேயே பதிவாகின்ற வாக்குகளில் 75% சதவீதம் அளவிற்கு திராவிட முன்னேற்ற கழகம் பதிவாகின்ற வாக்குகளில் உதயசூரியன் சின்னத்திற்கு பெரும் என்பது எந்தவிதமான ஐயமில்லை.

முதலமைச்சர் எங்கள் தளபதி அவர்களால் அறிவிக்கப்பட்ட இந்தியா கூட்டணியின் வேட்பாளர் நம்முடைய அன்பிற்கினிய நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி அவர்கள், நமது ஆட்சி வந்த பிறகு 34 மாதங்கள் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும், ஆட்சி இல்லாத போது அரசிடம் போராடி பல்வேறு நலத்திட்டங்களை பெற்றவர், பல்வேறு அடிப்படை கட்டமைப்புகளை உயர்த்துவதற்குண்டான நடவடிக்கையில் ஈடுபட்டவர். ஆட்சி வந்த பிறகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று உரியகாலத்தில் கொடுங்கையூர் குப்பைகள் கொட்டும் வளாகம், கணேசபுரம் மேம்பாலம். ஆர்.கே. நகர் மேம்பாலம் போன்ற, மக்களுக்கு கால காலத்துக்கும் பயன்படுகின்றன பல நலத் திட்டங்களை கொண்டு வந்தவர். மீண்டும் அவர் தேர்ந்தெடுக்கும் பட்சத்தில் இந்த நாடாளுமன்ற வடசென்னை நாடாளுமன்ற தொகுதியினுடைய வளர்ச்சிக்கும், தேவைகளுக்கும் கட்டமைப்புகளை உயர்த்துவதற்கும் தொடர்ந்து இப்போது போல் பாடுபடுவார்.

முதலமைச்சர் அவர்கள் வடசென்னையில் தனிக்கவனம் செலுத்தி, வடசென்னை வளர்ச்சி திட்டத்தை அறிவித்திருக்கின்றார். சுமார் 2000 கோடி ரூபாய் அளவிற்கு தற்போது வடசென்னையில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. பூங்காக்கள், பேருந்து நிலையங்கள், மருத்துவமனைகள், பள்ளிக்கூட கட்டிடங்கள், கடற்கரையை அழகுபடுத்துகின்ற பணிகள், சந்தைகள், வணிக வளாகங்கள் அதேபோல டயாலிசஸ் அமைப்புகள் என்று கிட்டத்தட்ட மாநகராட்சி சமூக நலக்கூடங்கள் என்று 1,000 கோடி ரூபாய்க்கு மேலாக, ஏற்கனவே வளர்ச்சி திட்டப்பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த மாதம் 14.03.2024ஆம் தேதி, சென்னை தங்க சாலை மணிகுண்டு அருகிலே ரூபாய் 4,414 கோடி அளவிற்கு வளர்ச்சி திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார். அறிவித்தார் என்பதை விட பிரகடனப்படுத்தி இருக்கின்றார்.

நிச்சயம் அந்த பணிகள் அனைத்தையும் மேற்கொண்டு வடசென்னையை தென் சென்னைக்கு நிகராக அனைத்து வசதிகளும் கூடிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கின்ற பொருளாதாரத்தில் நலிவடைந்து இருக்கின்ற அனைவருடைய மேம்பாட்டிற்காகவும் நிச்சயம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற இந்த திட்டங்களை நிறைவேற்றுவார். தொடர் பயணமாக 20 ஆண்டுகளுக்கு இந்த மாவட்டத்தை முன்னேற்றத்துடன் கூடிய ஒரு மாவட்டமாக கொண்டு வருவதற்கு அனைத்து பணிகளையும் தொலைதூர நோக்கோடு திட்டமிட்டுருக்கின்றார்.

இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் இனி கால் நூற்றாண்டுகள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிதான் தமிழகத்திலேயே என்ற நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய தொலைநோக்கு திட்டங்கள் நிச்சயம் வெற்றி பெறும் என்பதில் முழு நம்பிக்கை உள்ளது.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசினார்.



திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி ஆலங்காயம் ஒன்றியம் நாயக்கனூர், புதூர், பூங்குளம் பகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு ‘இந்தியா’ கூட்டணி வேலூர் நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் பொதுமக்களைச் சந்தித்து வாக்குகளைச் சேகரித்தார்.

### கழக அரசின் தேர்தல் அறிக்கை கண்டு பயந்து ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஊதிய உயர்வு!

# பா.ஜ.க. அரசின் கண்துடைப்பு அறிவிப்பு!

## ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேட்டி!

திண்டுக்கல், மார்ச் 30-

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் அறிக்கையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பயனாளிகளுக்கு ஊதியமாக ரூ.400 வழங்கப்படும் என அறிவித்ததையடுத்து மத்திய அரசு கண் துடைப்பிற்காக ஊதிய உயர்வை அறிவித்துள்ளது என ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேட்டியில் போது குறிப்பிட்டார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் அறிக்கையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பயனாளிகளுக்கு ஊதியமாக ரூ.400 வழங்கப்படும் என அறிவித்ததையடுத்து மத்திய அரசு கண் துடைப்பிற்காக ஊதிய உயர்வை அறிவித்துள்ளது என்று ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேட்டியளித்தார். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை முடக்க நினைக்கும் பா.ஜ.க.அரசு 100 நாள் வேலைதிட்டத்தை இந்தியாவில் முழுமையாக செயல்படுத்தாது என அமைச்சர் ஐ.பெரியசாமி கூறினார்.

இந்தியாவில் கடந்த 2006ம் வருடம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் கொண்டு வரப்பட்டது. இது 100 நாள் வேலைவாய்ப்பு திட்டம் என்று அழைக்கப்பட்டு இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்துடன் 100 நாட்களுக்கு உடல் உழைப்பு சார்ந்த வேலைகள் தரப்பட்டது.



இத்திட்டம் மூலம் நாடு முழுவதும் சுமார் 5 கோடியே 97 லட்சம் குடும்பங்கள் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர். தற்போது 100 நாள் வேலை திட்ட பயனாளிகளுக்கு நாள் ஒன்றுக் ஊதியமாக ரூ294 வழங்கப்பட்டு வந்த நிலையில் மத்திய அரசு 4.63 சதவீதம் உயர்த்தி கொடுப்பதாக வித்துள்ளது. இதன்மூலம் 100 நாள் வேலைதிட்ட பயனாளிகளுக்கு ரூ.319 ஊதியமாக கிடைக்கும். மத்திய அரசின் இந்த அறிவிப்பு குறித்து திமுக மாநில துணை பொதுச்செயலாளரும் தமிழக ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் செம்பட்டியில் நிருபர்களை சந்தித்த போது கூறியதாவது

மத்திய அரசு 100 நாள் வேலைதிட்ட பயனாளிகளுக்கு 4.6 சதவீதம் கூடுதலாக வழங்குவதாக அறிவித்திருப்பது கண்துடைப்பே. காரணம் இந்தியா முழுவதும் 100 நாள் வேலைதிட்டத்தை மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு முடக்கி வருவதால் கிராமங்களில் வேலையில்லா திண்டாட்டம் உருவாகி வருகிறது.

100 நாள் வேலைதிட்டம் மூலம் கிராமங்களில் உள்ள ஏழை எளிய கிராம மக்கள் பயனடைகிறார்கள் என்று தெரிந்துதான் திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 100 நாள் வேலைதிட்ட பயனாளிகளுக்கு மத்தியில் இந்திய கூட்டணி தலைமையில் ஆட்சி அமைத்தால் ரூ.400 ஊதியமாக வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு இந்தியா முழுவதும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இதை தெரிந்து கொண்டு தான் மத்தியில் ஆளும் மோடி தலைமையிலான பாஜக அரசு இந்த ஊதிய உயர்வை அறிவித்துள்ளது.

கடந்த 10 வருடங்களாக மத்தியில் ஆட்சியில் அமர்ந்த பா.ஜ.க. அரசு 100 நாள் வேலைதிட்டத்தை முடக்கும் வகையில் அதற்கான நிதியை முறையாக செலவு செய்யாமல் மாற்றுப் பணிகளுக்கு செலவு செய்தது. இது தவிர தமிழகத்தில் 100 நாள் வேலை திட்ட பயனாளிகளுக்கு வழங்க வேண்டிய 125 ஆயிரம் கோடிக்கு பதிலாக 60 ஆயிரம் கோடியை மட்டும் வழங்கியுள்ளது. இவ்வாறு 100 நாள் வேலைதிட்ட பயனாளிகளுக்கு ஊதியம் வழங்காமல் வயிற்றில் அடிக்கும் பாஜக அரசு எப்படி ஊதிய உயர்வை முறையாக கொடுக்கும். திராவிட மாடல் ஆட்சி நாயகன் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் அறிக்கையினை பார்த்து மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசும், எதிர்கட்சியாக உள்ள எடப்பாடி தலைமையிலான அ.தி.மு.க.வும், பொய்யான அறிக்கையை மக்கள் மத்தியில் கொடுத்து வருகின்றனர். மக்களுக்கு தெரியும் யார் சொன்னதை செய்வார்கள், செய்வதை சொல்வார்கள் இதை உணர்ந்தால் போதும். குறிப்பாக ஒன்றை மட்டும் சொல்ல வேண்டும் என்றால் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது தமிழகத்தில் 100 நாள் வேலைதிட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது.

**வெற்று அறிவிப்பு!**

அப்போது நான் தமிழக வருவாய்துறை அமைச்சராக பதவியில் இருந்தபோது 2009ம் வருடம் திண்டுக்கல் மாவட்டம் 100 நாள் வேலைதிட்டத்தை செயல்படுத்தியதற்காக மத்திய அரசு சார்பாக விருது வழங்கப்பபட்டது. அந்த விருதினை அப்போது மாவட்ட ஆட்சியர் வாசுகி தமிழக அரசு சார்பாக பெற்றுக் கொண்டார். அப்போது திண்டுக்கல் மாவட்டத்தில் திட்ட இயக்குநராக பணிபுரிந்த பொன்னையா அவர்கள் தற்போது ஊரக வளர்ச்சி முகமையில் இயக்குநராக உள்ளார் என்றதோடு மத்திய அரசு அறிவித்த இந்த ஊதிய உயர்வு அறிவிப்பு வெற்று அறிவிப்பாகத்தான் இருக்கும். முழுமையாக செயல்படுத்த மாட்டார்கள்.

இதை உணர்ந்து கொண்டு தமிழக வாக்காளர்களாகிய 100 நாள் வேலைதிட்ட பயனாளிகள் வாக்களிக்கும் முன்பு இந்திய கூட்டணியில் தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி வேட்பாளர் போட்டியிடும் சின்னத்தில் வாக்களித்தால் மட்டும் தான் இந்தியாவில் 100 நாள் வேலை திட்டத்தை காப்பாற்ற முடியும்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

### அண்ணாமலை கனவு காணலாம் - ஆனால்

# கோவையில் கழக வேட்பாளர் வெற்றி உறுதி!

## கனிமொழி கருணாநிதி திட்டவட்டம்!

கோவை, மார்ச் 30-

கோவையில் அண்ணாமலை கனவு காணலாம் அது அவரது உரிமை, ஆனால் நிச்சியமாக வெற்றி எங்களுடையது என கனிமொழி கருணாநிதி குறிப்பிட்டார்.

கோவை நாடாளுமன்ற வேட்பாளர் கணபதி ராஜ்குமார் ஆதரித்துத் தேர்தல் பரப்புரை மேற்கொண்டு வரும், திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி கோவையில் அவிநாசி சாலையில் உள்ள தனியார் விடுதியில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

திமுக கூட்டணி வேட்பாளர் கணபதி ராஜ்குமார் கோவையில் நிச்சயமாக வெற்றி பெறுவார் என்பது பிரச்சாரத்தில் தெரிகிறது எனவும் இரண்டாவது இடத்திற்குத் தான் போட்டி இருக்கும் என்பதும் தெளிவாகியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

கடந்த மூன்றாண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக அரசு மக்களுக்குச் செய்திருக்கின்ற திட்டங்கள் அனைத்தும் மக்களுக்குச் சென்றிருக்கிறது என்பதால் திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டணியில் இருக்கும் இந்தியா கூட்டணி ஒன்றியத்தில் உருவாக்க வேண்டும் பாஜக மீண்டும் எந்த பொறுப்புக்கும் வந்துவிடக்கூடாது என்பதில் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள் என்றும் கூறினார்.

நிச்சயமாக இந்த கூட்டணி இங்கு மட்டுமின்றி தமிழகத்தில் போட்டியிடும் 40 இடங்களிலும் தெள்ளத் தெளிவாக இருக்கிறது எனக் குறிப்பிட்ட அவர், ஆயுஷ்மான் திட்டத்தில் ஒன்றிய அரசு ஒரே பெயரில் 10 லட்சம் பயனாளிகளை இணைத்திருப்பதைப் போல் எங்களுக்கு தெரியாது என்றும் மகளிர் உதவித் தொகையை ஒரு கோடியே 15 லட்சம் பெண்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் அந்த திட்டம் மக்களைச் சென்று சேர்ந்திருக்கிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

இதேபோல் காலை உணவுத் திட்டம் மக்களுக்குப் பெரிய அளவில் சென்று இருக்கிறது என்றும் கூறினார். மேலும் தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்திருப்பதாகக் கூறிய அண்ணாமலையின் குற்றச்சாட்டு குறித்த கேள்விக்குப் பதிலளித்த கனிமொழி, போதைப்பொருள் தடுப்பு துறை மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் அதற்கு ஒன்றிய உள்துறை அமைச்சரகம் தான் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர்களுக்கு உதவுவதற்கு மாநில அரசு தயாராக இருக்கிறது என்றும் தெரிவித்தார்.

குஜராத்தில் தான் பல லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அந்த துறைமுகம் யாருடையது என்பது அனைவருக்கும் தெரியும் என்றும் குறிப்பிட்டார்.

இதைப்போல் கோவையில் பாஜக 60 சதவிகித வாக்குகள் பெற்று மிகப் பெரிய வெற்றியைப் பெறும் என்ற அண்ணாமலையின் கருத்து குறித்த கேள்விக்குப் பதில் அளித்த அவர் 60 வாங்கலாம் 90% கூட வாங்கலாம் எனவும் கனவு காண்பது அவரது உரிமை ஆனால் வெற்றி நிச்சயமாக எங்களது தான் என நம்பிக்கை தெரிவித்தார்.

ஒரு பைசா கூட ஓட்டுக்குச் செலவழிக்க மாட்டேன் என்று அண்ணாமலை கூறுகிறார் பின்னர் எதற்காக அவ்வளவு கோடிக்குத் தேர்தல் பத்திரங்கள் வாங்கினார்கள் என்றும் அவர் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் நாங்கள் யாருக்கும் காசு கொடுத்து ஓட்டு வாங்க வேண்டிய அவசியம் கிடையாது.

முதலமைச்சர் திட்டங்களை நம்பித்தான் இங்கே வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள் அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்றார் கனிமொழி கருணாநிதி.



புரசைவாக்கம் தாக்கா தெருவில் உள்ள மசூதியில் இஸ்லாமிய பெருமக்களை கழக வேட்பாளர் தயாநிதிமாறன் சந்தித்து வாக்கு சேகரித்தார். அப்போது கிழக்கு மாவட்ட செயலாளர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பகுதி செயலாளர் சொ. வேலு ஆகியோர் உடனிருந்தனர்.



தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் – மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று முன்தினம் (28–3–2024) வாக்குச் சேகரித்து, சிறப்புரையாற்றினர். இந்நிகழ்வில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ்குமார், பகுதி கழக செயலாளர்கள் வி.இ.மதியழகன், எஸ்.வி.இரவிச்சந்திரன், மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விசுவநாதன், பாலவாக்கம் மு.மனோகரன் மற்றும் கழக முன்னணியினர் தோழமை இயக்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளின் வெற்றி வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்கள் போட்டியிடும் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியின் தலைமைத் தேர்தல் அலுவலகத்தை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். இதில் அமைச்சரும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளருமான தா.மோ.அன்பரசன், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

### தமிழகத்தின் பசுமைப் பரப்பை 25 சதவிகிதமாக உயர்த்த நடவடிக்கை எடுத்தவர் நம் முதல்வர் என்பது கூட

# எதுவும் தெரியாமல் பா.ஜ.க தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலடி!

சென்னை, மார்ச் 30-

தமிழகத்தின் பசுமைப் பரப்பை 25 சதவிகிதமாக உயர்த்த நடவடிக்கை எடுத்தவர் தமிழ்நாடு முதல்வர். இது எதுவும் தெரியாமல் பா.ஜ.க தலைவர் பேசிக்கொண்டு இருக்கிறார் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலடி கொடுத்துள்ளார்.

தென்சென்னை தேர்தல் தலைமைத் தேர்தல் பணிமனை திறப்பு நிகழ்வில் சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாவுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆற்றிய உரை வருமாறு:

தென்சென்னை தேர்தல் பணிமனை 24 மணி நேரமும் பத்து சட்ட வல்லுநர்களுடன் வரும் ஏப்.19 வரை செயல்பட இருக்கிறது. எனவே சைதாப்பேட்டை, தியாகராயர் நகர், மைலாப்பூர், விருகம்பாக்கம், வேளச்சேரி, சோழிங்கநல்லூர் ஆகிய ஆறு சட்டமன்றத் தொகுதிகளின் தி.மு.கழக நிர்வாகிகள், இந்தியா கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் எந்தெந்த நாட்களில் எங்கெங்கு பிரச்சாரப் பணிகளில் ஈடுபட உள்ளார். பிரச்சாரத் திட்டங்கள் குறித்தும், தங்களுடைய சந்தேகங்கள் குறித்தும் இந்த தலைமை தேர்தல் பணிமனையில் கேட்டறியலாம். இங்கு இந்தப் பணிமனை முழு நேரமும் இயங்க இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**வாக்காளர்களிடம் மிகப்பெரிய வரவேற்பு!**

பொதுவாகவே இந்தப் பணி தொடங்கிய நாள்முதல் தோழமைக் கட்சிகளிடையே ஏற்பட்டிருக்கிற எழுச்சி, மக்களிடையே ஏற்பட்டிருக்கிற மாற்றம், ஏற்கனவே நான் செயல்வீரர்கள் கூட்டத்தில் எடுத்துச்சொன்னதைப் போல ஜூன் 3 தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள், ஜூன் 4ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை முடிவு வரும்போது முத்தமிழறிஞருக்கு கொடைகளாய் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம் என்ற அந்த ஒரு செய்தி நமக்கு மகிழ்ச்சியளிக்க இருக்கிறது.

அதேப்போல் வாக்காளர்களிடையே மிகப்பெரிய வரவேற்பு நம்முடைய தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களுக்கு இருந்துகொண்டிருக்கிறது. பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரைகளினால் மக்கள் மத்தியில் நிறைந்து இருக்கிறார். அவர் செய்த பணிகளினால் மக்கள் மன்றத்திலும், குறிப்பாக அனைத்துக்கட்சியினரிடத்தும் பெற்ற நல்மதிப்பு அவர் செல்லும் இடங்களிலெல்லாம் மகிழ்ச்சியோடு வரவேற்பு அளிக்கப்பட்டு வருகிறது. சைதைப்



பகுதியில் கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ் ஏற்பாட்டில் அவரது வாக்குக் கேட்கும் பிரச்சாரப் பயணம் தொடங்கயிருக்கிறது. அதேபோல் மயிலை வேலு ஏற்பாட்டில் மைலாப்பூரில் வாக்கு கேட்க இருக்கிறார். சோழிங்கநல்லூரில் காலை மாலை என இருவேளையும் வாக்குக் கேட்கிற பணி தொடர்ந்து நடைபெற இருக்கிறது.

பொதுவாக கோடை காலமாக இருப்பதால், கொளுத்துகிற வெயிலிலும் காலையும், மாலையும் பொதுமக்களைச் சந்தித்து தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள் வாக்குக் கேட்கிற பணிகளை செய்ய திட்டமிட்டு இருக்கிறார். அதற்கான ஏற்பாடுகளை தி.மு.கழக பகுதி செயலாளர்கள், தோழமை இயக்கங்களின் முன்னணித் தலைவர்கள் செய்து வருகிறார்கள். எனவே அவற்றையெல்லாம் வெற்றிகரமாக அமைத்து ஏற்கெனவே நான் சொல்லியிருப்பதைப் போல, நூறு சதவிகிதம் சால்வைகள், பட்டாடைகள் பேன்றவை அணிவிப்பது போன்றவற்றைத் தவிர்த்தும், அதே அளவுக்கு பொதுமக்களைச் சந்திப்பது வெற்றிகரமாக அமைத்துத் தருமாறும் வந்து இருக்கின்ற நிர்வாகிகளை அன்போடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு தினந்தோறும் தொலைக்காட்சிகளில், பத்திரிகைகளில் வருகிற செய்திகளைப் பார்த்தால், உண்மையிலேயே எப்படி சிரிப்பது என்றே தெரியவில்லை. நேற்று ஒரு கட்சியின் தலைவர் அவர்களுடைய வேட்பாளரை அறிவித்து, அறிமுகப்படுத்தும்போது சொல்கிறார். "சூர்யவம்சம் என்ற படத்தில் தேவயாணியை கலெக்டராக ஆக்கிவிட்டேன். இப்போது என் மனைவி ராதிகாவை எம்.பி. ஆக்கிப் பார்ப்பேன்" என்று சொல்கிறார். இதை வைத்து ஒருவர் சமூக வலைதளத்தில் கேட்கிறார், "தேவயாணி இப்போது எந்த மாவட்டத்தில் கலெக்டராக இருக்கிறார்?" என்று கேட்கிறார். இந்த மாதிரி ஒரு கூத்தும், கூம்மாளமுதாகத் தேர்தல் காட்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**காடுகளை அழித்து தனியார் நிறுவனங்கள்!**

நேற்று பாரதிய ஜனதாக்கட்சியின் தலைவர் கோவையிலே சொல்கிறார். "கோவையின் வெப்பம் என்பது தி.மு.க. ஆட்சியில் 1.5 டிகிரியிலிருந்து 2 டிகிரியாக உயர்ந்திருக்கிறது" என்று சொல்கிறார். அதற்கு உடனடியாக பதிலை பூவுலகு நண்பர்கள் அமைப்பினைச் சேர்ந்த சுந்தர்ராஜன் என்பவர் மிகச் சிறப்பாக சொல்லியிருக்கிறார். "ஒரு கட்சியால் ஒரு நகரத்தின் வெப்பத்தை 2 டிகிரி அதிகரிக்க முடியுமா? இந்த அடிப்படை அறிவுகூட இல்லையா உங்களுக்கு" என்று நான் கேட்கவில்லை, ஒரு சமூக ஆர்வலர் கேட்கிறார்.

இப்படி சொல்லிவிட்டு மேலும் அவர் சொல்கிறார், இன்றைக்கு உலக வெப்பத்தின் சாராசரி ஒன்றரை டிகிரி அல்ல., ஒன்னே முக்கால் டிகிரி அல்ல, 1.45 டிகிரி அதிகரித்திருக்கிறது. இதை சொன்னது உலக வெப்ப மைய அமைப்பு ஐ.பி.சி.சி. சி. எச்., இதை சொல்லியிருக்கிறது. உலக அளவிலேயே சராசரியான வெப்பம் 1.45 டிகிரி என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இது மட்டுமல்ல இன்னொரு கேள்வியையும் கேட்டிருக்கிறார். "ஆத்ம நிர்பர் பாரத்" என்கிற திட்டம், இந்தத் திட்டத்தின்கீழ் மத்திய இந்தியாவில், அதாவது இந்தியாவின் மையப் பகுதியில், ஒரு ஒன்னே முக்கால் ஹெக்டேர் அளவுக்கு காடுகளையெல்லாம் அழித்து, அங்கே பெரிய நிறுவனங்களுக்குத் தாரை வார்த்திருக்கிறது பா.ஜ.க. அரசு. "ஒன்னே முக்கால் ஹெக்டேர் அளவுக்கு காடுகளை அழித்தவர்கள், இன்று வெப்பம் அதிகமாவதைப் பற்றிப் பேசுவது எந்த வகையில் நியாயம்?" என்று மரியாதைக்குரிய பூவுலக அமைப்பினைச் சேர்ந்த சுந்தர்ராஜன் கேட்டிருக்கிறார்.

மரியாதைக்குரிய பாரதிய ஜனதா கட்சியின் தலைவருக்கு இன்னொரு செய்தியும் கூட தெரிவித்துக்கொள்கிறேன். இது வரை எந்த அரசியல் கட்சியும் தேர்தல் அறிக்கையில் வெப்பமயமாதல், சுற்றுசூழல் இந்த மாதிரி விசயங்களைப் பற்றி சொல்லவே மாட்டார்கள். ஆனால் நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொன்னார்கள்.

"ஒரு நாட்டின் பசுமைப் பரப்பு என்பது 33 சதவிகிதம் இருக்க வேண்டும். ஆனால் தற்போது தமிழ்நாட்டின் பசுமைப் பரப்பு என்பது 23.7 சதவிகிதமாக இருக்கிறது. இதை

25 சதவிகிதமாக உயர்த்துவதற்கு 10 ஆண்டுகள் ஆகும். எனவே 7.5 லட்சம் ஹெக்டேருக்கு நாங்கள் பசுமைப் பரப்பை அதிகரிப்போம்" என்று தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்.

**2 கோடியே 80 லட்சம் மரங்கள் நடப்பட்டிருக்கிறது!**

நாங்கள் மரியாதைக்குரிய அண்ணாமலை அவர்களைப் பார்த்துக் கேட்பது, "இந்தியாவில் எந்த மாநில முதல்வராவது, ஒன்றிய அரசின் பிரதமர் உட்பட பசுமைப் பரப்பை உயர்த்துவோம்" என்று சொல்லியிருக்கிறார்களா?

பசுமைப் பரப்பை உயர்த்துவோம் என்று அறிவித்த ஒரே தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஆவார்கள். 23.7 சதவிகிதத்தை 25 சதவிகிதமாக உயர்த்துவோம் என்று, நீங்கள் கூட கேட்கலாம், ரொம்ப குறைவான சதவிகிதமாக இருக்கிறதே என்று, 1.3 சதவிகிதம்தானே என்று, இந்த 1.3 சதவிகிதத்திற்கு 10 லட்சம் ஹெக்டேருக்கு மரங்களை நட வேண்டும்.

நம்முடைய முதல்வர் அவர்கள் 20222023 ஆம் ஆண்டு வண்டலூருக்குப் பக்கத்தில் பசுமை இயக்கம் என்ற ஒரு அமைப்பைத் தொடங்கினார். அதில் 12 ஆயிரம் சதுர கிலோ மீட்டருக்கு உள்நாட்டு மரங்கள் நடனும், அதாவது புங்க மரம், பூவரசன் மரம், அத்தி மரம், வேப்ப மரம், நாவல் மரம் இந்த மாதிரியான நாட்டு மரங்களை 12 ஆயிரம் சதுர கிலோமீட்டருக்கு நடுவோம் என்று தொடங்கி, இதுவரை 2 கோடியே 80 லட்சம் மரங்கள் அதில் நடப்பட்டிருக்கிறது. இந்த மாதிரியான செயல்கள் இதற்கு முன் வேறெப்போதும் செய்ததில்லை.

வெப்பநிலையை உயர்த்திவிட்டோம் என்று தேவையற்ற செய்தியை. தேர்தல் பரப்புரையில் செய்திருக்கிறார் பா.ஜ.க. அண்ணாமலை அவர்கள். இதுபோல் தேவையற்ற பேச்சுகள், கிண்டல்கள், போன்றவை வருகிற ஏப்.17 வரையிலும், வேறு வழியே இல்லை. ஒரு சிறந்த பொழுதுபோக்கு நிச்சயமாக நடக்கும்.

இந்த மேடையைப் பொறுத்தவரை திராவிட முன்னேற்றக் கழகத்தின், தோழமைக் கட்சிகளின் மேடையைப் பொறுத்தவரை இவைகள் அறிவார்ந்த மேடைகள். மிகச் சிறப்பான ஆலோசனைகளை, மக்களுக்கானத் தேவைகளை எடுத்துச் சொல்லுகிற மேடைகள், இந்த ஆட்சியின் சாதனைகளை எடுத்துச்சொல்லுகிற மேடைகளாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே இந்த நேரத்தில் அதற்கு பதில் சொல்வதைக்கூட வருத்தத்தோடுதான் தெரிவிக்கிறோம். எனவே வந்திருக்கிற நிர்வாகிகள் வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களை வாழ்த்தி வேட்புமனுத்தாக்கலுக்கு வழியனுப்பக் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்.



வேளச்சேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 173வது வட்டத்தில், திருவான்மியூர் காமராஜர் காலனி, அடையாறு கஸ்தூரிபாய் நகர், காந்தி நகர், பெரியார் நகர், வாட்டர் டேங்க், ஐஸ்வரியா காலனி, கோவிந்தராஜபுரம், அருணாச்சலபுரம் ஆகிய பகுதிகளில், தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் முனைவர்.த.சுமதி (எ) தமிழச்சி தங்கபாண்டியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் தி.மு.க. அரசின் பல்வேறு திட்டங்களை விளக்கி, வாக்கு சேகரித்தனர். இந்நிகழ்வில், பகுதிச் செயலாளர் துரைகபிலன், வட்டச்செயலாளர்கள், கழக நிர்வாகிகள், முன்னணியினர், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.



திருப்போரூரில் "இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் க.செல்வம் அவர்களை மாவட்ட தி.மு.க. செயலாளர் அமைச்சர் தா. மோ.அன்பரசன் அறிமுகப்படுத்தி வாக்கு சேகரித்தார். உடன் ம.தி.மு.க. துணை பொதுச்செயலாளர் மல்லை சத்யா, விடுதலை சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச்செயலாளர் எஸ்.எஸ்.பாலாஜி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, எல். இதயவர்மன், ஆர்.டி.அரசு, மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஆர்.எஸ்.செந்தில்குமார், மாவட்ட தி.மு.க. பொருளாளர் மாமல்லபுரம் வெ.விசுவநாதன், ஒன்றியச் செயலாளர் பையனூர் சேகர், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ் ஆகியோர் உள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் வடக்கு பகுதி மற்றும் திரு.வி.க. நகர் தெற்கு பகுதியில் வடசென்னை நாடாளுமன்ற கழக வேட்பாளர் கலாநிதி வீராசாமியை ஆதரித்து 29/03/2024 அன்று சென்னை 74வது வட்ட பணிமனை சந்திரயோகி சமாதி சாலையிலும், திருவிக நகர் தெற்கு பகுதி பணிமனை குக்ஸ் சாலையிலும்,75வது வட்ட பணிமனை நம்மாழ்வார்பேட்டையிலும்,73 வது வட்ட பணிமனை பென்சனர்ஸ் லேனிலும்,76வது வட்ட பணிமனை பிரிக்லின் சாலையிலும் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், கழக வேட்பாளர் டாக்டர் கலாநிதி வீராசாமி, தேர்தல் பொறுப்பாளர் பி.எம்.யாழினி, திரு.வி.க. நகர் தெற்கு பகுதி செயலாளர் எம்.சாமிக்கண்ணு, திரு.வி.க.நகர் வடக்கு பகுதி செயலாளர். செ.தமிழ்வேந்தன், இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் டி லோகேஷ், வட்ட கழகச் செயலாளர்கள் வி.கே. வெங்கடேசன், எஸ்.சசிகுமார், எஸ்வெ.ங்கடேசன், எம்.தமீம் பாய் பொல்லுசுரேஷ், கிருஷ்ணகுமார், எஸ்பு.ஷ்பராஜ், மா.ருத்ரமூர்த்தி, பரிமளா சுரேஷ்பாபு, எம்.ஏ .டீக்கா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி உறுதி!

# கலைஞரின் 101-வது பிறந்த நாள் பரிசாக 40-க்கு 40 தொகுதிகள் வெற்றியை சமர்ப்பிப்போம்!

## திருவள்ளூர் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!



**திருவள்ளூர், மார்ச் 30-**

**திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பொன்னேரியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு திருவள்ளூர் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் சசிகாந்த் செந்திலுக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தார்.**

**அப்போது, அவர் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி உறுதியாகிவிட்டது. கலைஞரின் 101 வது பிறந்த நாள் பரிசாக 40க்கு 40 தொகுதிகள் வெற்றி பெற்று, கலைஞரின் காலடியில் அந்த வெற்றியை சமர்ப்பிப்போம் என்று சூளுரைத்தார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது.

தொடர்ந்து ஆறு நாட்களாகப் பிரச்சாரம் செய்து கொண்டிருப்பதால், எனக்குத் தொண்டை கட்டிக் கொண்டிக்கிறது. இருந்தாலும், இவ்வளவு சிறப்பான எழுச்சியான, உற்சாகமான வரவேற்பு அளித்த உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### இந்தியா கூட்டணி, வெற்றிக் கூட்டணி!

திருவள்ளூர் நாடாளுமன்றத் தொகுதி, இந்த பொன்னேரி சட்டமன்றத் தொகுதியில் நமது வெற்றிக் கூட்டணி, இந்தியா கூட்டணியின் சார்பாக திருவள்ளூர் தொகுதியில் போட்டியிடுகின்ற நம் கூட்டணிக் கட்சி காங்கிரஸ் பேரியக்கத்தின் வெற்றி வேட்பாளர் முத்தமிழறிஞர் கலைஞரின் ஆசியைப் பெற்ற வேட்பாளர், அன்னை சோனியா காந்தி அவர்களின் அன்பைப் பெற்ற வேட்பாளர், என் அருமைச் சகோதரர் ராகுல் காந்தி அவர்களின் ஆதரவைப் பெற்ற வேட்பாளர், நம் தமிழ்நாட்டு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்ற வேட்பாளர், எல்லாவற்றைவிடவும் முக்கியம் இங்கு இருக்கக்கூடிய திருவள்ளூர் நாடாளுமன்ற வாக்காளப் பெருமக்கள் உங்களின் அன்பையும் ஆதரவையும் பெற்ற வேட்பாளர் அருமைச் சகோதரர் சசிகாந்த் செந்தில் அவர்களுக்கு நம் வெற்றிச் சின்னமாம் கை சின்னத்தில் வாக்கு கேட்க நான் வந்திருக்கிறேன்.

### வாழ்த்தி அனுப்பினார்கள்!

முதலில் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். இந்த உச்சிவெயிலில் இவ்வளவு சிறப்பான வரவேற்பு அளித்திருக்கிறீர்கள். கிட்டத்தட்ட நான் ஒரு 10.45 மணிக்கு வந்திருக்க வேண்டும். ஆனால், வரும் வழியெல்லாம் முழுக்க முழுக்கப் பொது மக்களின் வரவேற்பு, கழகத்தினரின் வரவேற்பு, கூட்டணிக் கட்சிகளின் வரவேற்பு, வண்டியை நிறுத்தி `நீங்கள்தான் வெற்றி பெறப் போகிறீர்கள்', `தி.மு.க கூட்டணி வெற்றி பெறப்போவது உறுதி', `இந்தியா கூட்டணி வெற்றி பெறப்போவது உறுதி', 'நரேந்திர மோடி வீட்டுக்குப் போவது உறுதி. நீங்கள் தைரியமாகப் போங்கள்' என்று என்னை வாழ்த்தி அனுப்பினார்கள். அதனால்தான் வருவதற்குக் கொஞ்சம் தாமதமாகிவிட்டது.

இருந்தாலும், இந்த உச்சி வெயிலைப் பொறுத்துக் கொண்டு, இந்த உச்சவெயிலைவிட உக்கிரமாக இந்த ஒன்றிய அரசை விரட்டியே தீர்வோம் என்று இவ்வளவு எழுச்சியோடு கூடியிருக்கிறீர்களே அதற்கு முதலில் என்னுடைய நன்றி.

### குறைந்தது 5 லட்சம் வாக்குகள்!

சென்ற 2019- ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் போது இதே இடத்தில் நான் என் பிரச்சாரத்தை மேற்கொண்டேன். அப்போது நம் அண்ணன் காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த வேட்பாளர் ஜெயக்குமார் அவர்களுக்கு மூன்று லட்சத்தை 57 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுக் கொடுத்தீர்கள். அதற்கு, முதலில் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், இந்த முறை அந்த மூன்று லட்சத்து 57 ஆயிரம் வாக்குகள் பத்தாது.

சென்ற முறை நம் எதிரிகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து வந்தார்கள். இன்றைக்கு எல்லோரும் பிரிந்து பிரிந்து நிற்கிறார்கள். குறைந்தது 5 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் நம் வெற்றி வேட்பாளர் சசிகாந்த் செந்தில் அவர்களை கை சின்னத்தில் வாக்களித்து நீங்கள் மிகப்பெரிய வெற்றியை கொடுக்க வேண்டும்.

### வாக்குறுதி கொடுக்கிறேன்!

நான் இப்போது உங்களுக்கு ஒரு சவால் கொடுக்கிறேன். நீங்கள் குறைந்தது 5 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் கை சின்னத்தில் வாக்களித்து சகோதரர் சசிகாந்த் செந்தில் அவர்களை நீங்கள் நாடாளுமன்றத்திற்கு அனுப்பிவிட்டீர்கள் என்றால், நான் உங்களுக்கு வாக்குறுதி கொடுக்கிறேன், மாதம் இரண்டு நாள் நான் இங்கே வந்து திருவள்ளூர் பகுதியில் தங்கி, உங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து, உங்கள் மாவட்டச் செயலாளருடன் சேர்ந்து முதலமைச்சரிடம் கொண்டு சென்று இந்த நாடாளுமன்றத் தொகுதிக்கு என்னென்ன தேவையோ அத்தனை தேவைகளையும் நான் உறுதி செய்து கொடுக்கிறேன். இப்போது நான் வாக்குறுதி கொடுத்துவிட்டேன். கண்டிப்பாக நீங்கள் செய்தீர்கள் என்றால், என் வாக்குறுதியை நான் காப்பாற்றுவேன்.

கையைக் காட்டிச் சொல்லுங்கள், என்ன சின்னம், கை சின்னம்! ஏப்ரல் 19 -ஆம் தேதி வாக்குச்சாவடிக்குச் செல்கிறீர்கள். உங்கள் கண்ணுக்குத் தெரியப் போவது இரண்டே இரண்டு விஷயங்கள்தான். ஒன்று, நம் வெற்றிச் சின்னமாம் கூட்டணிச் சின்னம் 'கை' சின்னம். அதே போல, நம் வெற்றி வேட்பாளர் சசிகாந்த் செந்தில் அவர்களின் பெயர். இந்த இரண்டையும் பார்த்து, நீங்கள் போடுகிற வாக்கு, ஒன்றியப் பிரதமர் நரேந்திர மோடி ஆட்சிக்கு வைக்கும் வேட்டு.

### திறமையான வேட்பாளர்!

2021-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் பிரச்சாரத்திற்கு வந்திருந்தேன். அப்போது நம் கழகக் கூட்டணி வேட்பாளர் அண்ணன் துரை சந்திரசேகர் அவர்களுக்கு வாக்குச் சேகரிக்க வந்திருந்தேன். கிட்டத்தட்ட பத்தாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அவரையும் நீங்கள் வெற்றி பெற வைத்தீர்கள். அதற்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முறை நான் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், சகோதரர் ராகுல் காந்தி அவர்களுக்கும் மிகுந்த நன்றி சொல்லியே ஆக வேண்டும். ஏனென்றால், சிறந்த திறமையான வேட்பாளரை, இளைஞர் வேட்பாளரை உங்களிடம் ஒப்படைத்து இருக்கின்றனர்.

### தொகுதிக்காகப் பாடுபடுவார்!

இன்னும் செல்லப்போனால்ம் சகோதரர் சசிகாந்த் செந்தில் சாதாரணமானவர் கிடையாது. நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள், அவருக்கு இது முதல் தேர்தல் என்று. கிடையாது அவர் ஏற்கெனவே கர்நாடகாவில் பா.ஜ.க-வின் கண்ணில் விரலை விட்டு ஆட்டியவர்தான். அப்படிப்பட்ட ஒரு நல்ல வேட்பாளரை, திருவள்ளூர் தொகுதிக்கு நம் கூட்டணிக் கட்சிக்கு கை சின்னத்தில் போட்டி போட, திருவள்ளூருக்கு வாய்ப்பளித்ததற்கு சகோதரர் ராகுல் காந்தி அவர்களுக்கும், அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், நம் தலைவருக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் அத்தனை பேரும் உங்கள் நன்றியைத் தெரிவிக்க வேண்டும். ஏனென்றால், ஒரு மிகச் சிறந்த நல்ல வேட்பாளரை உங்களிடம் ஒப்படைத்திருக்கின்றனர். கண்டிப்பாக இவர் வெற்றி பெற்றால், இந்தத் தொகுதிக்காகப் பாடுபடுவார். இந்த பொன்னேரி சட்டமன்றத் தொகுதியில் கடந்த மூன்று வருடத்தில் சில பணிகளைச் செய்திருக்கிறோம். அதை மட்டும் இந்த நேரத்தில் நான் உங்களிடம் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

### 37 தார் சாலைகள், 33 சிமெண்ட் சாலைகள்!

பொன்னேரி தொகுதியில் 13 கோடியே 27 லட்சம் மதிப்பீட்டில் 37 தார் சாலைகள், 33 சிமெண்ட் சாலைகள், 62 பேவர் பிளாக் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. பொன்னேரிக்கு நீண்ட நாள் நிலுவையில் இருந்த ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடப் பணிகள் 42 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. பெரியபாளையம் பவானி அம்மன் திருக்கோவில் பக்தர்களின் வசதிக்காக திருமண மண்டபம், பக்தர்கள் தங்குமிடம் உள்ளிட்ட வசதிகளுக்காக 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆரணி ஆற்றின் கறைகள் இருபுறங்களிலும் கான்கிரீட் சுவர்கள் அமைக்கும் பணி 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீனவர்களின் நலனுக்காக 29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட முகத்துவாரப் பணிகள் நிறைவேறப்பட உள்ளன. பொன்னேரி சின்ன காவானம் இடையே 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மீஞ்சூர் திருப்பாலைவானம் இடையே கிட்டத்தட்ட 70 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் இரயில்வே மேம்பால பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 55 கோடி ரூபாய் மதிப்பிலான பொன்னேரி பாதாள சாக்கடைப் பணிகள் கிட்டத்தட்ட 99 சதவிகிதம் முடிவடைந்துள்ளன. அது விரைவில் பயன்பாட்டுக்கு வர உள்ளது.

### 'செய்வதைத்தான் சொல்வார்'

இப்போது இந்தத் தொகுதிக்கான வாக்குறுதிகளைச் சொல்கிறேன். நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு தேர்தலின் போதும் தேர்தல் அறிக்கையை வெளியிட்டு விட்டுச் சொல்வார். 'சொல்வதைச் செய்வோம் செய்வதைத்தான் சொல்வோம்' என்று. அவ்வாறு செய்து கட்டிய தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவரின் வழியில் வந்த நம் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் சொல்வதைத்தான் செய்வார், செய்வதைத்தான் சொல்வார்.

தேர்தல் அறிக்கையில் இந்தப் பகுதிக்குச் சில வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார். அதில் சில வாக்குறுதிகளை மட்டும் இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். பொன்னேரி அரசு மருத்துவமனை அனைத்து வசதிகளுடன் முதல் தரமான மருத்துவமனையாக மாற்றி அமைக்கப்படும். அனைத்து குக்கிராமங்களுக்கும் பேருந்து வசதி விரிவுபடுத்தப்படும்.

குடிநீர்ப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும். தொகுதியைச் சுற்றியுள்ள அனைத்துத் தொழிற்சாலைகளிலும் இளைஞர் மற்றும் பெண்களுக்கு 50 சதவிகித வேலை வாய்ப்பை உறுதி செய்து தருவோம். மாதவரம் அல்லது விம்கோ நகரில் இருந்து மெட்ரோ இரயில் சேவை மீஞ்சூர் வரை நீட்டிக்கப்படும். பாரம்பரிய மீனவ சமுதாய மக்கள் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்.

### தேசிய மீனவர் நல ஆணையம்!

மீனவர்கள் நலம் காக்க தேசிய மீனவர் நல ஆணையம் அமைக்கப்படும். இயற்கைச் சீற்ற நேரங்களில் ஆழ்கடலில் மீனவர்கள் மாயமாவதைத் தடுக்க தடையற்ற தொலைத்தொடர்பு வசதி ஏற்படுத்தித் தரப்படும்.

100 நாள் வேலை திட்டத்தில் கொடுக்க வேண்டிய தொகையை ஒன்றிய அரசு குறைத்துவிட்டது. பா.ஜ.க, அ.தி.மு.க.காரர்கள் வரும் போது அதுகுறித்து அவர்களிடம் கேள்வி கேளுங்கள்.

நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டி திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் என ஐந்து கையெழுத்துக்களைப் போட்டு அந்தத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். இந்தத் திட்டங்களை மட்டும் மக்களிடம் கூறி நம் பிரச்சாரத்தைத் தொடர வேண்டும்.

நான் ஒன்றிய அரசு, பா.ஜ.க அரசு 29 பைசாவைக் கேள்வி கேட்கிறேன். ஆனால், யாருக்குக் கோபம் வருகிறது. 'பாதம் தாங்கி' பழனிச்சாமிக்குக் கோபம் வருகிறது. ஏனென்றால், அவர்களுக்குள் வேறு ஒன்றும் இல்லை, கள்ளக்காதல். பத்து வருடம் ஒன்றாகக் கூட்டணியில் இருந்து கொண்டு, தமிழ்நாட்டிற்குத் தேவையான எந்தத் திட்டத்தையும் கொண்டு வராமல், அனைத்து மாநில உரிமைகளையும் விட்டுக் கொடுத்துவிட்டு நீட் தேர்வைக் கொண்டு வந்து, மொழி உரிமையை விட்டுக் கொடுத்து, கல்வி உரிமையை விட்டுக் கொடுத்து, நிதி உரிமையை விட்டுக் கொடுத்து விட்டு, இப்போது சி.ஏ.ஏ சட்டத்தைக் கொண்டு வந்து அனைத்து உரிமைகளையும் விட்டுக் கொடுத்துவிட்டார்கள்.

### முதுகெலும்பு இல்லாத ஒரே மனிதர்!

இன்று 'பாதம் தாங்கி' பழனிச்சாமி சொல்கிறார். `ஆமாம் நான் தவழ்ந்து தான் போனேன்' என்கிறார். அவர் யாரைப் பார்த்தாலும் முட்டி போட்டுவிடுகிறார். மோடியைப் பார்த்தால் படுத்துவிடுகிறார். அமித் ஷாவைப் பார்த்தால் படுத்துவிடுகிறார். அதாவது மனிதனுக்கு முதுகெலும்பு இருக்கிறதா இல்லையா? அது எதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிமிர்ந்து நிற்க. ஆனால், உலகிலேயே முதுகெலும்பு இல்லாத ஒரே மனிதர் யார் என்றால் திரு 'பாதம் தாங்கி' பழனிச்சாமி அவர்கள்தான்.

நான் இந்த நேரத்தில் அவரிடம் சில கேள்விகளை மட்டும் அவரிடம் உங்கள் முன் நான் கேட்கிறேன்.

முதல் கேள்வி, திரு 'பாதம் தாங்கி' பழனிச்சாமி அவர்களே, நீங்கள் உரிமைகளை மீட்போம் என்று இப்போது சொல்கிறீர்கள். தமிழ்நாட்டைக் காப்போம் என்று இப்போது சொல்கிறீர்கள். நடப்பது சட்டமன்றத் தேர்தலா? நாடாளுமன்றத் தேர்தலா? அப்போது நீங்கள் யாரிடமிருந்து உரிமைகளைக் காப்பாற்றப் போகிறீர்கள்?

நாம் இதுவரைக்கும் '29 பைசா' என்று சொல்லி அவர்களைக் கேள்வி கேட்கிறோம். அமித்ஷா அவர்களைக் கேள்வி கேட்கிறோம். இதுவரைக்கும் ஒரே ஒரு கேள்வி `திரு 29 பைசா'வைப் பார்த்து நீங்கள் கேள்வி கேட்டீர்களா? எங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யுங்கள் என்று சொன்னீர்களா? மக்கள் இவ்வளவு பாதிக்கப்பட்டார்களே, அதற்காக நாம் 37 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீடு கேட்டோமே, ஆனால், ஒன்றிய அரசு இதுவரைக்கும் ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லையே..! ஆனால், நம் தலைவர் அவர்கள் பாதிக்கப்பட்ட அத்தனைக் குடும்பங்களுக்கும் 6 ஆயிரம் ரூபாய் இழப்பீடு கொடுத்திருக்கிறார்.

### தைரியம் உங்களுக்கு இருக்கிறதா?

இரண்டாவது கேள்வி, நாங்கள் மோடி மீண்டும் பிரதமர் ஆகக்கூடாது என்று சொல்கிறோம். மோடி வரவே கூடாது என்று சொல்கிறோம். உங்களால் சொல்ல முடியுமா? உங்களுக்கு அந்த தைரியம் இருக்கிறதா? உங்களுக்கு அந்த துப்பு இருக்கிறதா? திராணி இருக்கிறதா? பாதம் தாங்கி பழனிச்சாமி அவர்களே மோடி வரக்கூடாது என்று சொல்கின்ற தைரியம் உங்களுக்கு இருக்கிறதா?

அ.தி.மு.க-வின் முன்னாள் அமைச்சர்கள் வீட்டில் நம் அரசு டி.வி.எ.சி சோதனை செய்தார்கள். அப்போது தி.மு.கவைக் கண்டித்து, அறிக்கைகள் எல்லாம் விட்டீர்கள். ஆனால், இப்போது நான்கு நாட்களுக்கு முன்பு உங்களின் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் வீட்டில் ஈ.டி ரெய்டு நடந்தது. வாயைத் திறந்தீர்களா? குறைந்தபட்சம் ஒரு வேண்டுகோளாவது வைத்தீர்களா? எதுவுமே கிடையாது.

இதையெல்லாம் தட்டிக் கேட்க வேண்டும் என்றால், வருகின்ற ஏப்ரல் 19-ஆம் தேதி வாக்குச் சாவடிக்குச் சென்று நீங்கள் கை சின்னத்தில் சகோதரர் சசிகாந்த் செந்தில் அவர்களுக்கு வாக்களித்து, கிட்டத்தட்ட 5 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் அவரை நீங்கள் வெற்றி பெற வைக்க வேண்டும்.

இந்த திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் இதுவரைக்கும் நடக்கவில்லை. எனவே, இந்தப் பிரச்சாரக் கூட்டத்தையே வேட்பாளர் அறிமுகக் கூட்டமாகக் கருதி நீங்கள் அனைவரும் நம் சகோதரர் சசிகாந்த் செந்தில் அவர்களின் வெற்றிக்காகப் பாடுபட வேண்டும்.

உங்களிடம் நான் ஒன்றே ஒன்றை மட்டும் கேட்டுக்கொள்கிறேன். வரும் ஜூன் 3 ஆம் தேதி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 101-வது பிறந்தநாள். வாக்கு எண்ணிக்கை ஜூன் 04-ஆம் தேதி.

நான் இதுவரைக்கும் 11 நாடாளுமன்றத் தொகுதிகளில் பிரச்சாரம் செய்து முடித்துவிட்டேன். நான் அடித்துச் சொல்கிறேன், நிச்சயமாகச் சொல்கிறேன், சவால் விடுகிறேன். இந்த 11 தொகுதிகளிலும் வெற்றி பெறப்போவது நமது கூட்டணிதான். ஆனால், நான் உங்களிடம் கேட்பது கலைஞரின் பிறந்த நாள் பரிசாக 40-க்கு 40 தொகுதிகள் வெற்றி பெற்று நம் தலைவர் கலைஞரின் காலடியில் அதைச் சமர்ப்பிக்க வேண்டும்.

### உங்கள் வீட்டுப் பிள்ளை!

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால் தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாக, பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன், கை சின்னத்தில் வாக்களித்து நம் சகோதரர் அவர்களை 6 இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு உங்கள் வரவேற்புக்கும் வாய்புக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

சட்டமன்ற உறுப்பினரும், மாவட்டக் கழகச் செயலாளருமான டி.ஜே.கோவிந்தராஜன், சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் சுதர்சனம், மாநிலங்களவை உறுப்பினர் திருவள்ளூர் நாடாளுமன்றத் தொகுதி பார்வையாளர் கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர் காங்கிரஸ் பேரியக்கத்தின் மாவட்டத் தலைவர் துரை.சந்திரசேகர், முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் இ.ஏ.பி. சிவாஜி, மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர்கள் அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன்,

பொன்னேரி தொகுதியின் பொறுப்பாளர் அழகிரி சதாசிவம், தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச் செயலாளரும் சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான சி.எச். சேகர், மாநில வர்த்தகர் அணியின் துணை செயலாளர் கே.ஜி.பாஸ்கர், கொள்கைப் பரப்புச் செயலாளர் அன்புவாணன், அயலக அணியின் துணைச் செயலாளர் ஸ்டாலின், மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் துணைச் செயலாளர் ஏ.ஆர்.டி.உதயசூரியன் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மதன்குமார்உள்பட கழக நிர்வாகிகள், இந்தியா கூட்டணிக் கட்சியினர் பலரும் கலந்து கொண்டனர்.



வேலூர் கோட்டை மைதானத்தில் வருகிற 2ந் தேதி நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்ய வருகைதரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் விழா மேடையினை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் சுஜாதா, மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன், பகுதிச் செயலாளர்கள் வி.ஜி.கே.சுந்தர விஜி, முரளி கிருஷ்ணன், மாமன்ற உறுப்பினர் வீ.எஸ்.முருகன், மாநகர துணை அமைப்பாளர் முன்னாஷெரீப், கலை இலக்கிய அணிஉமாசந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாநகராட்சி மசூதியில் இஸ்லாமிய சகோதரர்களிடம் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. இந்தியா கூட்டணி கட்சியின் சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் க.செல்வம் அவர்களை ஆதரித்து வாக்கு சேகரித்தார். உடன் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார், மேயர் திருமதி. மகாலட்சுமி யுவராஜ் மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், கழக மாநகர நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

திருச்சி, புதுக்கோட்டை, தூத்துக்குடி, நீலகிரி, கோவையில்

# கர்நாடக மாநில கழக இலக்கிய அணியினர் பிரச்சாரம்!

## போர்முரசு கதிரவன் தலைமையில் !

பெங்களூரு, மார்ச் 30 -

தி.மு.க. தலைமைக் கழக பேச்சாளரும் கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி செயலாளருமான போர் முரசு கதிரவன் தலைமையில் தமிழ்நாட்டில் தேர்தல் பிரச்சாரம் செய்யப்பட உள்ளது. ஏப்ரல் 4ம் தேதி இவரது தலைமையில் பெங்களூரில் இருந்து தங்கவயல் கரிகாலன் தாமோதரன் உள்ளிட்டோர் தமிழ்நாட்டிற்கு புறப்பட்டு செல்கின் றனர். அங்குதிருச்சிபுதுக்கோட்டை தூத்துக்குடி நீலகிரி மற்றும் கோவை நாடாளுமன்றத் தொகுதிகளில் தீவிர பிரச்சாரம் செய்து வாக்குகள் சேகரிக்கின்றனர்.

இந்த தொகுதிகளில் வீதி வீதியாகச் சென்று வாக்காளர்களை சந்தித்து வாக்குகள் கேட்கின்றனர்.

மேலும் துண்டு பிரசுரங்களும் விநியோகம் செய்கின்றனர்.

இது குறித்து கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி செயலாளர் போர் முரசு கதிரவன் கூறியிருப்பதாவது. நாடும் நமதே நாற்பதும் நமதே என்பதே திராவிட மாடல் ஆட்சியின் சரித்திர நாயகன் தளபதி முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களின் இலக்காக உள்ளது. தமிழன் எங்கு பிறந்தாலும் தமிழனே அயலான் எங்கு பிறந்தாலும் அயலானே என்ற பாவேந்தர் பாரதிதாசன் பாடல் வரிகளுக்கு விளக்கமாக கர்நாடக மாநிலத்தில் இருந்து நாங்கள் புறப்பட்டு சென்று தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரம் செய்ய இருக்கிறோம்.

தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், தளபதி முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் படை வரிசையில் தமிழ்நாடு உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்கிறது. எனவே சமூக அக்கறை கொண்ட மனிதநேயம் கொண்ட சமத்துவ சமநீதி தழைக்க தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ள இந்த தலைவர்களின் வழிகாட்டுதல் படி தமிழ் நாட்டில் அனைத்து தொகுதிகளிலும் கழக வேட்பாளர்கள், கூட்டணி வேட்பாளர்கள் மாபெரும் வெற்றி பெற வேண்டும் என்பதே எங்களின் மனவிருப்பம் அது தான்தமிழ்நாட்டு மக்களின் லட்சியமாகவும் உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வாசு விக்ரம் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல் -19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, வாசு விக்ரம் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு:-

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 03.04.2024 | - | திருவள்ளூர் |
| 04.04.2024 | - | அரக்கோணம் |
| 05.04.2024 | - | வேலூர் |
| 06.04.2024 | - | கிருஷ்ணகிரி |
| 07.04.2024 | - | திருவண்ணாமலை |
| 08.04.2024 | - | ஆரணி |
| 09.04.2024 | - | காஞ்சிபுரம் |
| 10.04.2024 | - | திருபெரும்புதூர் |
| 11.04.2024 | - | தென்சென்னை |
| 12.04.2024 | - | மத்திய சென்னை |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து முக்குலத்தோர் புலிப்படைத் தலைவர் கருணாஸ் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, முக்குலத்தோர் புலிப்படை தலைவர் கருணாஸ் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு:-

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 02.04.2024 | - | சிவகங்கை |
| 03.04.2024 | - | இராமநாதபுரம் |
| 04.04.2024 | - | இராமநாதபுரம் |
| 05.04.2024 | - | திருநெல்வேலி |
| 06.04.2024 | - | தென்காசி |
| 07-04-2024 | | விருதுநகர் |
| 11-04-2024 | | தேனி |
| 12-04-2024 | | தேனி |
| 13-04-2024 | | மதுரை |
| 14-04-2024 | | திண்டுக்கல் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்கான கலைஞர் நகர் வடக்கு - கலைஞர்நகர் தெற்கு மற்றும்

## சைதை மேற்கு - சைதை கிழக்குப் பகுதிகளில் தேர்தல் பணிமனைகள் திறப்பு!

### மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு



தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்கான தேர்தல் பணிமனைகள் கலைஞர் நகர் தெற்கு மற்றும் கலைஞர் நகர் வடக்கு பகுதிகளில் இன்று (30-3-2024) காலையிலும், சைதை மேற்குப் பகுதி மற்றும் சைதை கிழக்குப் பகுதிகளில் இன்று (30-3-2024) மாலையிலும் திறந்து வைக்கப்படுகின்றன.

கலைஞர்நகர் தெற்குப் பகுதியில் இன்று (30-03-2024) காலை 9 மணியளவில் பகுதி கழக செயலாளர் கே.கண்ணன் தலைமையில் தேர்தல் பணிமனை திறந்து வைக்கப்படுகிறது. கலைஞர்நகர் வடக்குப் பகுதியில் இன்று காலை 10 மணியளவில் பகுதி கழக செயலாளர் மு.இராஜா தலைமையில் தேர்தல் பணிமனை திறந்து வைக்கப்படுகிறது.

சைதை மேற்குப் பகுதியில் இன்று (30-3-2024) மாலை 5 மணியளவில் பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் தேர்தல் பணிமனை திறந்து வைக்கப்படுகிறது. சைதை கிழக்குப் பகுதியில் மாலை 6 மணியளவில் பகுதி கழக செயலாளர் இரா.துரைராஜ் தலைமையில் தேர்தல் பணிமனை திறந்து வைக்கப்படுகிறது.

எனவே விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கலைஞர் நகர் தெற்கு - கலைஞர் நகர் வடக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கழக நிர்வாகிகளும், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சைதை மேற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த கழக நிர்வாகிகளும் தவறாமல் பங்கேற்றிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**- தென்சென்னை தொகுதி தேர்தல் பணிக்குழு.**

தென்காசி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட

## வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு!

### மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தென்காசி, மார்ச் 30 -

தென்காசி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதியில் கீழ்க்காணும் நபர்கள் தொகுதி பார்வையாளருடன் இணைந்து தேர்தல் பணியாற்ற தேர்தல் பணிக் குழுவில் நியமனம் செய்யப்படுகிறார்கள்.

அது பற்றிய விவரம் வருமாறு.

தேர்தல் பணிக்குழு வாசுதேவநல்லூர் தொகுதி. நல்லசேதுபதிதொகுதி பார்வையாளர் மாநில விவசாய அணி துணைச் செயலாளர். யு.எஸ்.டி.சீனிவாசன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.ஆ.சரவணன்தலைமை தீர்மானக் குழு உறுப்பினர். பரமகுரு



தலைமை தீர்மானக் குழு உறுப்பினர்.

மனோகரன்மாவட்ட துணைச் செயலாளர்.

தேவதாஸ்பொதுக்குழு உறுப்பினர்.

வேலுச்சாமி பாண்டியன் பொதுக்குழு உறுப்பினர். சாகுல்ஹமீதுபொதுக் குழு உறுப்பினர். விஜயா நகர்மன்ற தலைவர்,மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர். கோமதி சங்கரிசிவகிரி பேரூர் தலைவர். இந்திராராயகிரி பேரூர் தலைவர் லாவண்யாவாசுதேவநல்லூர் பேரூர் தலைவர். ராசையா என்ற ராசாகழக உறுப்பினர், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர். பிச்சையாவழக்கறிஞரணி அமைப்பாளர். முகேஷ் இளைஞர் அணி அமைப்பாளர். மணிகண்டன்இளைஞர் அணி துணை அமைப்பாளர். நாகூர்கனி சிறுபான்மை நல அணி அமைப்பாளர். விஜய பாண்டியன்சுற்றுச்சூழல் அணி தலைவர். கார்த்திக் குமார் சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர். மணிகண்டன்மருத்துவரணி அமைப்பாளர். வெள்ளத்துரைதொண்டரணி தலைவர். மாடசாமிவிவசாய அணி அமைப்பாளர். செண்பகுற்றாலம்பொறியாளர் அணி துணைத் தலைவர். ராகவன்ஆதிதிராவிடர் அணி துணைத்தலைவர். ரமேஷ்நெசவாளர் அணி துணை அமைப்பாளர். உமாமகேஸ்வரிமகளிர் தொண்டர் அணி தலைவர். கவிதாமகளிர் அணி வலைதள பொறுப்பாளர். நீலமேகம் இலக்கிய அணி துணைத் தலைவர்.

மருதுபாண்டியன்கலை இலக்கிய பகுத்தறிவு அணி தலைவர். முத்துலட்சுமி தங்கராஜ்மாணவர் அணி துணைத்தலைவர். காசிராஜன்விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர். சேதுராமன்விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர். முருகேசன் அமைப்பு சாரா ஓட்டுனர் அணி தலைவர். அன்புராஜன்அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் சரவண குமார் வர்த்தக அணி அமைப்பாளர். சாமுவேல்மீனவரணி அமைப்பாளர். பொண்ணுத்துரைச்சிமகளிர் அணி துணை அமைப்பாளர். குருராஜ்மாவட்ட மருத்துவரணி துணை அமைப்பாளர். விஜயலட்சுமிமகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர். தமிழ்ச் செல்விமகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர். மீனாட்சிசுந்தரம்கலை இலக்கிய பகுத்தறிவு அணி துணை அமைப்பாளர். வெங்கடேசன் சுற்றுச் சூழல் அணி துணை அமைப்பாளர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வடசென்னை நாடாளுமன்ற வேட்பாளர் கலாநிதி வீராசாமி

## இராயபுரம் மேற்குப் பகுதியில் இன்று வாக்கு சேகரிப்பு!

### மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



**சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்குப்பகுதி 48 – 48(அ)– 52(அ) – 53 – 53(அ) – 52–வது ஆகிய வட்டங்களில் இன்று (30.03.2024) காலை – மாலையில் வீதி வீதியாக சென்று வாக்கு சேகரிக்கிறார்.**

வாக்கு சேகரிப்பு நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற் குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், தொகுதி பொறுப்பாளர், பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட - பகுதி - வட்ட கழக நிர்வாகிகள், தொகுதிக்குட்பட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள் “இந்தியா” கூட்டணியின் மாவட்ட பகுதி வட்ட நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கின்றேன்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி




திருமதி. ர.கனிமொழி M.Sc.,M.Phil.,

வானத்தில் நிலவாய்... வையகத்தில் தென்றலாய்...
எங்கள் இதயத்தில் என்றென்றும் வாழும் உனக்கு
எங்களது இதய அஞ்சலி

ப.கோவிந்தராசன் M.A.,
கீழ்வேளூர் ஒன்றிய கழகச் செயலாளர் (வ), தலைமைச் செயற்குழு உறுப்பினர்
வசந்தி கோவிந்தராசன்
மற்றும் குடும்பத்தினர்கள், நண்பர்கள்
இராதாமங்கலம், கீழ்வேளூர் ஒன்றியம், நாகப்பட்டினம் மாவட்டம்



# 2024 நாடாளுமன்றத் தேர்தல் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து

கலைஞர் 100 1924 - 2023

# கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19–அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகளை சேகரித்து வருகிறார். அவரின் 2–வது கட்ட தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

**30.03.2024, சனிக்கிழமை**

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | அண்ணா பேருந்து நிலையம் அருகில், மதுராந்தகம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் | காஞ்சிபுரம் |
| 2 | மதியம் 12.00 மணி | நான்கு முனை சிக்னல் சந்திப்பு, விழுப்புரம், விழுப்புரம் தெற்கு மாவட்டம். | விழுப்புரம் |
| | | மதிய உணவு இடைவேளை | |
| 3 | மாலை 4.30 மணி | மணிக்கூண்டு சாலை, உளுந்தூர்ப்பேட்டை, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம். | விழுப்புரம் |
| 4 | மாலை 5.30 மணி | கடைவீதி, விருத்தாசலம், கடலூர் மேற்கு மாவட்டம். | கடலூர் |
| 5 | இரவு 7.00 மணி | நான்கு சாலை சந்திப்பு, ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம் | சிதம்பரம் |
| 6 | இரவு 8.00 மணி | கடைவீதி நான்கு முனை சந்திப்பு, காட்டுமன்னார்கோவில், கடலூர் கிழக்கு மாவட்டம் | சிதம்பரம் |

**31.03.2024, ஞாயிற்றுக்கிழமை**

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | தெற்கு ரத வீதி, சிதம்பரம், கடலூர் கிழக்கு மாவட்டம் | சிதம்பரம் |
| 2 | காலை 11.30 மணி | சீமாட்டி சிக்னல், நான்கு முனை சந்திப்பு, கடலூர், கடலூர் கிழக்கு மாவட்டம் | கடலூர் |
| | | மதிய உணவு இடைவேளை | |
| 3 | மாலை 4.30 மணி | வில்லியனூர் கிழக்கு மாட வீதி சந்திப்பு, புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |
| 4 | மாலை 5.30 மணி | மரப்பாலம் சந்திப்பு, புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |
| 5 | இரவு 6.30 மணி | அண்ணா சதுக்கம், புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |



அன்பகம்
சென்னை – 18.
நாள் : 27–03–2024.



திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் இந்தியா கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்ய பல்லாவரம் தொகுதி தலைமை தேர்தல் அலுவலகத்தை கழக பொருளாளர் வேட்பாளர் டி. ஆர்.பாலு, மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ அன்பரசன், மாவட்ட கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆகியோர் திறந்து வைத்தார்கள். அப்பொழுது மேயர் க.வசந்தகுமாரி, மண்டல தலைவர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை, வே. கருணாநிதி, பகுதி செயலாளர்கள் த. ஜெயக்குமார், இ.எஸ். பெர்னாட், ஏ.கே.கருணாகரன், ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி, இந்தியக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோர் திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

### கன்னிகை ஜி. ஸ்டாலின் - ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா - க.தனசேகரன் - கே.கண்ணன் பங்கேற்பு!

# கலைஞர் நகர் 137 ஆ வட்டத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் வாக்கு சேகரிப்பு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை! அ.கதிரேசன் அறிக்கை!

*சென்னை, மார்ச் 30*

சென்னை தெற்கு மாவட்டம் கலைஞர் நகர் தெற்கு பகுதி 137 “ஆ” வட்ட கழகத்தில் 30.03.2024 சனிக்கிழமை மாலை 05:30 மணி அளவில் அஜந்தா பேருந்துநிலையம் அருகிலிருந்து தென் சென்னை திமுக வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள் 137 ஆ வட்ட கழகம் முழுவதும் வாக்கு சேகரிக்கவுள்ளதால் இதில் தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியம், விருகம் பாக்கம் தொகுதி பொறுப்பாளர் கன்னிகை ஜி. ஸ்டாலின், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, சென்னை மாநகராட்சி கணக்கு மற்றும் தணிக்கை குழு தலைவர் க.தனசேகரன், பகுதி கழக செயலாளர் கே.கண்ணன், பொதுக் குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், மாவட்ட துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், மாவட்ட அமைப்பாளர்கள் ஆர்.சசிகுமார், கனிமொழி தனசேகரன், நிஷா சையத், பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.உமாபதி, அஜந்தா எஸ்.ரவி, பே.தியாகு, அ. பாபு, மாவட்ட பிரதிநிதி என்.ரவி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் பி.பெரியசாமி, ஜெ.சீனிவாசன் வட்ட கழக நிர்வாகிகள் என்.சக்கரவர்த்தி, கே.தணிகாசலம், டி.செல்லா, ஜி. ராஜேஸ்வரி, டைகர் பழனி, பி.தனசேகர்,

என்.ஜெகதீசன், கே. சதீஷ், நா.பாலா, எஸ்.புகழ் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள் , வட்ட கழக நிர்வாகிகள், பாகத் தலைவர்கள் மற்றும் மகளிர்கள் கழக முன்னோடிகள் அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் அ.கதிரேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## வாணியம்பாடி வீ. சிவாஜிகணேசன்

## மார்ச் 30 (2015)



வேலூர் மாவட்டம், வாணியம்பாடி நகரக் கழகச் செயலாளராக 25 ஆண்டுகள் தொடர்ந்து கழகப் பணியாற்றியவர்.

வாணியம்பாடி நகர்மன்ற உறுப்பினராக 10 ஆண்டுகளும்; வாணியம்பாடி நகர்மன்ற தலைவராக ஒரு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்நகர மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவராகவும், வாணியம்பாடி நகர கூட்டுறவு வங்கித் தலைவராகவும், தென்னக ரயில்வே துறை ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**





திருவள்ளூர் மேற்கு மாவட்டம் அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட திருத்தணி மேற்கு ஒன்றியம் புச்சிரெட்டிபள்ளி, மத்தூர் ஆகிய ஊராட்சியில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது ஒன்றிய செயலாளர் என்.கிருஷ்ணன் ஏற்பாட்டில் பொதுமக்கள் ஆர்த்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தார்கள். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாநில நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், திருத்தணி தொகுதி பார்வையாளர் வடசென்னை நா.மனோகரன், திருத்தணி வினோத்குமார், ஆர்த்தி ரவி, ரவீந்திர, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.எம்.சுகுமார் மாவட்ட நெசவாணி அமைப்பாளர் உதயசூரியன், நிர்வாகிகள் அகூர் மாணிக்கம், ராமதாஸ், சுசிலா சுப்பிரமணியம், வேலாயுதம், நரசிம்மராஜுலு, நீலா கோவிந்தசாமி, கன்னியப்பன், கோதண்டம், டில்லி பாபு, கோவர்தன், ஹரிபாபு, பரந்தாமன் உள்பட பலர் உள்ளனர்.





தென்சென்னை நாடாளுமன்ற தொகுதியின் இந்தியா கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் முனைவர் தமிழச்சிதங்கபாண்டியன் அவர்களை ஆதாரித்து சைதாப்பேட்டை மசூதி தெருவில் உள்ள நவாப் சதகத்துல்லாகான் சாகிப் பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை மதியம் 1 மணியளவில் சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலக்குழுவின் தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி இஸ்லாமிய சகோதரர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். தோழமை கட்சிகளின் நிர்வாகிகள், சிறுபான்மை நல உரிமைப்பிரிவு நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள், பாக களப்பணியாளர்கள் உள்ளிட்ட கழக தோழர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

தென்சென்னை நாடாளுமன்ற வேட்பாளர் முனைவர்

# தமிழச்சி தங்கபாண்டியனுக்கு விருகம்பாக்கம் தொகுதி முழுவதும் வாக்கு சேகரிப்பு நிகழ்வுகள்!

## மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 30-

சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தென்சென்னை நாடாளுமன்ற வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியனுக்கு கலைஞர் நகர் வடக்கு மற்றும் கலைஞர் நகர் தெற்கு பகுதியில் உள்ள அனைத்து வட்டங்கள் வாரியாக வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சி இன்று 3032024 காலை 7 மணிக்கு தொடங்கி நடைபெற உள்ளது.

கலைஞர் நகர் வடக்கு பகுதி

காலை 7 மணி - 128வது வட்டம் - ஆர்.5 விருகம்பாக்கம் காவல்நிலையம் - தொடங்கி சாதிக்பாட்சா நகர், லஷ்மி நகர், நியூகாலனி, ஷேக் அப்துல்லா நகர், இளங்கோ நகர் தெற்கு, கஞ்சய்காந்தி நகர், பாலாம்பாள் நகர், தாங்கல் தெரு, ஏ.வி.எம். அவென்யூ அனைத்துத் தெருக்கள், நாராயணசாமி தெரு, தாங்கல் உள்வாய் தெரு, ஓட்டைப் பிள்ளையார் கோயில் தெரு.

ஆர்.7 கலைஞர் நகர் காவல் நிலையம் - ஆற்காடு சாலை, வன்னியர் தெரு, சங்கரேஸ்வரி நகர், பழைய பங்காரு நாயுடு காலனி, புதிய பங்காரு நாயுடு காலனி, கிழக்கு வன்னியர் தெரு, லோகநாதன் தெரு, ஜவகர் தெரு, மாரியம்மன் கோயில் தெரு, பஜார் தெரு, மேற்கு வன்னியர் தெரு, அன்னாஜி நகர், வேம்புலியம்மன் கோயில் தெரு, லாம்பார்ட் நகர்.

ஆர்.5 விருகம்பாக்கம் காவல்நிலையம் - காமராசர் சாலை பகுதி கழக அலுவலக சாலை, ஏ.வி.எம். காலனி அனைத்து தெருக்கள், பத்மாவதி நகர், கிருஷ்ணா நகர் அனைத்து தெருக்கள், ரெட்டி தெரு, பள்ளிக்கூட தெரு, பெருமாள் கோயில் தெரு, திருவேங்கடம் தெரு, சாரதா நகர், யாதவாள் தெரு, சொர்ணாம்பிகை நகர், வெங்கடேஸ்வரா நகர், தாராசந்த் நகர், எல் அன்ட் டி காலனி அனைத்து தெருக்கள், சி.ஆர்.ஆர். புரம், இளங்கோ நகர், காளியம்மன் கோயில் தெரு, ஏரிக்கரை தெரு, பச்சையம்மன் கோயில் தெரு, காந்தி நகர் அனைத்து தெருக்கள், இந்திராநகர் அனைத்து தெருக்கள், அபிராமி நகர், சாய் பாபா காலனி வரை வாக்கு சேகரிப்பு நடைபெறும்.



கலைஞர் நகர் தெற்கு பகுதி

மாலை 4 மணி - 137 அ வட்டம் - 12வது செக்டரில் தொடங்கி - கிருஷ்ணசாமி சாலை 1வது செக்டர், 8வது செக்டர், 7வது செக்டர், 6வது செக்டர், 5வது செக்டர், 4வது செக்டர், 9வது செக்டர், ராமசாமி சாலை, 10வது செக்டர், பொன்னம்பலம் சாலை, பி.வி.ராஜமன்னார் சாலை, அய்யாவுபுரம், நாவலர் காலனி, முனு சாமி சாலை, பிரபா காலனி.

137 ஆ வட்டம் - அஜந்தா பஸ் ஸ்டாப் - 5வது தெரு, 19வது தெரு, 18வது தெரு, 17வது தெரு, 16வது தெரு, 15வது தெரு தொடர்ச்சி, 13வது தெரு, 12வது தெரு, 11வது தெரு, கபிலர் தெரு, சீத்தலை சாத்தனார் தெரு, கங்கை கொண்ட சோழன் தெரு, அண்ணா வீதி 1,2,3,4,5 தெருக்கள், அன்னை பத்மாவதி தெரு, அங்காள பரமேஸ்வரி கோயில் தெரு 1,2,3,4, சீத்தலைசாத்தனார் தெரு தொடர்ச்சி, புகழேந்தி தெரு, வெங்கட்ராமன் சாலை, துர்க்கையம்மன் கோயில் தெரு, வெங்கட்ராமன் சாலை தொடர்ச்சி, நாகாத்தம்மன் கோயில் தெரு.

137 வது வட்டம் - வெங்கட்ராமன் சாலை - எம்.ஜி.ஆர். சாலை - டாக்டர் காணுநகர், டாக்டர் கானுநகர், ஜெயலலிதா நகர், ராஜீவ்காந்தி நகர், பெரியார் நகர், நெசப்பாக்கம், அன்னை சத்யா நகர், கன்னியம்மன் கோயில் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, பிரபா ஒயின்ஸ்., ஏரிக்கரை தெரு மெயின்ரோடு, ராஜீவ் காந்தி நகர் (சுற்று), மூவேந்தர் தெரு, அஜந்தா பேருந்து நிறுத்தம் ஆகிய அனைத்துத் தெருக்களிலும் வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெறும். எனவே கழகத்தின் அனைத்து நிர்வாகிகள், கூட்டணிக் கட்சியினர் பங்கேற்றிடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 119 [அ] வட்ட கழகத்தில் வி.பி.ராமன் சாலையில், இந்தியா கூட்டணியின், மத்திய சென்னை நாடாளுமன்ற தேர்தல் பணிமனையை, ஆர்.என்.துரை தலைமையில் வேட்பாளர் தயாநிதிமாறன் திறந்து வைத்து, கழக தோழர்கள் வருகை பதிவேட்டை ஆய்வு செய்தார். நே.சிற்றரசு, ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், லைனர். கே.பிரபு, ஏ.பி. வேலு, வே.சௌந்தர், சி.வாசன்,ஜெ.அன்பரசு, க.ரவி,அ.காமாட்சி, கோ.மகேஷ், எம்.எஸ்.வசந்த், கோ.தனசேகர், ச.ரமேஷ், ஆர்.ராதா, டி.செபஸ்டின், எஸ்.சித்தரா, அகியோர் உடன் உள்ளனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு -தயாநிதி மாறன் - ஓ.ஏ.நாகலிங்கம் பங்கேற்பு!

# எழும்பூர் தெற்குப் பகுதியில் தேர்தல் பணிமனைகள்!

## பகுதிச் செயலாளர் வி.சுதாகர் வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 30-

எழும்பூர் தெற்குப் பகுதியில் தேர்தல் பணிமனை திறக்கப்படுகிறது. இதுகுறித்து பகுதிச் செயலாளர் வி.சுதாகர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :

சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் இந்தியா கூட்டணி கட்சிகளின் எழும்பூர் தெற்கு பகுதியில் பணிமனை திறக்கும் நிகழ்வு அமைச்சர் பி.கே.சேகர் பாபு, தயாநிதி மாறன் எம்.பி. மற்றும் எழும்பூர் தொகுதி மேற்பவையளர் ஓ.ஏ. நாகலிங்கம் ஆகியோர் திறந்து வைக்கின்றனர்.

தேர்தல் பணிமனை திறக்கும் இடங்கள் விபரம் வருமாறு :

61 வது மற்றும் 61அ வட்டம் இணைந்து தேர்தல் பணிமனை காலை 8 மணி, எண் 31 எழும்பூர் நெடுஞ்சாலை, எழும்பூர் காவல் நிலையம் அஜகில்

108 மற்றும் 108அ தேர்தல் பணிமனை வ.வு.சி. மன்றம் ஹரிங்க்டன் ரோடு செனாய் நகர்

இதில் கழக மாநில, மாவட்ட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் வி.சுதாகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - மத்திய சென்னை

# வேட்பாளர் தயாநிதி மாறன் இன்று பிரச்சாரம்!

சென்னை, மார்ச் 30-

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி தி.மு.கழக வெற்றி வேட்பாளர் தயாநிதி மாறன் பங்கேற்கும் இன்றைய (30.3.2024) பிரச்சார நிகழ்ச்சி விபரம் வருமாறு:

**காலை நிகழ்ச்சிகள் விவரம்**

எழும்பூர் வடக்கு பகுதியில் தேர்தல் பணிமனைகள் திறப்பு

காலை 8 மணிக்கு பகுதி பணிமனை - ஆலந்துார், சுப்பிரமணியம் தெரு, சூளை, சென்னை 112

காலை 8.15 மணிக்கு. 77வது வார்டு, எண் 99/44, காஜா ஷாகிப் தெரு, புளியந்தோப்பு, சென்னை 12

காலை 8.30 மணிக்கு. 78வது வார்டு, எண் 17, மாணிக்கம் தெரு, புரசைவாக்கம், சென்னை 7.

காலை 8.45 மணிக்கு. 99வது வார்டு, எண் 131, வள்ளாள தெரு, புரசைவாக்கம், சென்னை - 84.

எழும்பூர் தெற்கு பகுதியில் பணிமனைகள் திறப்பு

காலை 9.00 மணிக்கு. 61 வது 61 அ வட்டம் இணைந்து தேர்தல் பணிமனை காலை 8 மணி, எண் 31 எழும்பூர் நெடுஞ்சாலை, எழும்பூர் 600008

காலை 9.15 மணிக்கு. 58 மற்றும் 58 அ தேர்தல் பணிமனை Dr அம்பேத்கர் நகர் எண், 1 பேரக்ஸ் ரோடு பெரியமெடு

காலை 9.30 மணிக்கு. 108 மற்றும் 108 அ தேர்தல் பணிமனை வ.வு.சி. மன்றம் எண் ஹரிங்க்டன் ரோடு செனாய் நகர், சென்னை 600030

இதில், பகுதிக் கழகச் செயலாளர்கள் சொ.வேலு, சுதாகர் ஆகியோர் பங்கேற்பு.

30.3.2024 - சனிக்கிழமை

சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு,எம்.சி., & மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி தி.மு. கழக வெற்றி வேட்பாளர் தயாநிதி மாறன் அவர்கள் ங்கற்கும்

**மாலை நிகழ்ச்சிகள் விவரம்**

மாலை 5.30 மணி முதல் 6.30 மணிக்கு,

அல்மாலிக் ஹால், 17, தக்யூதீன் கான் பகதூர் தெரு, காயிதே மில்லத் நெடுஞ்சாலை, திருவல்லி;கேணி, சென்னை 600 005 என்னும் முகவரியில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் நடக்கும் இப்தார் நோன்பு துறப்பு விழாவில் பங்கேற்கின்றனர்.

இந்நிகழ்வில் பகுதிக் கழகச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன் மோகன் பங்கேற்பு

அதனைத் தொடர்ந்து ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதியில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு,எம்.சி., & மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி தி.மு.கழக வெற்றி வேட்பாளர் தயாநிதி மாறன் அவர்கள் வாக்கு சேகரிப்பு.

மாலை 7 மணிக்கு

துவங்கும் இடம் : 113வது ஆ வட்டம்

ராமகாமத்துபுரம், பாரதி நகர், ராமகிருஷ்ணாபுரம், திலக் தெரு சந்திப்பு, லாலா தோட்டம், அபிபுல்லா சாலை வழியாக மாம்பலம் நெடுஞ்சாலை, பார்த்தசாரதி தெரு, கோலமாமணி அம்மன் தெரு வழியாக பிள்ளையார் கோயில் தெருவில் முடிவடையும்.

113வது அ வட்டம்

டாக்டர் எம்.ஜி.ஆர். சாலை வழியாக தர்மாபுரம் பாலமுத்துகிருஷ்ணன் தெரு, சாரதாம்பாள் தெரு, தங்கவேல் தெரு, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை வழியாக.

113வது வட்டம்

கிழக்கு மாடவீதி, தெற்கு மாடவீதி, மேற்கு மாடவீதி, வடக்கு மாடவீதி வழியாக மேல்பாடி முத்து தெரு, ராமா தெரு, குமரப்பா தெரு, குமரப்பா லேன், வீரபத்ரன் தெரு, வி.ஜி.என். தெரு, டாக்டர் எம்.ஜி.ஆர். சாலை வழியாக நியூ காலணி, கிராம தெருவில் முடிவடையும்.

இந்நிகழ்வில் பகுதிக் கழகச் செயலாளர் மா.பா.அன்புதுரை, நிர்வாகிகள், தோழமைக் கட்சியினர் பங்கேற்கின்றனர்.

புரசைவாக்கத்தில் மத்திய சென்னை தொகுதி வேட்பாளர்

# தயாநிதிமாறன் இஸ்லாமிய பெருமக்களிடம் வாக்கு சேகரித்தார்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு - முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 30-

புரசைவாக்கம் தாக்கர் தெருவில் உள்ள மசூதியில் இஸ்லாமிய பிரமுகர்களைச் சந்தித்து மத்திய சென்னைத் தொகுதி வேட்பாளர் தயாநிதி மாறன் வாக்கு சேகரித்தார். அப்போது கிழக்கு மாவட்ட செயலாளர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பகுதி செயலாளர் சொ. வேலு ஆகியோர் உடனிருந்தனர்.

இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பாக மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர் தயாநிதி மாறன் அவர்கள் பேசியதாவது:

இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பாக மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதி தி.மு. கழக வேட்பாளராக என்னை தமிழக முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

இப்போது நாம் தமிழ் நாட்டிற்கு மட்டும் அல்ல இந்தியாவுக்காகவே நாற்பது தொகுதிகளில் வெற்றி பெற்று பிரதமர் யார் என்று நமது முதலமைச்சர் கை காட்ட இந்த தேர்தலில் மகத்தான வெற்றி பெறுவோம்.

ஒன்றிய அரசு இந்தியாவை பிளவுபடுத்தி கொண்டிருக்கிறது. மழை காலங்களிலும், வறட்சி காலங்களிலும், தலைவர் கலைஞர் பிறந்த நாள், முதலமைச்சர் பிறந்த நாள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி பிறந்த நாள் என்று நலத் திட்டங்களை அறிவித்து உங்களை மாத மாதம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். நானும் அமைச்சர் சேகர்பாபு அவர்களும். எல்லா நிகழ்ச்சிகளிலும் உங்கள் பக்கத்தில் நிற்பது யார்? நாங்கள் தானே.

ஆனால் மோடியை நீங்கள் பார்த்து இருக்கிறீர்களா? அவர் மழை காலத்தில் வந்தாரா? இல்லை. ஏதேனும் உதவி செய்தாரா? இல்லை. வடை தான் சுட்டுக் கொடுத்தார்.

பெருமழை பெய்த போது நமது முதலமைச்சர் ஒன்றிய அரசிடம் கேட்டதற்கு எதுவும் தரவில்லை. ஆனால் நமது முதலமைச்சர் நீங்கள் தரவில்லையென்றால் என்ன நான் தருகிறேன் என்று கூறி உங்களுக்கு எல்லாம் ரூபாய் ஆறாயிரம் தந்தார். பொங்கல் வந்தவுடன் ஆயிரம் ரூபாய் தந்தார். கொரானோ காலத்தில் நான்காயிரம் ரூபாய் தருகிறேன் என்று சொன்னார். நான்காயிரம் ரூபாய் தந்தார். மகளிர் உரிமை தொகை மாத மாதம் ஆயிரம் ரூபாய் தருகிறார்.

உங்களுக்கு தருவதற்கு கொடுக்கிற ஒன்றிய அரசு வந்தால்தானே நமக்கு எல்லாம் கிடைக்கும். அதற்கு நமது இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பாக தி.மு.க.வுக்கு வாக்களித்து நமது முதலமைச்சர் கை காட்டும் பிரதமர் வர வேண்டும்" என்று கூறினார்

அதனைத் தொடர்ந்து 5.30 மணிக்கு துறைமுகம் கிழக்கு 56 வட்டம் செயின்ட் சேவியர் தெரு பிரகாசம் சாலை சந்திப்பில் பிரச்சாரம் தொடங்கியது.

அதனைத் தொடர்ந்து பிடாரியார் கோயில் தெரு, அம்மன் கோயில் தெரு, வெங்கடேசன் தெரு, மதுர வாசல் தெரு, சண்முகராயர் தெரு, தைத்தியப்பன் தெரு, பி.ஆர். கார்டன், ஆசீர்வாத புரம் முடிவடைந்தது.

பின்னர் 56ஆ வட்டத்தில் இப்ராஹிம்சா லையும் பவளக்காரத் தெரு சந்திப்பில் பிரச்சாரத்தை தொடர்ந்து ராமசாமி தெரு, வெங்கட ஐயர் தெரு, சைவ முத்தையா தெரு, செங்கழுநீர் பிள்ளையார் கோயில் தெரு, நைனியப்பன் தெரு, சவுரி முத்து தெரு, மலையப்பன் தெரு, வள்ளுவர் நகர், கச்சாலீஸ்வரன் தெரு, சாலை விநாயகர் தெரு என்று வள்ளுவர் நகரில் பிரச்சாரம் முடிவடைந்தது.

அப்போது கிழக்கு மாவட்ட செயலாளர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, துறைமுகம் பகுதி செயலாளர்கள் ராஜசேகர், எ.முரளி ஆகியோர் உடனிருந்தனர்.

நே.சிற்றரசு - எம்.கே.மோகன் பங்கேற்பு! அண்ணாநகர் தெற்குப் பகுதியில்

# வேட்பாளர் தயாநிதிமாறனை ஆதரித்து கு.செல்வப்பெருந்தகை தேர்தல் பிரச்சாரம்!

## பகுதிச் செயலாளர் ந.இராமலிங்கம் அறிக்கை!

சென்னை, மார்ச் 30

அண்ணாநகர் தெற்குப் பகுதிச் செயலாளர் ந.இராமலிங்கம் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணியின் தி.மு.க. வேட்பாளர் தயாநிதிமாறன் அவர்களை ஆதரித்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. இன்று (30.03.24 சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் கீழ்க்காணும் வட்டங்களில் வேன் மூலம் தேர்தல் பிரச்சாரம் செய்ய உள்ளார்.

மேற்கண்ட நிகழ்ச்சிக்கு அண்ணாநகர் தெற்கு பகுதி கழகச் செயலாளர் ந. இராமலிங்கம் எம்.சி. தலைமையில் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன் எம்.எல்.ஏ. கூட்டணி கட்சி தலைவர்கள் முன்னிலையில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. அண்ணாநகர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் திருமதி.பத்மப்பிரியா, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் கார்த்திக் மோகன் உள்ளிட்டோர் பிரச்சாரம் செய்ய உள்ளனர்.

107 அ வட்டம் காலை 10 மணி துவக்கம் இந்திரா காந்தி 4வது தெரு எம்.எச். காலனி சந்திப்பு.

107 வட்டம் ஆசாத் நகர் நடு பாலம்.

105 வட்டம் இந்திரா காந்தி தெரு, மாரியம்மன் கோவில் தெரு, சக்தி நகர் சந்திப்பு.

105 அ வட்டம் மற்றும்106 வட்டம் எம். எம்.டி.ஏ.காலனி ரவுண்டானா அருகில்.

106 அ வட்டம் பெரியார் பாதை கங்கை அம்மன் கோவில் சந்திப்பு.

எனவே மேற்கண்ட நிகழ்ச்சிக்கு மாநில, மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், BLA2, BLC பாக ஒருங்கிணைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழக செயல் வீரர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் ந.இராமலிங்கம் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட பூவிருந்தவல்லி நகர தி.மு.க. சார்பில் இந்தியா கூட்டணி கட்சியின் தேர்தல் பணிமனை திறப்பு விழா பூவிருந்தவல்லியில் உள்ள பாளையத்தம்மன் கோவில் எதிரில் நகர செயலாளர் ஜி.ஆர்.திருமலை ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்விழாவில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதி போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் ச.சசிகாந்த் செந்தில் ஆகியோர் தேர்தல் பணிமனையை திறந்து வைத்து தொகுதி தேர்தல் பொறுப்பாளர் இரா.கிரிராஜன் எம்பி, சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி முன்னிலையில் பார்வையிட்டனர். அருகில் மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், காஞ்சனா சுதாகர், எம்.முத்தமிழ்செல்வன், ஜி.விமல்வர்ஷன், ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், நகர நிர்வாகிகள் எச்.தாஜுதீன், துரைபாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லி ராணி மலர்மன்னன், அசோகுமார், பூவை ஜெ.சுதாகர், இரா. புண்ணியகோட்டி, இரா.அன்பழகன், சௌந்தரராஜன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

# ஊத்தங்கரை தெற்கு ஒன்றியம்

## ஊத்தங்கரை பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், ஊத்தங்கரை தெற்கு ஒன்றியம், ஊத்தங்கரை பேரூர்ச் செயலாளர் இரா.பாபு சிவகுமார் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ஆர்.பி.பார்த்திபன்**, (ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம்) அவர்கள் ஊத்தங்கரை பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29-03-2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



இந்தியா கூட்டணி வேட்பாளர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களை ஆதரித்து ராயபுரம் கிழக்கு பகுதியில் பகுதி செயலாளர் இரா. செந்தில்குமார் ஏற்பாட்டில் ராயபுரம் கல்மண்டபம் மசூதியில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆலோசனைபடி சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி, ராயபுரம் சட்டமன்ற பொறுப்பாளர் என்.நவீன் ஆகியோர் துண்டுப் பிரசுரம் வழங்கி வாக்கு சேகரித்தனர். உடன் வட்ட செயலாளர் ஆர்.வி.கணேஷ், பகுதி நிர்வாகிகள் த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, வட்ட அவை தலைவர் ஆ. ஞானசேகரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மதச்சார்பற்ற 'இந்தியா' கூட்டணி கட்சி சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதி

# வேட்பாளர் கார்த்தி சிதம்பரத்தை ஆதரித்து - திருமயம் ஒன்றிய தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் சிறப்புரை!



புதுக்கோட்டை, மார்ச் 30-

மதச்சார்பற்ற இந்தியா கூட்டணி கட்சிகளின் சிவகங்கை நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருமயம் ஒன்றிய தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் தமிழக முதல்வர் தளபதியார் அவர்களின் உத்தரவின் பேரில் தமிழக சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளருமான எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெற்ற சிவகங்கை நாடாளுமன்ற தொகுதி தேர்தல் பணிக்கான ஆலோசனை கூட்டத்தில் முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் இந்தியா கூட்டணி காங்கிரஸ் வேட்பாளர் கார்த்தி சிதம்பரத்தை அறிமுகம் செய்து சிறப்புரையாற்றினார். அப்பொழுது அவர் பேசியதாவது:

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் சிவகங்கை நாடாளுமன்ற வேட்பாளர் கார்த்தி சிதம்பரத்தை ஆதரித்து நடைபெற்ற காங்கிரஸ் தி.மு.க. கூட்டணி கட்சிகள் செயல்வீரர் கூட்டத்தில் கலந்து கொண்டு முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் பேசியதாவது:

உலக வங்கி சொல்கிறது இந்தியாவில் இருக்கிற ஏற்றத்தாழ்வு மாதிரி எந்த நாட்டிலும் கிடையாது. 21 சதவீத மக்கள் வறுமையில் இருப்பதை இந்த மோடி அரசு பாராட்டுகிறது. இந்தியா கூட்டணி என்பது கீழ்பாதி 50% மக்களுக்காக அழைத்தது. மோடி அரசு மேல் பகுதி 10% மக்களுக்காக அமைந்த அரசு இந்திய மக்களுக்கு மிகப்பெரிய சவால் விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம் சோப்பு ,சீப்பு காலணி வரை விலைவாசி உயர்ந்துள்ளது. இந்தியாவில் பட்டதாரிகள் மத்தியில் வேலை இல்லாதவர்கள் 42% உள்ளனர். தலைமை பொருளாதார ஆலோசகர் வேலை இல்லாமையை கட்டுப்படுத்த அரசால் முடியவில்லை என்பதை போட்டு உடைத்துள்ளார். நிதியமைச்சர் நான் தமிழச்சி என்று சொல்கிறார். வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஏன் இந்த தேர்தலில் போட்டியிடவில்லை.

இந்தத் தேர்தலில் போட்டியிட்டு எங்களுக்கு பதில் சொல்லி இருக்க வேண்டும். இந்தியா முழுவதும் 65 ஆயிரம் கோடி விவசாயிகளை அடைத்தது யார்? 100 நாள் வேலை திட்டத்தை அமல்படுத்தி தமிழ்நாட்டில் அமல்படுத்துவதற்காக கையெழுத் திட்டவர் யார்? பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை நாடு முழுவதும் அமல்படுத்த தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து கையெழுத்துக்கள் யார்? இந்தியாவிலேயே அதிக வங்கிகள் இருக்கிறது என்றால் அது சிவகங்கை நாடாளுமன்ற தொகுதி கல்வி கடனை கொண்டு வந்தது யார்? காங்கிரஸ் ஆட்சி அமைந்த உடன் கல்வி கடன் பெற்று வேலையில்லாமல் கஷ்டப்பட்டு கல்வி கடனை கட்ட முடியாமல் இருக்கும் மாணவ மாணவிகளுக்கு இனிப்பான செய்தி வர இருக்கிறது.

ஜூன் நான்காம் தேதி தேர்தல் முடிவுகள் வரும் போது ஜனநாயகம் இருக்குமா? இருக்காதா? அண்ணல் அம்பேத்கர் கொண்டு வந்த அரசியல் சாசனம் இருக்குமா? செத்துப் போய் விடுமா? அம்பேத்கர் கொண்டு வந்த அரசியல் சாசனம் இருந்தால் தான் இந்த மக்களுக்கு பாதுகாப்பு. மாநில அரசு உரிமை பறிக்கப்படும் காஷ்மீரில் ஏற்பட்ட நிலை தமிழ்நாட்டிற்கு வராது என்று எனன நிச்சயம் உ இந்த தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெற்றால் ஜனநாயகம் பிழைத்திருக்கும். இல்லையென்றால் மெல்ல மெல்ல சாகும் என்று பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நாளை நமக்கு வாக்களிக்கும் உரிமை கிடைக்குமா கிடைக்காதா என்று முடிவு செய்யக் கூடிய தேர்தல் தான் இந்த தேர்தல் . ஐடி, சிபிஐ தனது சகாக்களை வைத்துக் கொண்டுபாஜகமிரட்டுகிறது. நாளை ஜனநாயகம் மாறி சர்வாதிகாரம் உருவானால் மீண்டும் ஒரு சுதந்திரப் போராட்டத்தை நடத்த முடியாது என்பதற்காகத்தான் இது ஒரு விடுதலைப் போராட்டம். ஜீலை 4ம் தேதி மீண்டும் ஒரு விடுதலை கிடைக்க வேண்டும். வேட்பாளர் அறிமுகப்படுத்தும் விழாவில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தெரிந்து பேசினாரா தெரியாமல் பேசினாரா என தெரியவில்லை. பெட்ரோல் விலை குறைக்கப்படும். டீசல் விலை குறைக்கப்படும். கேஸ் விலை குறிக்கப்படும் என்று தேர்தல் அறிக்கையை தமிழக முதலமைச்சர் வெளியிட்டிருக்கிறார் என்று கூறுகிறார்.

இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கிற தலைவர் தான் அந்த தேர்தல் அறிக்கையினை வெளியிட்டு இருக்கிறார் என்று பேசினார். பின்னர் பேட்டியளித்த முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் த.மா.க.வுக்கு சைக்கிள் சின்னமும் அ.ம.மு.க.வுக்கு குக்கர் சின்னமும் வழங்கப்பட்டது. போல் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு பானை சின்னமும் ம.தி.மு.க. விற்கு பம்பரம் சின்னமும் ஒதுக்கப்படவில்லை இதுகுறித்து நீதி மன்றத்திற்கு சென்று நீதி கேட்க வேண்டும்.

பின்னர் இந்த நிகழ்ச்சிகள் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களை சந்தித்த சிவகங்கை நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் கார்த்தி சிதம்பரம் இந்தியாவில் இரண்டு சட்டம் உள்ளது பிஜேபியுடன் இருந்தால் ஒரு சட்டம். பிஜேபி கூட இருந்தா உங்களுக்கு ஈடி ரைடு வராது. பிஜேபி கூட இருந்தா வருமான வரி சோதனை வராது. பிஜேபி உடன் இருந்தால் நீங்கள் புனிதர்கள் . பிஜேபிக்கு விரோதமாக இருந்தீர்கள் என்றால் ஈடி ரெய்டு வரும். வருமானவரித்துறை ரைடு வரும். உங்களை சிறையில் தள்ளுவார்கள் நீங்க எல்லாம் வந்து பாவம் செய்தவர்கள் . பிஜேபியுடன் கூட்டணி வைத்துக் கொண்டால் நீங்கள் கேட்கும் சின்னம் கிடைக்கும் குக்கராக இருந்தாலும் சரி ஓடாத சைக்கிளாக இருந்தாலும் சரி போட்டுக் கொடுத்து விடுவார்கள். பிஜேபிக்கு எதிர் அணியில் இருந்தால் என்ன செய்தாலும் நாம் தமிழர் கட்சி உட்பட மதிமுக விடுதலைச் சிறுத்தை கள் உள்ளிட்ட கட்சிகளுக்கு சின்னம் ஒதுக்குவது கிடையாது. இந்தியாவில் எல்லோருக்கும் பொதுவான சட்டம் இல்லாமல் பிஜேபிக்கு ஆதரவாக இருந்தால் ஒரு சட்டம்.

பி.ஜே.பி.க்கு விரோதமாக இருந்தால் இரண்டு சட்டங்கள். இரண்டு சட்டங்கள் இந்தியாவில் அமல்படுத்தப்படுகிறது இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக தேர்தலில் பிஜேபி அணியை தோற்கடிக்க வேண்டும் மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வரை கைது செய்தார்கள் என்றால் போராட்டம் நடத்த தான் செய்வார்கள். இந்தியாவில் இதுபோன்ற நிகழ்வு நடந்தது கிடையாது. சர்வாதிகார ஆட்சியில் மட்டுமே இது போன்ற நிகழ்வு நடைபெறும். ஒரு மாநில முதல்வரை கைது செய்து நிலைகுலைய வைத்தால் நிச்சய மாக போராடுவார்கள். என்னை பொருத்த வரை இந்தியா முழுவதும் போராட்டம் வெடிக்க வேண்டும். புதுச்சேரி உட்பட 40 தொகுதிகளிலும் திமுக காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெறும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில் காங்கிரஸ் தெற்கு மாவட்ட தலைவர் இராம. சுப்புராம், மாவட்ட அவைத் தலைவர் அ. சுப்பிரமணியன், சீனி. பழனியப்பன், அழகு.சிதம்பரம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் அஸ்ரப் அலி, த.மணி ராஜன், தேவி,மேகநாதன், கே.ஆர். ராமசாமி, அருண்குமார், சுப. துரைராஜா, முல்லை ரமேஷ், தேவி, மற்றும் இந்திய கூட்டணி அனைத்து கட்சி நிர்வாகி கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

---

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயணம்!



**01.04.2024 ( திங்கட்கிழமை )**

**திருநெல்வேலி**

| நேரம் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| மாலை 4.00 | இராதாபுரம் (திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்) | பெருந்தலைவர் காமராஜர் சிலை அருகில், வள்ளியூர் |

**கன்னியாகுமரி**

| நேரம் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| மாலை 4.30 | கன்னியாகுமரி | குழித்துறை அண்ணா சிலை |
| மாலை 5.30 | | புதுக்கடை பேருந்து நிலையம் |
| மாலை 6.15 | | குளச்சல் பீச் முக்கு |
| மாலை 7.00 | | நாகர்கோவில் வடசேரி அண்ணா சிலை |
| மாலை 7.45 | | கொட்டாரம் ஜங்ஷன் |

---

அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! கே.கே.செல்லப் பாண்டியன் வரவேற்புரை!

# கரூர் வேட்பாளர் ஜோதிமணியை ஆதரித்து இலுப்பூரில் செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி - சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

புதுக்கோட்டை, மார்ச் 30-

'இந்தியா' கூட்டணியின் கரூர் நாடாளுமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் ஜோதிமணியை ஆதரித்து, புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் இலுப்பூரில் மாநாடு போல் சிறப்புடன் நடைபெற்றது.

மாவட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் அனைவரையும் வரவேற்று ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ்.ரகுபதி தலைமையிலும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி,

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் சட்டமன்ற உறுப்பினர் எம். சின்னதுரை, தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர், விராலிமலை தொகுதி மேற்பார்வையாளர் அஞ்சுகம் பூபதி, காங்கிரஸ் தேர்தல் பொறுப்பாளர் ஆர்.எம்.பழனிச்சாமி, பெரியண்ணன் அரசு, காங்கிரஸ் மாவட்ட தலைவர் முருகேசன், இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர் செங்கோடன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் அஸ்ரப் அலி, மனித நேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் அப்துல் கனி, விடுதலைச் சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் கரு.வெள்ளை நெஞ்சன், பெனாட் அந்தோணிராஜ், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், த.சந்திரசேகரன், செ. அசோக் பாண்டியன், கே. ஆர்.என்.போஸ், அரு.வீரமணி, ஆ.செந்தில், க.மதியழகன், பி. ராஜேஸ்வரி, எஸ்.எஸ். கருப்பையா, , எம்.லியாகத் அலி, மு.பி.மணி, சு.சண்முகம், எம்.எம்.பாலு, தென்னலூர் எம்.பழனியப்பன், ராப்பூசல் செந்தில், ஒன்றியக் கழக செயலாளர்கள் மு.பி.ம.சத்தியசீலன், ஆர்.ஆர். எஸ்.மாரிமுத்து, அ.இளங்குமரன், கே.பி.ஜயப்பன், ஓ.எஸ். வெங்கடாசலம், வை.விஜயகுமார், முகமது ரிஷா, குமார், பூங்குடி சிவா, மாவட்ட கவுன்சிலர்கள் துவாரவயல் த.செல்வம், சாந்தி தங்கசிங்கம், கை. பழனிச்சாமி, முனைவர் குறிஞ்சிவாணன், அ. பிரபா, கே. எஸ். ச.இளையசூரியன், எஸ்.வி. ஆர்.ஸ்டா லின், பொன். பாரிவள்எல், மு.கலைஞர் கருணாநிதி,

விளாப்பட்டி சிவா, ஆ. ராஜேந்திர சோழன், சுகி (எ) சுகுமாறன், கே. ஆர்.பாலமுத்து, சாங்கிராப்பட்டி ரவி, குளத்தூர் மணிராஜன், சுந்தர்ராஜ், ஓ.ஆறுமுகம், தமிழினியன், சின்னத்துரை, எழில்ராஜா, சண்முகம். ராஜா, சிவா, கிட்டு, ராஜா, மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளிட்ட மாநில மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகி கள்,கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் என பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டனர். முடிவில் அன்னவாசல் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ் சந்திரன் நன்றி கூறினார்.

---

இராயபுரம் மேற்குப் பகுதியில்

# வேட்பாளர் கலாநிதி வீராசாமி இன்று வாக்கு சேகரிக்கிறார்!

## பகுதிச்செயலாளர் வ.பெ.சுரேஷ் அறிக்கை!

சென்னை, மார்ச் 30

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்குப்பகுதியில் வடசென்னை நாடாளுமன்ற தொகுதி "இந்தியா" கூட்டணி கழக வேட்பாளர் டாக்டர் கலாநிதி வீராசாமி இன்று வாக்கு சேகரிக்கிறார் என்று பகுதி செயலாளர் வ. பெ.சுரேஷ் அறிவித்துள்ளார்.

இன்று (30.3.2024) காலை 7 மணி முதல் 11 மணி வரையில்

48வது வட்ட செயலாளர் இரா.பாலன் தலைமையில் - சுப்பராயன் தெரு, சோலையப்பன் தெரு, தெலுங்கு செட்டி தெரு, நல்லப்ப வாத்தியார் தெரு, மேற்கு கல்லறை சாலை, டி.எச்.ரோடு, சண்முகநாராயன் தெரு, ராமானுஜ கூடம் தெரு, பசுவையன் தெரு, நமச்சிவாயம் தெரு,எம்.எஸ்.நாயுடு தெரு நாபா திருமணமாளிகை முடிவு.

48(அ) வட்ட செயலாளர் எம்.எல்.ரவி தலைமையில் - உல்லாரம்மன் கோவில் தெரு, அம்மையப்பன் தெரு, நைனியப்பன் தெரு, மன்னிப்பான் தெரு, முத்தையா முதலி தெரு, டி.எச்.ரோடு, பார்த்தசாரதி பிள்ளை தெரு, டி.பி.கே. தெரு முடிவு.

52(அ) வட்ட செயலாளர் கொரியர் முருகன் தலைமையில் - பரசுராமன் தெரு, தர்மராஜா கோயில் தெரு, பரசுராமன் தெரு, குப்பம்மாள் தெரு, முத்தையா மேஸ்திரி தெரு, பாலசுப்பிரமணி தெரு, ஜெயராம் நாடார் தெரு, அஜீஸ் முகம்மது தெரு, சஜ்ஜா முனுசாமி தெரு, முத்தையா செட்டி தெரு, பாரத் தெரு.

53வது வட்ட செயலாளர் பாலலக்ஷ்மணன் தலைமையில் - சீனிவாசபுரம் முதல் தெரு, சீனிவாசபுரம் 2வது தெரு, போஜராஜ நகர் 1வது தெரு, போஜராஜ நகர் 21வது தெரு, போஜராஜ நகர் மெயின் தெரு, மிண்ட் மாடர்ன் சிட்டி வாக்கு சேகரிக்கப்படுகிறது.

அதேபோன்று மாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

53(அ) வட்டச் செயலாளர் ஜெ.கௌரீஸ்வரன் தலைமையில் -நாகப்பா நகர், ஸ்டான்லி நகர், கெணால் தெரு, கொல்லாபுரி நகர் மெயின் சாலை, பி.பி.அம்மன் கோவில் 1வது வழியாக 7வது தெரு வெளியே வருதல், நியூ லேபர் லைன், காத்பாடா மெயின் ரோடு, இராமதாஸ் நகர், முஸ்லீம் பகுதி, பென்சில் 2வது சந்து வழியாக 3வது சந்து வெளியாக வருதல், தங்கசாலை மணிக்கூண்டு வழியாக சென்று படவேட்டம்மன் கோவில் தெருவில் வாக்கு சேகரிப்பு

52வது வட்ட செயலாளர் எஸ்.புகழேந்தி தலைமையில் - ஸ்டான்லி கேட் (பழைய ஆடுத் தொட்டி சாலை வழியாக), ஓ.எஸ்.பி. ரோடு, இராயபுரம் மேம்பாலம், மேற்கு மாத கோவில் தெரு, நாகாத்தம்மன் கோவில் தெரு, பி.சி.பிரஸ் ரோடு, ஆதாம் தெருஅப்பையர் சந்து, தொப்பை தெரு, பஜனை கோவில் தெரு, ராமா தெரு, டோபிகானா கார்னர் (ரோப் குடவுன்) டாக்டர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனை வழியாக சென்று

52(அ) வட்ட செயலாளர் கொரியர் முருகன் தலைமையில் - மாடல் லேன் ஹவுசிங் போர்டு ஏ பிளாக் வழியாக சென்று W பிளாக் உதய சூரியன் நற்பணி மன்றத்தின் அருகில் வாக்கு சேகரிப்பு நிறைவு பெறுகிறது.

வாக்கு சேகரிப்பு நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற் குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள்,பகுதி செயலாளர்கள்,தொகுதி பொறுப்பாளர், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், தொகுதிக்குட்பட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள் "இந்தியா" கூட்டணியின் மாவட்ட பகுதி வட்டநிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் கலந்து கொள்ள வேண்டுமாய் பகுதிச் செயாளர் வ.பெ.சுரேஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

திருப்பெரும்புதூர் தொகுதி வேட்பாளர் டி.ஆர்.பாலுவை ஆதரித்து

# அம்பத்தூர் வடக்கு - தெற்கு - கிழக்கு பகுதி பாக முகவர்கள் கூட்டம்: கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

## சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டம் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்களை ஆதரித்து அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர், வடக்கு பகுதிசெயலாளர் ஜோசப் சாமுவேல், ஏழாவது மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி, அம்பத்தூர் தெற்கு பகுதி செயலாளர், டி.எஸ்.பி. ராஜகோபால், அம்பத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் ஆகியோர் முன்னிலையில் 30.03.2024 சனிக்கிழமை இன்று மாலை 4.00 மணியளவில், சென்னை அம்பத்தூர், டெலிபோன் எக்ஸ்சேஞ் அருகில் உள்ள புட்கோர்ட் எதிரில் நடைபெறும் BLA2, BLC பாக நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

இதில் தொகுதி பொறுப்பாளர் பி.டி.சி.செல்வராஜ், மருத்துவ அணி அமைப்பாளர் ஜி. சாந்தகுமாரி எம்.சி., மாவட்ட ஆதிதிராவிடர் நல குழு அமைப்பாளர்எல்.பி.எப்.மோகன், பொதுக்குழு உறுப்பினர் டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி., மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ஜீ.வி.நாகவள்ளி எம்.சி., மாவட்ட மீனவரணி அமைப்பாளர் து.ஆயிரம், மாவட்ட அமைப்புசாரா ஆட்டோ ஓட்டுநர் அணி அமைப்பாளர் கு.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெ.பாலமுருகன், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் க.பொற்கொடி எம்.சி., எஸ்.உமா எம்.சி., உஷாநாகராஜ் எம்.சி. எம்.இ.சேகர் எம்.சி. ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

எனவே இக்கூட்டத்தில் அம்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வடக்கு, தெற்கு, கிழக்கு பகுதியை சேர்ந்த கழக மற்றும் கூட்டணி கட்சியை சார்ந்த பகுதி மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழக அணிகளின் அமைப்பாளர்கள், மார்றும் துணை அமைப்பாளர்கள், (BLA2) பாகபொறுப்பாளர்கள் BLC பாகநிலை முகவர்கள், கழக செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்புபிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

**பி.கே.சேகர்பாபு**
அமைச்சர் - செயலாளர்
சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தியாகராயர் நகர் - மயிலாப்பூரில் பிரச்சாரம் குறித்து!

# சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன் வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 30-

சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் குறித்து மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தென் சென்னை நாடாளுமன்ற வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து கழக இளைஞரணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஏப்ரல் 2 - செவ்வாய்க்கிழமை அன்று தியாகராயர் நகர் மற்றும் மயிலாபூரில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

அதுகுறித்து மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த. வேலு அறிவுறுத்தல்படி பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை எம்.சி., நந்தனம் மதி எம்.சி. மற்றும் எஸ்.முரளி ஆகியோரின்ஆலோசனைக்கிணங்க எனது (ராஜா அன்பழகன்) தலைமையில் 31.3.2024 - ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு தியாகராயர் நகர் பேருந்து நிலையம் அருகில் உள்ள இளைஞர் அணி மாவட்ட அலுவலகமான மனமகிழ் மன்றத்தில் மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் தென்மேற்கு மாவட்டத்தை சேர்ந்த துணை அமைப்பாளர்கள் மற்றும் அனைத்து இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ராஜா அன்பழகன் தெரிவித்துள்ளார்.

---

## சென்னை கிழக்கு மாவட்டம்

# மத்திய சென்னை நாடாளுமன்ற தேர்தல் 2024!

## மாவட்ட கழகச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை கிழக்கு மாவட்டம், மத்திய சென்னை, வடசென்னை நாடாளுமன்ற இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் தயாநிதிமாறன், டாக்டர். கலாநிதி வீராசாமி ஆகியோரை ஆதரித்து நடைபெறும் தேர்தல் பணிமனை திறப்பு விவரம்.

| நாள்/நேரம் | பொருள் | இடம் |
|---|---|---|
| 30.03.2024 சனிக்கிழமை காலை 8 மணி முதல் | **எழும்பூர் வடக்கு பகுதி** தேர்தல் பணிமனை திறப்பு | ஆலந்தூர் சுப்பிரமணியம் தெரு, சூளை, சென்னை-112. |
| | 77வது வார்டு தேர்தல் பணிமனை திறப்பு | எண்.99/44, காஜாஷாகிப் தெரு, புளியந்தோப்பு, சென்னை-12. |
| | 78வது வார்டு தேர்தல் பணிமனை திறப்பு | எண்.17, மாணிக்கம் தெரு, சூளை, சென்னை7. |
| | 99வது வார்டு தேர்தல் பணிமனை திறப்பு | எண்.131, வள்ளாள தெரு, புரசைவாக்கம், சென்னை-84. |
| 30.03.2024 சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் | **எழும்பூர் தெற்கு பகுதி** 61 மற்றும் 61 'அ' வட்டம் இணைந்து தேர்தல் பணிமனை திறப்பு | எண்.31, எழும்பூர் நெடுஞ்சாலை, எழும்பூர், சென்னை- 8. |
| | 108 மற்றும் 108 'அ' வட்டம் இணைந்து தேர்தல் பணிமனை திறப்பு | வ.உ.சி மன்றம் ஹாரிங்டன் ரோடு, செனாய் நகர், சென்னை-30 |
| 30.03.2024 சனிக்கிழமை காலை 11.00 மணி முதல் | **திரு.வி.க.நகர் வடக்கு பகுதி** 71வது வார்டு தேர்தல் பணிமனை திறப்பு | எண்.27/46, நெல்வயல் சாலை, பெரம்பூர், (பெட்ரோல் பங்க் பின்புறம்) |

மேற்கண்ட தொகுதியில் நடைபெறும் தேர்தல் பணிமனை திறப்பு நிகழ்ச்சியில் கழக மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் **பி.கே. சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.



வடசென்னை நாடாளுமன்ற தொகுதி சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் சட்ட மன்ற தொகுதியில் இந்தியா கூட்டணி கட்சிகளின் வெற்றி வேட்பாளர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களை ஆதரித்து 35வது வட்டம் முத்தமிழ் நகர் மசூதி அருகில் இஸ்லாமிய மக்களிடம் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் வாக்கு சேகரித்தார். உடன் மதிமுக மாவட்ட செயலாளர் சு.ஜீவன் பகுதி செயலாளர் அ.முருகன் மாவட்ட துணை செயலாளர் எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வட்ட செயலாளர் மு.உமாபதி மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் மத்திய பகுதி புனித தோமையார் தெற்கு ஒன்றிய தேர்தல் பணிமனை – மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஒன்றிய கழக செயலாளர் ஜி. வெங்கடேசன், வி.இ. மதியழகன் தலைமை செயற்குழு உறுப்பினர் பாலவாக்கம் க.சோமு, மாவட்ட கழக நிர்வாகிகள் பாலவாக்கம் விசுவநாதன், பாலவாக்கம் மனோகரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.கே. ஏழுமலை,த.பஷீர், எஸ்.ஏ. ஹரிகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ. எழில் பாண்டியன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

## மத்திய சென்னை நாடாளுமன்றத் தேர்தல் - 2024 தொகுதிகள் தோறும் தேர்தல் பணிக்குழு விவரம்!

**மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!**



### ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு விவரம்

| வ.எண் | பொறுப்பாளர்கள் பெயர் | பொறுப்பு | கட்சி | தொலைபேசி எண் |
|---|---|---|---|---|
| 1. | நா. எழிலன், எம்.எல்.ஏ. | தலைவர் | தி.மு.க. | 9841577595 |
| 2. | மா.பா. அன்புதுரை | செயலாளர் | தி.மு.க. | 9094579986 |
| 3. | வினோத் வேலாயுதம் | செயலாளர் | தி.மு.க. | 9884081820 |
| 4. | து. விக்டர் | உறுப்பினர் | தி.மு.க. | 9840393019 |
| 5. | வி.எஸ். கலைச்செல்வன் | உறுப்பினர் | தி.மு.க. | 9789961189 |
| 6. | ஜெ.எஸ். அகஸ்டின்பாபு | உறுப்பினர் | தி.மு.க. | 9884122129 |
| 7. | வி.எஸ். ராஜ் | உறுப்பினர் | தி.மு.க. | 9444457017 |
| 8. | எம்.டி.ஆர். நாதன் | உறுப்பினர் | தி.மு.க. | 9444112009 |
| 9. | ஜெ. நற்குணநாதன் | உறுப்பினர் | தி.மு.க. | 9841099688 |
| 10. | ஜோஸ் டேனியல் | உறுப்பினர் | தி.மு.க. | 9444364433 |
| 11. | இராபர்ட் | உறுப்பினர் | தி.மு.க. | 9840170888 |
| 12. | வெற்றிச்செல்வி | உறுப்பினர் | தி.மு.க. | 9962908841 |
| 13. | துபாய் V.R. விஜய் | உறுப்பினர் | தி.மு.க. | 9884401112 |
| 14. | மு. சீனிவாசன் | உறுப்பினர் | தி.மு.க. | 9444012340 |
| 15. | திருமலை பொன்னுரங்கம் | உறுப்பினர் | தி.மு.க. | 9840077888 |
| 16. | டி.கே. லதா ஃபிளாரன்ஸ் | உறுப்பினர் | தி.மு.க. | 8925204062 |
| 17. | ஜி.வி. சரவணன் | உறுப்பினர் | தி.மு.க. | 9840731111 |
| 18. | டி.எஸ். ராஜா | உறுப்பினர் | தி.மு.க. | 9841746593 |
| 19. | எம்.டி.ஆர். சாரதி மணிமாறன் | உறுப்பினர் | தி.மு.க. | 9382323242 |
| 20. | ஜே.எம்.எச். இம்ரான் | உறுப்பினர் | தி.மு.க. | 9840510076 |
| 21. | மோகனவேல் | உறுப்பினர் | தி.மு.க. | 9840260250 |
| 22. | சிவராஜசேகரன் | உறுப்பினர் | காங்கிரஸ் | 9840038386 |
| 23. | சைதை. சுப்பிரமணி | உறுப்பினர் | ம.தி.மு.க. | 9444949488 |
| 24. | பா. வேலுமணி | உறுப்பினர் | வி.சி.க. | 9791040776 |
| 25. | தோழர் ஜி. செல்வா | உறுப்பினர் | சி.பி.எம். | 9444182960 |
| 26. | பி. கருணாநிதி | உறுப்பினர் | சி.பி.ஐ. | 9381023046 |
| 27. | யூசுப் குலாம் முகமது | உறுப்பினர் | இ.யூ.மு.லீக் | 9840562959 |
| 28. | இ.எம். ரசூல் | உறுப்பினர் | ம.ம.க. | 9444104381 |
| 29. | சினேகா மோகன்தாஸ் | உறுப்பினர் | ம.நீ.ம. | 9003661122 |
| 30. | ஆரிப் | உறுப்பினர் | ஆம் ஆத்மி | 9841573452 |
| 31. | முகமது | உறுப்பினர் | ம.ஜ.க. | 9840305328 |

**தொகுதி மேற்பார்வையாளர் : டாக்டர் கலைகதிரவன் 9962969268**

### அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு விவரம்

| வ.எண் | பொறுப்பாளர்கள் பெயர் | பொறுப்பு | கட்சி | தொலைபேசி எண் |
|---|---|---|---|---|
| 1. | எம்.கே.மோகன், எம்.எல்.ஏ. | தலைவர் | தி.மு.க. | 9384877779 |
| 2. | ந. இராமலிங்கம் | செயலாளர் | தி.மு.க. | 9444072575 |
| 3. | ச. பரமசிவம் | செயலாளர் | தி.மு.க. | 9444402345 |
| 4. | கார்த்திக் மோகன் | உறுப்பினர் | தி.மு.க. | 9841977777 |
| 5. | குமரி விஜயகுமார் | உறுப்பினர் | தி.மு.க. | 9884040950 |
| 6. | டாக்டர் நா. சந்திரபாபு | உறுப்பினர் | தி.மு.க. | 9600179302 |
| 7. | ஏ.வி.ஆர். கோபால்ராம் | உறுப்பினர் | தி.மு.க. | 996255118 |
| 8. | ராணி ரவிச்சந்திரன் | உறுப்பினர் | தி.மு.க. | 9952056722 |
| 9. | ராம்குமார் | உறுப்பினர் | தி.மு.க. | 9841135567 |
| 10. | ஏ. சங்கீதா | உறுப்பினர் | தி.மு.க. | 9841444973 |
| 11. | எஸ். சேரன் | உறுப்பினர் | தி.மு.க. | 9444077736 |
| 12. | ஏ.டி. முருகன் | உறுப்பினர் | தி.மு.க. | 9445444444 |
| 13. | கராத்தே என். ஆனந்த் | உறுப்பினர் | தி.மு.க. | 9176260007 |
| 14. | யோகேஸ்வரி சுந்தரேசன் | உறுப்பினர் | தி.மு.க. | 9094990349 |
| 15. | வழக்கறிஞர் தேவேந்திரன் | உறுப்பினர் | தி.மு.க. | 9840060975 |
| 16. | ச. அசோக்குமார் | உறுப்பினர் | தி.மு.க. | 9500036771 |
| 17. | ஜீவகன் அய்யநாதன் | உறுப்பினர் | தி.மு.க. | 9841082222 |
| 18. | என். அரவிந்த் குமார் | உறுப்பினர் | தி.மு.க. | 9840899766 |
| 19. | குட்டி (எ) சுப்பிரமணி | உறுப்பினர் | தி.மு.க. | 9840599788 |
| 20. | வீரபாண்டி | உறுப்பினர் | காங்கிரஸ் | 9381073433 |
| 21. | சுப்பிரமணி | உறுப்பினர் | ம.தி.மு.க. | 9444949488 |
| 22. | பா. வேலுமணி | உறுப்பினர் | வி.சி.க. | 9791040776 |
| 23. | தோழர் செல்வா | உறுப்பினர் | சி.பி.எம். | 9444182960 |
| 24. | கருணாநிதி | உறுப்பினர் | சி.பி.ஐ. | 9381023046 |
| 25. | யூசுப் குலாம் முகமது | உறுப்பினர் | இ.யூ.மு.லீக் | 9840562959 |
| 26. | சதாம் உசேன் | உறுப்பினர் | ம.ம.க. | 9941056703 |
| 27. | சிநேகா மோகன்தாஸ் | உறுப்பினர் | ம.நீ.ம. | 9003661122 |
| 28. | ஆரிப் | உறுப்பினர் | ஆம் ஆத்மி | 9841573452 |
| 29. | ரசூல் ரஹிம் | உறுப்பினர் | ம.ஜ.க. | 8228499300 |
| 30. | விஸ்வநாதன் | உறுப்பினர் | தி.க. | 9841895601 |

**தொகுதி மேற்பார்வையாளர் : பத்மபிரியா – 7010932733**

### சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு விவரம்

| வ.எண் | பொறுப்பாளர்கள் பெயர் | பொறுப்பு | கட்சி | தொலைபேசி எண் |
|---|---|---|---|---|
| 1. | ஏ.ஆர்.பி. எம். காமராஜ் | செயலாளர் | தி.மு.க. | 9840014849 |
| 2. | எஸ். மதன்மோகன் | செயலாளர் | தி.மு.க. | 9444071150 |
| 3. | ஆர்.என். துரை | உறுப்பினர் | தி.மு.க. | 9444442006 |
| 4. | வி.என். ராஜன் | உறுப்பினர் | தி.மு.க. | 9444225522 |
| 5. | கவிஞர் தமிழ்தாசன் | உறுப்பினர் | தி.மு.க. | 9840401025 |
| 6. | வி.பி. மணி | உறுப்பினர் | தி.மு.க. | 9841745999 |
| 7. | வி.பி. பொன்னரசு | உறுப்பினர் | தி.மு.க. | 9841937547 |
| 8. | சுரேஷ் குமார் | உறுப்பினர் | தி.மு.க. | 9444392525 |
| 9. | கமலா செழியன் | உறுப்பினர் | தி.மு.க. | 9500033715 |
| 10. | ரவி ராஜ்குமார் | உறுப்பினர் | தி.மு.க. | 9840883307 |
| 11. | கணேஷ்பிரபு (எ) ராஜேஷ் | உறுப்பினர் | தி.மு.க. | 9841135335 |
| 12. | ப. பிரகாஷ் | உறுப்பினர் | தி.மு.க. | 8190000079 |
| 13. | ஏ. விஜயராஜ் | உறுப்பினர் | தி.மு.க. | 9840342702 |
| 14. | எஸ்.எச். ரஹமத்துல்லா | உறுப்பினர் | தி.மு.க. | 9884671588 |
| 15. | இ. இளம்பாரதி | உறுப்பினர் | தி.மு.க. | 9444202708 |
| 16. | சி.கெ. ரெங்கராஜ் | உறுப்பினர் | தி.மு.க. | 9710723379 |
| 17. | எம்.கே. ஆனந்த் | உறுப்பினர் | தி.மு.க. | 9840622535 |
| 18. | கோ. ராஜராஜன் | உறுப்பினர் | தி.மு.க. | 9841819790 |
| 19. | பாலசந்தர் | உறுப்பினர் | தி.மு.க. | 7299963335 |
| 20. | தினேஷ் | உறுப்பினர் | தி.மு.க. | 9003290529 |
| 21. | சிவராஜசேகரன் | உறுப்பினர் | காங்கிரஸ் | 9840038386 |
| 22. | கழக குமார் | உறுப்பினர் | ம.தி.மு.க. | 9500133889 |
| 23. | சாரநாத் | உறுப்பினர் | வி.சி.க. | 9884082930 |
| 24. | தோழர் செல்வா | உறுப்பினர் | சி.பி.எம். | 9444182960 |
| 25. | பி. கருணாநிதி | உறுப்பினர் | சி.பி.ஐ. | 9381023046 |
| 26. | யூசுப் குலாம் முகமது | உறுப்பினர் | இ.யூ.மு.லீக் | 9840562959 |
| 27. | இ.எம். ரசூல் | உறுப்பினர் | ம.ம.க. | 9444104381 |
| 28. | ஓம் பிரகாஷ் | உறுப்பினர் | ம.நீ.ம. | 9940636187 |
| 29. | ஆரிப் | உறுப்பினர் | ஆம் ஆத்மி | 9841573452 |
| 30. | தாஜீதீன் | உறுப்பினர் | ம.ஜ.க. | 8807399518 |
| 31. | வில்வநாதன் | உறுப்பினர் | தி.க. | 9841895601 |

**தொகுதி மேற்பார்வையாளர் : சி.எச்.சேகர் – 9840777888**

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

## பா.ஜ.க. பெரிய ஸ்டிக்கர் ஒட்டும் கட்சி - அ.தி.மு.க. சின்ன ஸ்டிக்கர் ஒட்டும் கட்சி!

# இந்த இரண்டு ஸ்டிக்கர்களும் தேர்தலுக்குப் பிறகு ஒட்டிக்கொள்ளும்!

## துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி பேச்சு!

திருப்பூர், மார்ச் 30 -

திருப்பூர் தெற்கு மாவட்டம், வெள்ளக்கோவிலில் நடந்த தேர்தல் பிரச்சா ரத்தில் என்றைக்காவது மோடியைப் பற்றி எடப்பாடி ஒரு வார்த்தை பேசி இருப்பாரா? ஏனெனில் பாஜக பெரிய ஸ்டிக்கர் ஒட்டும் கட்சி, அ.தி.மு.க. சின்ன ஸ்டிக்கர் ஒட்டும் கட்சியாக இருக்கிறது. இந்த இதாண்டு ஸ்டிக்க ர்களும் தேர்தலுக்கு பிறகு ஒட்டிக்கொள்ளும் என கழக துணை பொதுச் செயலாளர், கனிமொழி கருணாநிதி கூறினார்.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணியின் ஈரோடு நாடாளுமன்ற தொகுதி கழக வேட்பாளர், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே. இ.பிரகாஷை ஆதரித்து கழக துணை பொதுச் செயலாளர், நாடாளுமன்ற குழுத்தலைவர் கனிமொழி கருணாநிதி வெள்ளக்கோவில் கடைவீதி பகுதியில் திறந்த வேனில் பிரச்சாரம் மேற்கொண்டார்.



இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ். திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், துணை செயலாளர்கள் ராசி கே. ஆர்.முத்துக்குமார், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பிரபாவதி பெரியசாமி, நகர கழகச் செயலா ளர்கள் சபரி எஸ்.முருகானந்தம் வெள்ளக்கோவில், வசந்தம் நா. சேமலை யப்பன் காங்கேயம், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.சந்திரசேகரன் வெள்ளக்கோவில், சிவ.செந்தில்குமார் குண்டடம் கிழக்கு, கே.கே.சிவா னந்தன் காங்கேயம் தெற்கு, சி.கருணை பிரகாஷ் காங்கேயம் வடக்கு, எஸ்.ஆர்.எஸ். செல்வம் (எ) தமிழ்ச்செல்வன் சென்னிமலை மேற்கு, சி.பிரபு சென்னிமலை கிழக்கு உள்பட மாவட்ட., ஒன்றிய, நகர, பேரூர், வட்டக் கழக, கிளை கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பிரச்சாரத்தில் கனிமொழி கருணாநிதி பேசியதாவது :

தமிழ்ல கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்தியா கூட்டணியின் ஈரோடு நாடாளுமன்ற தொகுதி கழக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள இ.கே.பிரகாஷ் திராவிட இயக்க பரம்பரையில் இருந்து வந்தவர். அவருடைய தந்தை 50 ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளை செயலாளராக உள்ளார். அந்த வழியில் வந்தவர் தான் இவர், வேட்பாளராக அறிவிப்பதற்கு முன்பாக ஈரோடு தொகுதியில் அதிகமாக கேன்சர் வரக்கூடிய அபாயம் உள்ளதால் ஈரோடு தொகுதிக்கு புற்று நோய்க்கு தனிப்பிரிவு வேண்டுமென தேர்தல் அறிக்கையின் போது தெரிவித்தார். அதை தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சேர்த்துள்ளார். தி.மு.க. தேர்தல் அறிக்கையில் வந்தது நிச்சயமாக நிறைவேற்றப்படும். டெல்லியில் விவசாயிகள் போராட்டத்தில் ஒரு அமைச்சரின் மகன், விவசாயிகள் மீது காரை ஏற்றி நான்கு பேரை கொலை செய்த கொடுமையும் நடந்தது. உழைக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு எதிரான சட்டங்கள் என அனைத்தையும் கொண்டு வந்தது. சிறுபான்மையினருக்கு எதிரான சி.ஏ.ஏ. சட்டம் எல்லாவற்றையும் கொண்டு வந்தது மோடியின் பா.ஜ.க. ஆட்சி தான், இதற்கெல்லாம் ஆதரித்து வாக்களித்தது அப்போதைய எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி. தற்போது நல்லவர் போல தனியாக இருப்பது போன்று ஓட்டு கேட்கிறார். இன்றைய வரைக்கும் தேர்தல் பிரச்சாரத்தில் என்றைக்காவது மோடியை பற்றி ஒரு வார்த்தை பேசி இருப்பாரா? ஏனெனில் பாஜக பெரிய ஸ்டிக்கர் ஒட்டும் கட்சி, அ.தி..மு.க சின்ன ஸ்டிக்கர் ஒட்டும் கட்சி. இந்த இரண்டு ஸ்டிக்கர்களும் தேர்தலுக்கு பிறகு ஒட்டிக் கொள்ளும். அதனால் அவர்களை நம்பி வாக்களிக்க கூடாது. மத்தியில் பாஜக ஆட்சி அமைந்ததும் 15 லட்சம் வங்கி கணக்கில் போடுவதாக சொன்னார்கள். ஆனால் வரவில்லை. ஆனால் வங்கி கணக்கில் மினிமம் பேலன்ஸ் இல்லை என்றாலும் கூட அந்த பணத்தையும் எடுத்துக் கொண்டு விட்டார்கள். ஆயிரம். ஐநூறு செல்லாது என்றார்கள். பின்பு 2000 நோட்டு செல்லாது என்றார்கள். இப்படி கோமாளித்தனமான ஆட்சியை நடத்தி கொண்டுள்ளனர்.

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் ஸ்டாலின் அவர்கள் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி தமிழகத்தை முன்னணி மாநிலமாக மாற்றி காட்டியுள்ளார். தேர்தல் அறிவிப்பில் கூறிய படி மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் வழங்கப் பட்டு வருகிறது. இன்று வரை 1கோடியே 15 லட்சம் மகளிருக்கு உரிமை தொகை வழங்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாட்டின் மீது அக்கறையும் மரியாதையும் உள்ள ஆட்சி மத்தியில் வர வேண்டும். பா.ஜ..கவில் பெண்களுக்கு பாதுகாப்பு இருக்காது. அதனால் இந்தியா கூட்டணிக்கு நீங்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும் .

இவ்வாறு கனிமொழி கருணாநிதி பேசினார்.



திருச்சி நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி வேட்பாளர் துரை வைகோ நேற்று மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவாவை மரியாதை நிமித்தமாகச் சந்தித்து வாக்குச் சேகரித்தார்.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வாகை சந்திரசேகர் தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணம்! (திருத்தப்பட்டது)

## தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலை யொட்டி, கழக கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 01-04-2024 | - | திருநெல்வேலி |
| 02-04-2024 | - | கன்னியாகுமரி |
| 03-04-2024 | - | தூத்துக்குடி |
| 04-04-2024 | - | தென்காசி |
| 05-04-2024 | - | விருதுநகர் |
| 06-04-2024 | - | தேனி |
| 07-04-2024 | - | மதுரை |
| 08-04-2024 | - | இராமநாதபுரம் |
| 09-04-2024 | - | இராமநாதபுரம் |
| 10-04-2024 | - | சிவகங்கை |
| 11-04-2024 | - | தஞ்சாவூர் |
| 12-04-2024 | - | பெரம்பலூர் |
| 13-04-2024 | - | சேலம் |
| 14-04-2024 | - | நாமக்கல் |
| 15-04-2024 | - | ஈரோடு |
| 16-04-2024 | - | கோயம்புத்தூர் |


மேற்குறிப்பிட்ட நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்டக்கழகச்செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”** சென்னை - 18 நாள்- 29.3.2024

**தலைமைக் கழகம்** தி.மு.க.

# கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சிப் பேருரை கேட்க

## தருமபுரி மாவட்டம் - தடங்கத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் மக்கள் கடல் காணீர்!












கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.3.2024) தருமபுரி மாவட்டம், தடங்கம்பகுதியில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் தர்மபுரி வேட்பாளர் ஆ.மணி அவர்களையும், கிருஷ்ணகிரி வேட்பாளர் கோபிநாத் அவர்களையும் அறிமுகப்படுத்தி இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அர. சக்கரபாணி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் செல்வகணபதி, தடங்கம் சுப்பிரமணி, பிரகாஷ், பழனியப்பன், மதியழகன், நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில் குமார், சட்டமன்ற உறுப்பினர் இராமசந்திரன், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் தங்கபாலு, ஒருங்கிணைந்த தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

# உடன்பிறப்பே... 51

**நீரை.மகேந்திரன்**

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில் பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த ச.அக்கினிராசு அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்..**



ஓவியம் : ரவி பேலட்

# ச.அக்கினிராசு

## கொள்கை தீபத்தின் எஃகு இதயம்!

*1964*-ஆம் ஆண்டு, மொழிப்போர் உச்சம் பெற்றிருந்த நேரம். இந்தி ஆதிக்க அரசியல் சட்ட மொழிப்பிரிவை எரிக்க வேண்டும் என பேரறிஞர் அண்ணா அவர்கள், தனது தம்பிகளுக்குக் கட்டளையிட்டார்.

மதுரை மாநகரின், திலகர் திடல்தான் அந்தப் போராட்டத்தின் மையம். முத்தமிழறிஞர் கலைஞர் போராட்டத்தின் பொறுப்பாளர். களவீரர்களின் பட்டியலில் இடம்பிடிக்க கழகத்தினர் நீ, நான் என போட்டியிட்டனர். அவர்களில் 31 வயதான இளைஞர் ஒருவர், தனது அரசுப் பணியினைத் தூக்கி எறிந்துவிட்டு, போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைப்பட்டார்.

மதுரைச் சிறையிலும், திருச்சி சிறையிலுமாக 18 மாத கால சிறைவாசத்துக்குப் பின்னர் விடுதலையான அந்த இளைஞரை வரவேற்க, திருச்சி மத்திய சிறைவாசலுக்கே வந்து நின்றார் அண்ணா. அண்ணாவின் அன்பையும், கலைஞரின் வழிகாட்டலையும் பெற்ற அந்த இளைஞர் பெயர் அக்கினிராசு.

### எஃகு உறுதி

“மதுரை மாவட்ட தி.மு.கவின் எஃகு போன்ற உறுதி படைத்த அக்கினிராசு, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கை தீபத்தை ஏந்தி, தி.மு.க.வுக்கும், மக்களுக்கும் சிறப்பாகப் பணியாற்றியவர்” என இன்றைய கழகத்தலைவர் போற்றிய கழக முன்னோடி, கலைஞரின் அன்பு உடன்பிறப்பு அக்கினிராசு.

1933-ஆம் ஆண்டு, மதுரை, திருப்பரங்குன்றம் அருகிலுள்ள கூத்தியார்குண்டு என்கிற கிராமத்தில் பிறந்தவர் அக்கினிராசு. தந்தை பெயர் சங்கிலி சேர்வை. தாயார் பெயர் மூக்காயி அம்மாள். உடன்பிறந்தவர்கள் 4 பேர்.

அக்கினிராசுவின் தந்தை, அன்றைய சென்னை மாகாணக் காவல்துறையில், தலைமைக் காவலராக, ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்தில் பணியாற்றியவர் என்பதால், ஓரளவு பொருளாதாரத் தன்னிறைவு கொண்டிருந்தார். அதனால், அக்கினிராசுவுக்குக் கல்வி கிடைப்பதில் சிரமங்கள் இல்லை. தொடக்கக் கல்வியை உள்ளூரிலும், உயர்நிலைக் கல்வியை பசுமலையிலும், பின்னர் மதுரையில் கல்லூரிப் படிப்பையும் முடித்தார்.

1951-ஆம் ஆண்டில், கல்லூரியில் மாணவர் மன்ற நிகழ்ச்சிக்காக அறிஞர் அண்ணா வந்தபோது, வரவேற்றுப் பேசிய மாணவர் அக்கினிராசு. அவரது பேச்சைக் கேட்ட அண்ணா, மதுரை முத்து, எஸ்.எஸ்.தென்னரசு ஆகிய தென்மாவட்ட முன்னோடிகளிடம் அக்கினிராசுவை வளர்த்துக் கொண்டு வர வேண்டும் எனக் கூற, அவ்வாறே அரசியல், திராவிட முன்னேற்றக் கழகம் என அவரது அரசியல் வாழ்க்கை தொடங்கியது.

### திருப்பரங்குன்றம் மாநாடு

கல்லூரி முடித்த அவருக்கு மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வரைபட உதவியாளர் வேலை கிடைக்க, வேலையில் இருந்து கொண்டே இயக்கப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். குறிப்பாக, தனது 18 வயதிலேயே திருப்பரங்குன்றம் நகர தி.மு.க. செயலாளராகப் பொறுப்பேற்றுச் செயல்பட்டவர் அக்கினிராசு.

1962-ஆம் ஆண்டில் கழகம் முதல் பிளவினை சம்பத் உருவில் சந்தித்தது. அதையடுத்து, கழகத்தின் மாநில மாநாடு மதுரையில் நடத்த முடிவானபோது, திருப்பரங்குன்றம் அருகே நடத்த அதற்கான ஏற்பாடுகளைச் செய்தவர். அவனியாபுரம் - திருப்பரங்குன்றம் இடையே, தனியாருக்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலத்தில் மிகப் பிரமாண்டமான மாநாட்டுத் திடலை உருவாக்கியதுடன், மாநாட்டில் விருந்தினர் உபசரிப்புக் குழுவிலும், தொண்டர் படைத் தளபதியாகவும் செயல்பட்டு, கழக முன்னோடிகளின் அன்புக்குப் பாத்திரமானார்.

### ரத்தத்தில் கழகம்

அரசுப் பணியில் இருந்தாலும், அதை இரண்டாம்பட்சமாகக் கருதியதுடன், கழகப் பணியே அவரது ரத்தத்தில் கலந்த உணர்வாக இருந்தது என்பதை மெய்ப்பிப்பதற்கான காலமாக மொழிப்போர் அமைந்தது. தமிழ் மொழியைப் பாதுகாக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்தப் போராட்டத்தில் துணிச்சலுடன் பங்கேற்ற ஐவர் குழுவில் ஒருவராக இருந்தார். அப்போது, கைது செய்யப்பட்டு 18 மாதங்கள் சிறைத் தண்டனை பெற்றார். சிறையில் இருந்து வெளிவந்தவரை வாசலிலேயே நின்று வரவேற்றவர் பேரறிஞர் அண்ணா.

1967-ஆம் ஆண்டில், சட்டமன்றத் தேர்தலில், திருப்பரங்குன்றம் தொகுதியில் போட்டியிட்டு தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆருக்கு அடுத்து, அதிக ஓட்டு வித்தியாசத்தில் வெற்றிபெற்றார் அக்கினிராசு.

### கிழிக்கப்பட்ட தீர்மான நகல்

அண்ணாவுக்குப் பின்னர் கலைஞரின் தலைமையை ஏற்ற முன்னோடிகளில் மதுரையின் அக்கினிராசுவுக்குத் தனி இடம் உண்டு. 1972-ஆம் ஆண்டில், கலைஞரின் தலைமையை ஏற்பதில், சில தலைவர்களுக்கு முரண்பாடு உருவானபோது மதுரை நகரில் பெரும் குழப்பங்கள் நீடித்தன. தி.மு.க.வுக்கு எதிராக மாணவர்கள் போராட்டம் தூண்டிவிடப்பட்டது. எஸ்.எஸ்.தென்னரசு, பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் ஆகியோர் துணையுடன் அவற்றை முறியடித்தார் அக்கினிராசு.

அப்படியான இக்கட்டான நேரத்தில் சென்னையில் நடந்த கூட்டத்தில் எம்.ஜி.ஆரைக் கட்சியில் இருந்து நீக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதை கொஞ்சம் ஒத்தி வைக்கலாம் என கலைஞர் சொன்னதும், அந்தத் தீர்மான நகலைக் கிழித்து எறிந்து கழகத்தின் கட்டுக்கோப்பை மட்டுமே விரும்புவதாக அறிவித்தார். இத்தனைக்கும் அவர் எம்.ஜி.ஆர் ரசிகராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. எம்.ஜி.ஆரா? அண்ணா கண்ட கழகமா? என்கிறபோது, கலைஞர் பக்கம் நின்று கட்சியை வலுப்படுத்தும் எஃகு இதயம் கொண்டவராக இருந்தார்.

**மதுரை மாவட்ட தி.மு.க செயலாளராகச் செயலாற்றி, தி.மு.க ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, மதுரை மாவட்ட மக்களுக்குப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தத் தூண்டுகோலாக இருந்தவர்.**

### மிசா சிறை வாசம்

ஜனநாயகத்தை நிலைநாட்டும் மிசா போராட்டத்தில் பங்கேற்றுச் சிறை சென்றார். 1977-இல் கருப்புக் கொடி காட்டும் போராட்டத்தில் சிறை என கழகத்தினரின் தியாக வாழ்க்கைக்கு அக்கினிராசும் சான்றாக நிற்கிறார்.

1978 ஆம் ஆண்டில், மதுரையில் ஒரு நிகழ்ச்சிக்காகச் செல்ல இருந்த கலைஞருக்குக் கருப்புக் கொடி காட்டப் போவதாக சிலர் அறிவித்தனர். அதையடுத்து ‘மதுரைக்கு வருகிறேன் உடன்பிறப்பே’ என கடிதம் எழுதிவிட்டு, மதுரைக்குப் புறப்பட்டார் கலைஞர். மதுரை ரயில் நிலையத்தில் இறங்க வேண்டிய அவரை, கொடை ரோடு நிலையத்தில் இருந்தே வாகன ஊர்வலமாகக் கொண்டு செல்கின்றனர். “கொடை ரோட்டில் எஸ்.எஸ்.தென்னரசு, தா.கிருஷ்ணன், சுப. தங்கவேலன், வைகோ, தங்கபாண்டியன், அக்கினிராசு ஆகியோர் காத்திருந்தனர் எனப் பதிவு செய்கிறார் கலைஞர். அதே ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதி மதுரையில் கழகத்தின் பொதுக்குழுவைக் கூட்டினார் கலைஞர். அதற்குப் பொறுப்பேற்றிருந்தவர் அக்கினிராசு.

இப்படி பெயருக்கு ஏற்ப, கழகச் செயல்பாடுகளில் தீவிரத்துடனும், தன்னலம் கருதாதும் செயல்பட்டவர் அக்கினிராசு. மதுரை மாவட்டக் கழக வளர்ச்சியில் மட்டுமல்ல, மக்களின் நம்பிக்கை பெற்றவராகவும் விளங்கியவர். மதுரை மாவட்ட தி.மு.க செயலாளராகச் செயலாற்றி, தி.மு.க ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, மதுரை மாவட்ட மக்களுக்குப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தத் தூண்டுகோலாக இருந்தவர்.

### அண்ணா விருது

அவரது கழகப் பணிக்காக 1994-ஆம் ஆண்டில் கழகத்தின் அண்ணா விருது வழங்கிப் பெருமை சேர்த்தார் கலைஞர். 1998 முதல் 2004 வரை மாநிலங்களவை உறுப்பினராக நியமித்து தமிழரின் குரலை, தமிழ்நாட்டின் பிரச்சினைகளை அக்கினிராசு மூலம் டெல்லியில் ஒலிக்க வைத்தார் கலைஞர்.

தி.மு.க, தொண்டர்களின் அன்பைப் பெற்றிருந்த அக்கினிராசு அவர்கள், 2020 ஆம் ஆண்டில், தனது 87 வது வயதில், வயது மூப்பு காரணமாக இயற்கை எய்தினார். கொரோனா காலம் என்பதால், கழகத்தினர் திரளாகக் கலந்து கொள்ள முடியவில்லை. ஆனால், 1967 ஆம் ஆண்டு அவர் சட்டமன்ற உறுப்பினரானபோது, ‘காஞ்சி’ இதழின் அட்டைப்படத்தில், 32 வயதில் சட்டமன்ற உறுப்பினரான அக்கினிராசு படத்தை அச்சிட்டிருந்தார் பேரறிஞர் அண்ணா. அந்தப் படம் கழகத்தினர் இதயத்தில் என்றென்றைக்கும் கல்வெட்டாக நிலைத்து நின்று அவர் புகழ் பரப்பும்.

...துடிக்கும்

## அரசியல் கச்சேரி பழகுவோம்!

சென்னையில் வரும் சனிக்கிழமை ‘பெரியாரும் கர்நாடக சங்கீதமும் – இசையின் அரசியல்’ என்கிற தலைப்பில் கருத்தரங்க நிகழ்ச்சி நடைபெற உள்ளது. அதையொட்டி எழுத்தாளர் தமிழ் காமராசன் பதிவில், “கர்நாடக இசைப் பாடகர் டி.எம்.கிருஷ்ணாவுக்கு ‘சங்கீத கலாநிதி’ விருது வழங்குவதில், சில பார்ப்பன சனாதன தரப்பினர் எதிர்ப்புக் குரல் எழுப்பியதை அறிவோம்.

மோடியைத் தொடர்ந்து விமர்சனம் செய்துகொண்டும், தந்தை பெரியாரைப் பாடும், இஸ்லாமிய – கிறிஸ்தவ மதங்களைப் போற்றிப் பாடும் கிருஷ்ணாவுக்கு விருது கொடுப்பது, ஆச்சார விரோதம் என்பது சனாதன தரப்பினர் வாதம்.

இசையிலும் சாதி ஆசாரத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணுகின்றனர். அதே நேரத்தில் கிருஷ்ணா செய்து வரும் இசைக் கலகத்துக்கு ஆதரவுக் குரல்களும் அதிகரித்துள்ளன. குறிப்பாக, கிருஷ்ணாவை ஆதரித்துப் பேசும் பார்ப்பன வகுப்பல்லாதவர்கள், இசையின் அரசியல் குறித்தும் அறிந்து கொள்ள வேண்டியது தேவையாக உள்ளது.

பார்ப்பனரல்லாதோரிடமிருந்து செவ்வியல் கலைகளை, கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம் என்கிற பெயர்களில் அபகரித்து, இந்து / இந்தியப் பெருமித அடையாளங்களாக மாற்றிய வரலாற்றையும் அரசியலையும் கிருஷ்ணா அவர்களே கலைஞராகவும் ஆய்வாளராகவும் இருந்து எழுதியுள்ளார்.


இன்று பார்ப்பன வகுப்பிலிருந்து சாதி முறையைக் கெடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ‘சாதி கெட்டுப் போய்விட்ட’ கிருஷ்ணா போன்ற சுதந்திரச் சிந்தனையாளர்கள் உறுதியாகவும் தெளிவாகவும் இருக்கும்போது, இதுபற்றி சிந்திக்கும் அனைவரும் இன்னும் ஒருபடி முன்னே போய், இசையின் அரசியலைப் பேச வேண்டும்” எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த நிகழ்ச்சி 30.03.2024 மாலை 6 மணிக்கு ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள கவிக்கோ மன்றத்தில் நடைபெற உள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



டி.ஜான்சன்






### அணியான தொண்டர்..!

1986-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் திருப்பரங்குன்றம் ஒன்றியத்தின் சார்பில் பங்கேற்று 49 நாட்கள் மதுரை மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டேன். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் மீது கொண்ட பற்றினால், அவர் மதுரை வரும்போதெல்லாம் தொண்டர் அணியில் நான் பணியாற்றுவது வழக்கம். 1989-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது மதுரை வந்திருந்தார்கள். பாண்டியன் ஹோட்டலில் இருந்த அவரை தொண்டர் அணித் தோழர்கள் புடை சூழ நானும் உடன் சென்று அழைத்து வந்த போது எடுத்த படம்.

**–டி.ஜான்சன், மாவட்ட தி.மு.க இலக்கிய அணி, மதுரை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### சிங்கத்தமிழன் சின்னச்சாமி!

1964-இல் இந்தியை ஆட்சிமொழியாக்கி அரியணை ஏற்றும் முன்னெடுப்புகளை எதிர்த்து, தமிழ்நாட்டில் மொழித் திணிப்புக்கு எதிரான களங்கள் சூடுபிடித்தன. 25 வயது காளையாக இருந்த கீழப்பழுவூர் சின்னச்சாமி 15 நாட்கள் சிறையிலிருந்துவிட்டு வெளியே வந்தவுடன், ‘தமிழே நீ வாழ என் உயிரைக் கொடுக்கிறேன்’ என தீக்குத் தன்னை இரையாக்கினார். ‘இனி சின்னச்சாமியை சிங்கத்தமிழன் சின்னச்சாமி’ என்றே அழைப்போம் என்றார் கலைஞர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

433

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131